* இவ்விரு உறுப்பினர்களும் முறையே '' 67 சதவீத இட ஒதுக்கீடு '' அல்லது '' பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் மக்கட் தொகை சதவீதத்திற்குச் சமமான இட ஒதுக்கீடு '' வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

மாநில சராசரி அளவிலிருந்து வேறுபட்டிருக்க வேண்டிய அளவு.

உறுப்பினர்களின் பெயர்கள்.	உறுப்பினர்களின் கருத்து.	குறிப்புரை.
(1)	(2)	(3)
1. திரு. ஜி. விஸ்வநாதன் ...	மாநில சராசரியே வரையறைப் புள்ளியாக இருக்க வேண்டும் அல்லது தற்போதுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல் அப்படியே தொடர்ந்து நீடிக்கின்ற வகையில் சதவித அளவு வரையறுக்கப்பட வேண்டும். மாநில சராசரியைவிட 10 சதவீதம் அதிகமாக அல்லது 10 சதவீதம் குறைவாக இருக்கலாம் என்று திரு. துரை இராமசாமி கருத்து தெரிவித்துள்ளார். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்குச் சலுகைகள் வழங்கும் விஷயத்தில் இந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினராயிருந்து மதம் மாறியவர் களையும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் களாகக் கருத வேண்டுமென திரு. மூர்த்தி தெரிவித்துள்ளார்.	தலைவரின் கருத்தை திரு. குழ. செல்லையா ஏற்றுக் கொண்டார். அலுவல் சார்பு உறுப்பினர்கள் இருவர் கருத்து தெரிவிக்கவில்லை.
2. திரு. வி. வி. சுவாமிநாதன், எம்.எல்.ஏ.		விவாதத்தில் கலந்து கொள்ளாதவர்கள்.
3. திரு. குமரி அனந்தன், எம்.எல்.ஏ.		
4. திரு. எம். ஜான் வின்சென்ட், எம்.எல்.ஏ.		
5. டாக்டர் கே. சமரசம், எம்.எல்.ஏ.		1. திரு. எஸ். ஆண்டித் தேவர்.
6. திருமதி செளந்தராகைலாசம்*		2. திரு. அன்பில் தர்மலிங்கம்.
7. திரு. ஜி. மூர்த்தி		3. திரு. லியாகத் அலிகான்.
8. திரு. துரை இராமசாமி, எம்.எல்.ஏ.*		4. திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரிப்.
9. திரு. ஐ. டி. ஜவஹர்ராஜ்		5. திரு. கோபால கிருஷ்ண யாதவ்.
10. திரு. எம். கே. பாலசுப்ர மணியன், இ.ஆ.ப. (ஓய்வு).		6. திரு. ப. நெடுமாறன் (பதவி விலகி விட்டார்).
11. திரு. எஸ். கே. பாலகிருஷ்ணன்		

---

* இந்த இரு உறுப்பினர்களும், ஏற்கனவே எழுத்து மூலமாக கொடுத்த ஒரு குறிப்பில் பின்வருமாறு தெரிவித்திருந்தனர் :—

மேலும் மாநில சராசரி அளவிலிருந்து வேறுபட்டிருக்க வேண்டிய அளவு 10 சதவீதமாக இருப்பது நியாயமானதும், முறையானதுமாகும் என்று நான் கருதுகிறேன். இந்த வரம்பை உயர்த்தினால், தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதோடுமட்டுமின்றி அனைத்து சாதிகளையும் முற்பட்ட வகுப்பாக அறிவிக்க வேண்டிய நிலையில் சென்று முடியும். இது சலுகைகள் அளிக்கப்பட வேண்டிய நிலையிலுள்ள உண்மையான பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு அநீதி இழைப்பதாகும்.

5. பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு.

உறுப்பினர்களின் பெயர்கள்.	உறுப்பினர்களின் கருத்து.	குறிப்புரை
(1)	(2)	(3)
1. திரு. ஜி. விஸ்வநாதன்	பிற்பட்ட நிலைவாரி தனித் தனி இட ஒதுக்கீட்டிற்கு அவசியம் இல்லை.	பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு அவசியம் என்று திரு மூர்த்தி கருதுகிறார். டாக்டர் சமரசம் தன் கருத்தை எழுத்து மூலமாக தெரிவிக்கவில்லை. அலுவல் சார்பு உறுப்பினர் இருவரும் தங்களின் கருத்தை தெரிவிக்கவில்லை.
2. திரு. வி. வி. சுவாமிநாதன், எம்.எல்.ஏ.		
3. திரு. குமரி அனந்தன், எம்.எல்.ஏ.		
4. திரு. எம். ஜான் வின்சென்ட், எம்.எல்.ஏ.		
5. திருமதி சௌந்தரா கைலாசம்*		
6. திரு. குழ. செல்லையா.		
7. திரு. துரை இராமசாமி, எம்.எல்.ஏ.		
8. திரு. ஐ. டி. ஜவஹர் ராஜ்		விவாதத்தில் கலந்து கொள்ளாதவர்கள்.
9. திரு. எம். கே. பாலசுப்பிர மணியன் இ.ஆ.ப. (ஓய்வு).		1. திரு. எஸ். ஆண்டித் தேவர்.
10. திரு. எஸ். கே. பாலகிருஷ்ணன்.		2. திரு. அன்பில் தருமலிங்கம்.
		3. திரு. கே. வியாகத் அலிகான்.
		4. திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரிப்.
		5. திரு. எஸ். கோபால கிருஷ்ண யாதவ்.
		6. திரு. ப. நெடுமாறன் பதவி விலகி விட்டார்.

---

* இந்த இரண்டு உறுப்பினர்களும் ஏற்கனவே எழுத்து மூலமாகக் கொடுத்திருந்த குறிப்பில் "குழு தெரிவித்துள்ள பிற்பட்ட நிலைவாரி தனித்தவி இட ஒதுக்கீட்டுக்கு அடிப்படையான கொள்கையை நானும் ஏற்றுக் கொள்கிறேன்" என்று தெரிவித்திருந்தனர்.

பின்வரும் தலைப்பு குறித்தும் விவாதிக்கப்பட்டது :—

4. அரசியலமைப்புச் சட்டத்தின் 16 (4)ஆம் பிரிவின்கீழ் இட ஒதுக்கீடு வழங்குவதற்கான தனி பட்டியல் தயாரித்தல்:—

உறுப்பினர்களின் பெயர்கள்.	உறுப்பினர்களின் கருத்து.	குறிப்புரை.
(1)	(2)	(3)
1. திரு. ஜி. விஸ்வநாதன் ..	15 (4), 16 (4) ஆகிய இரு பிரிவுகளுக்கும் பொதுவான ஒரே பட்டியல் போதுமானது.	திரு. துரை இராமசாமி, எம்.எல்.ஏ., திரு. ஐ. டி. ஜவஹர் ராஜ் ஆகியோர் வரையறுக்கப்பட்ட படிவத்தில் எழுத்து மூலமாக தங்களின் கருத்துக்களைத் தெரிவிக்கவில்லை. அலுவல் சார்பு உறுப்பினர்கள் இருவரும் கருத்து எதுவும் தெரிவிக்க வில்லை.
2. திரு. வி. வி. சுவாமிநாதன், எம்.எல்.ஏ.		
3. திரு. குமரி அனந்தன், எம்.எல்.ஏ.		
4. திரு. எம். ஜான் வின்சென்ட், எம்.எல்.ஏ.		
5. டாக்டர் கே. சமரசம், எம்.எல்.ஏ.		
6. திருமதி சௌந்தரா கைலாசம்.		
7. திரு. குழ. செல்லையா		
8. திரு. எம். கே. பாலசுப்ர மணியன், இ.ஆ.ப. (ஓய்வு).		
9. திரு. எஸ். கே. பாலகிருஷ்ணன்.		

விவாதத்தில்கலந்து கொள்ளாதவர்கள்

1. திரு. எஸ். ஆண்டித் தேவர்.
2. திரு. அன்பில் தர்மலிங்கம்.
3. திரு. கே. லியாகத் அலிகான்.
4. திரு. கே. எஸ். ஜி. ஸர்ஜா ஷெரிப்.
5. திரு. ஜி. மூர்த்தி.
6. திரு. எஸ். கோபால கிருஷ்ண யாதவ்.
7. திரு. ப.நெடுமாறன் (பதவி விலகி விட்டார்).

தலைவர் மேற்சொன்ன தலைப்புகள் குறித்த தமது கருத்துக்களை, சம்பந்தப்பட்ட அத்தியாயங்களிலும், உறுப்பினர்களுக்கு அனுப்பிய குறிப்புகளிலும் தெரிவித்துள்ளார். அதாவது :—

(1) மாநில சராசரி அளவிலிருந்து வேறுபட்டிருக்க வேண்டிய அளவு, பாலாஜி வழக்கில் கருத்து தெரிவிக்கப்பட்டபடி 50 சதவீதமாகவோ, மண்டல் குழு பின்பற்றிய 25 சதவீதமாகவோ இல்லாமல் குறைந்தது 10 சதவீதமாக இருக்க வேண்டும்.

(2) பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு 32 சதவீதமாக குறைக்கப்பட வேண்டும் ; அப்போதுதான் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்கள் ஆகியோருக்கான இட ஒதுக்கீடு உள்பட மொத்த ஒதுக்கீடு 50 சதவீதத்திற்கு மேற்படாமல் இருக்கும்.

(3) ஓரளவிற்குப் பிற்படுத்தப்பட்ட நிலையில் உள்ளவர்களின் உயர்வான திறமை, மிகப் பிற்பட்ட நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களைக் கீழே தள்ளி நசுக்கிவிடாமல் இருப்பதற்கு பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீட்டு முறை வேண்டும்.

(4) மாநில அரசுப் பணிகளில் போதிய பிரதிநிதித்துவம் பெறாத சமூக, கல்வி ரீதியாகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மட்டுமே அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் பதவி ஒதுக்கீடு செய்ய முடியும். ஆகையால், 15(4)ஆம் பிரிவின்கீழ் சமூக, கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்ட நிலையிலுள்ள அனைவரும் அப்படியே 16(4)ஆம் பிரிவின் கீழ் இட ஒதுக்கீட்டுச் சலுகை பெறத் தகுதியுடையவர்களாகிவிடமாட்டார்கள். இதில் பொதுவான பட்டியலைப் பின்பற்றுவது, அரசியலமைப்புச் சட்டத்தில் விதித் துறைகளை மீறிய செயலாகும். பணியாளர் குறித்து ஆய்வு நடத்தியதில், மாநில அரசுப் பணியில் போதிய சில சாதிகள்/வகுப்புகள் போதிய பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன எனத் தெரிய வரும்போது பொதுவான பட்டியல் வேண்டும் என்று கூறுவது முறையல்ல.

மாநில சராசரியை, வரையறைப் புள்ளியாக எடுத்துக் கொண்ட பிறகும் கூட, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தொடர்ந்து இடம் பெற தகுதிபெறாத சாதிகள்/வகுப்புகளுக்கு மூன்று கருணை மதிப்பெண்கள் (Grace bonus points) தொடுக்க வேண்டுமென்று விவாதத்தின் போது கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இத் தலைப்பு குறித்த விவாதத்தின் முடிவில் எந்த உறுப்பினரும் இக்கருத்தை எழுத்தமூலமாகத் தெரிவிக்கவில்லை. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நிலைமைகள் குறித்து தகவல் நிரப்பி, அத் தகவல்களின் அடிப்படையில் அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்வதற்காகத்தான் இக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. குழு நடத்திய புள்ளி விவரங்களின் அடிப்படையிலான ஆய்வின்படி பிற்படுத்தப்பட்ட வகுப்பினரென வகைப்படுத்தத் தகுதிபெறாத சில சாதிகள்/வகுப்புகளுக்குக் கருணை மதிப்பெண் அளிக்க இதன் ஆய்வு வரம்பின் கீழ் இக் குழுவிற்கு அதிகாரம் இல்லை. ஆகையால், உறுப்பினர்கள் எழுத்து மூலமாகக் கருத்துத் தெரிவித்திருந்தாலும் கூட, ஆய்வு வரம்பின்படி, இதற்கு உரிமை இல்லாதபோது இத்தகைய நடைமுறையை பின் பற்றுவது என்பது முறையற்ற, அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட செயலாகும்.

குழுவிலிருந்து விலகிவிட்ட ஓர் உறுப்பினர் நீங்கலாக, இக்குழுவில் தலைவர் உட்பட 20 உறுப்பினர்கள் இருந்தனர். பிற்படுத்தப்பட்ட வகுப்பிருக்கான இட ஒதுக்கீடு போன்ற நுண்ணிய, எளிதில் எதிர் விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு விஷயத்தில் உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்து நிலவியிருக்குமானால் அது உள்ளபடியே

பெருவியப்பிற்குரிய ஒன்றாக இருந்திருக்கும். எவ்வளவோ முயன்றும் கூட. இந்த நான்கு தலைப்புகளில் கருத்து வேறுபாடுகளைக் குறைக்க முடியவில்லை. கருத்து வேறுபாடுகளில் சில சட்ட சிக்கல்களும் உள்ளன. இந்த அறிக்கையைத் தயாரித்த இக் குழுவின் தலைவர் என்ற முறையில் நான் அனைத்து உறுப்பினர்களின் கருத்தையும் பெற எல்லா முயற்சிகளையும் எடுத்துள்ளேன். இப் பிரச்சினைகள் குறித்த அனைத்து அம்சங்களையும் பரிசீலித்து பொருத்தமானதொரு முடிவு எடுக்கும் பொறுப்பை அரசிடமே விட்டுவிடுகிறேன்.

கருத்து வேறுபாடு ஏற்பட்ட காரணத்தால், இரண்டு வகையான அட்டவணைகளைத் தயாரிக்க வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது. அதாவது (1) சமூக, கல்வி ரீதியான பிற்பட்ட நிலையைத் தீர்மானிக்க மாநில சராசரி அளவிலிருந்து வேறுபட்டிருக்கவேண்டிய அளவை 10 சதவீதம் என்று எடுத்துக் கொண்டு ஒரு அட்டவணையும், (2) உறுப்பினர்கள் விரும்பியபடி மாறில சராசரியையே வரையறைப் புள்ளியாக எடுத்துக் கொண்டு மற்றொரு அட்டவணையும் தயாரிக்கப்பட்டுள்ளது.

10 சதவீத வேறுபாட்டு அளவைப் பின்பற்றி 15(4)ஆம் பிரிவின் கீழ் இட ஒதுக்கீட்டுச் சலுகை வழங்குவதற்காகத் தயாரிக்கப்பட்ட அட்டவணைகள் வருமாறு :—

(i) ஆல்பா அட்டவணை .. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தொடர்ந்து இடம் பெறத் தகுதிபெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல்.

(ii) பீட்டா அட்டவணை .. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தொடர்ந்து இடம் பெறத் தகுதி பெறாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல்.

(iii) காமா அட்டவணை .. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென முறையீடு செய்து கொண்டிருந்து, அவ்வாறு சேர்க்கப்பட தகுதியுடையவையெனக் கண்டறியப்பட்ட முற்பட்ட வகுப்பினர்.

(iv) டெல்டா அட்டவணை .. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கவேண்டுமென முறையீடு செய்து கொண்டிருந்து, அவ்வாறு சேர்க்கப்படத் தகுதி பெறாதவரெனக் கண்டறியப்பட்ட முற்பட்ட வகுப்பினர்.

16(4)ஆம் பிரிவின் கீழ் அரசுப் பணிகளில் பதவி ஒதுக்கீடு செய்வதற்காக மாநில அரசுப் பணிகளில் பல்வேறு சாதிகள்/வகுப்புகள் பெற்றுள்ள தற்போதைய பிரதிநிதித்துவ அளவைக் கருத்தில் கொண்டு, தனிப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. போதிய பிரதிநிதித்துவம் என்பது அளவு (எண்ணிக்கை) வகையிலும், பதவித் தர வகையிலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான அட்டவணைகள் வருமாறு :—

16(4)ஆம் பிரிவின்படிக்கான அட்டவணைகள்.

(i) வேம்டா (1) அட்டவணை .. அளவு (எண்ணிக்கை) வகையில் இட ஒதுக்கீட்டிற்குத் தகுதிபெறும் தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்.

(ii) வேம்டா (2) அட்டவணை .. அளவு (எண்ணிக்கை) வகையில் இட ஒதுக்கீட்டிற்குத் தகுதிபெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட தகுதி பெற்றிருக்கும் தற்போதைய முற்பட்ட வகுப்பினர்.

(iii) மியூ (1) அட்டவணை .. பதவித் தர வகையில் இட ஒதுக்கீட்டிற்குத் தகுதி பெறும் தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்.

(iv) மியூ (2) அட்டவணை .. பதவித் தர வகையில் இட ஒதுக்கீட்டிற்குத் தகுதி பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க தகுதி பெற்றிருக்கும் தற்போதைய முற்பட்ட வகுப்பினர்.

(v) நியூ (1) அட்டவணை .. பதவி ஒதுக்கீட்டிற்குத் தகுதி பெறாத தற் போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்.

(vi) நியூ (2) அட்டவணை .. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்படுவதற்குத் தகுதி பெற்றிருந்து, ஆனால், பதவி ஒதுக்கீட்டிற்குத் தகுதி பெறாத தற்போதைய முற்பட்ட வகுப்பினர்.

(vii) சிக்மா அட்டவணை .. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கத் தகுதி பெற்று ஆனால், பதவி ஒதுக்கீட்டிற்குத் தகுதி உள்ளதா என்பதை அவர்களின் வேலைவாய்ப்பு குறித்த தகவல் களைச் சேகரித்த பிறகு அரசால் முடிவு செய்ய வேண்டிய நிலையுள்ள முற்பட்ட வகுப்பினர். முதல் கட்ட ஆய்வின் போது இவர்களுக்குத் தனிக் குறியீட்டெண் ஒதுக்கி இவர்களின் வேலைவாய்ப்பு குறித்த தகவல் களைக் குழுவால் திரட்ட முடியவில்லை.

சில உறுப்பினர்கள் விரும்பியபடி, சமூக, கல்வி ரீதியான பிற்பட்ட நிலையைத் தீர்மானிக்க, மாநில சராசரி அளவை அடிப்படையாகக் கொண்டு 15(4)ஆம் பிரிவின் கீழ் இட ஒதுக்கீடு பெறத் தகுதி பெறும் சாதிகளின் தனி அட்டவணைகள் தயாரிக்கப் பட்டுள்ளன.

அந்த அட்டவணைகள் வருமாறு :—

அ — பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தொடர்ந்து இடம்பெற தகுதி பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல்.

ஆ — பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தொடர்ந்து இடம்பெற தகுதி பெறாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல்.

இ — பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென முறை யிட்டிருந்து, அவ்வாறு சேர்க்கப்படத் தகுதி பெறுபவையெனக் கண்டறியப்பட்ட முற்பட்ட வகுப்பினர் பட்டியல்.

ஈ — பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென முறையிட்டிருந்து, ஆனால், அவ்வாறு சேர்க்கப்படத் தகுதி பெறாதவையெனக் கண்டறியப்பட்ட முற்பட்ட வகுப்பினர் பட்டியல்.

16(4)ஆம் பிரிவின் கீழ் பதவி ஒதுக்கீட்டிற்கென்று தனிப்பட்டியல் தயாரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது உறுப்பினர்களின் கருத்து. எனவே, 16(4)ஆம் பிரிவின் கீழ் பதவி ஒதுக்கீட்டிற்குத் தனிப்பட்டியல் தயாரிக்கவில்லை. குழு உறுப் பினர்கள் விரும்பியபடி, 15(4), 16(4) ஆகிய இரு பிரிவுகளின் மேும் இட ஒதுக்கீடு அளிப்பதற்கான பொதுவான பட்டியல் ஒன்று இருக்கும்.

ஜி. மூர்த்தி,
உறுப்பினர்.

பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு.

பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு அவசியமில்லை.

(ஒப்பம்) ————————,
(ஜி. மூர்த்தி)
உறுப்பினர்.

26—2—1985.

உறுப்பினர் திரு மூர்த்தி, 26—2—1985ஆம் நாளிட்ட தன்னுடைய குறிப்பில், தனது முந்தைய கருத்தை மாற்றிக் கொண்டு, பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு அவசியமில்லையென்று குறிப்பிட்டுள்ளார்.

'ஆ' அட்டவணையின்படி, 5 முதல் 9 மதிப்பெண்கள் வரை பெற்றுள்ள சாதிகள் அனைத்துமே சிறு சாதிகள் ஆகும். இந்த புள்ளிவிவரங்களை மட்டும் வைத்துக் கொண்டு அவர்களின் எதிர்காலத்தை முடிவு செய்யக்கூடாது. இச்சாதிகளை, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தொடர்ந்து வைத்திருக்கலாம் என்று குழு அரசுக்குப் பரிந்துரை செய்கிறது.

படகர் சாதியும் (குறியீட்டெண் 203) சிறு சாதியே. இச் சாதியினர் மலைகளில் வாழ்கின்றனர். இவர்களின் வாழ்க்கை நிலை, பழங்குடியினர்களின் வாழ்க்கை நிலையைப் போன்றே உள்ளது. இவர்கள் எவ்வளவு மதிப்பெண் பெற்றிருந்த போதிலும், இவர்களின் தனிவகை வாழ்க்கை நிலையைக் கருதி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தொடர்ந்து நீடிக்க அனுமதிக்கலாம் என்று குழு பரிந்துரை செய்கிறது.

(ஒப்பம்) ————————————

1. திரு ஜி. விஸ்வநாதன்
2. திரு வி. வி. சுவாமிநாதன், எம்.எல்.ஏ.
3. திரு குமரி அனந்தன், எம்.எல்.ஏ.
4. திரு எம். ஜான் வின்சென்ட், எம்.எல்.ஏ.
5. திரு கே. வியாகத் அலிகான்
6. டாக்டர் கே. சமரசம், எம்.எல்.ஏ.
7. திரும்தி சௌந்தரா கைலாசம்
8. திரு ஜி. மூர்த்தி
9. திரு எஸ். கோபாலகிருஷ்ண யாதவ்
10. திரு குழ. செல்லையா
11. திரு ஐ. டி. ஜவஹர் ராஜ்
12. திரு எம். கே. பாலசுப்பிரமணியன்
13. திரு, எஸ். கே. பாலகிருஷ்ணன்.

16—2—1985 ஆம் நாளன்று நடைபெற்ற குழு கூட்டத்தில் உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டபடி மாநில சராசரி அளவை, வரையறை புள்ளியாகக் கொண்டு, தற்போதைய பிற்படுத்தப்பட்ட முற்பட்ட சாதிகளிடையேயிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க தகுதிபெறும் சாதிகள், அவ்வாறு சேர்க்க தகுதிபெறாத சாதிகள் அடங்கிய அ. ஆ. இ. ஈ. அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டன.

26—2—1985 ஆம் நாளன்று நடைபெற்ற கூட்டத்தில், பின்வரும் உறுப்பினர்கள் ஒரு படி மேலே சென்று, 5 முதல் 9 மதிப்பெண்கள் வரை பெற்றுள்ள அனைத்து சாதிகளையும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று முறையிட்டுள்ளனர்.

1. திரு வி. வி. சுவாமிநாதன், எம். எல். ஏ.,
2. திரு எம். கே. பாலசுப்பிரமணியன்,
3. திரு ஜி. விஸ்வநாதன்,
4. திரு குமரி அனந்தன், எம். எல். ஏ.,
5. டாக்டர் கோ. சமரசம், எம். எல். ஏ.,
6. திரு எம். ஜான் வின்சென்ட், எம். எல். ஏ.,
7. திருமதி சௌந்தரா கைலாசம்,
8. திரு எஸ். கோபாலகிருஷ்ண யாதவ்,
9. திரு எஸ். கே. பாலகிருஷ்ணன்,
10. திரு குழ. செல்லையா,
11. திரு ஐ. டி. ஜவஹர் ராஜ்,
12. திரு ஜி. மூர்த்தி,
13. திரு வியாகத் அலிகான்,

அதன்படி, மாநில சராசரியை வரையறைப் புள்ளியாகக் கொண்டு தயாரிக்கப் பட்ட "ஆ" மற்றும் "ஈ" பட்டியல்களில் இடம் பெற்றுள்ள தகுதி பெறாத சாதிகள் குறித்து மேற்கொண்டும் ஆய்வு செய்யப்பட்டது. உறுப்பினர்கள் பரிந் துரைத்தபடி பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்ப்பதற்கு வேண்டிய 5 முதல் 9 வரை மதிப்பெண்கள் பெற்றிருந்த சாதிகள், "உ" மற்றும் "ஊ" அட்டவணைகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆதி திராவிடர்கள், பிற மதத்திற்கு மாறினால் கூட, அவர்கள் எந்த தலைமுறையில் மதம் மாறியிருந்தாலும் அவ்வாறு மதம் மாறு வதற்கு முன் அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களாக/ஆதி திராவிடர்களாக இருந்தார்கள் என்பதற்குத் தகுதி வாய்ந்த அதிகாரியிடமிருந்து சான்றிதழ் பெற்று வழங்குவார் களாயின் அவர்களுக்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு உரிய சலுகைளைத் தொடர்ந்து அளிக்கப்படும்.

ஒப்பம். . . . . .

1. திரு ஜி. விஸ்வநாதன்,
2. திரு வி. வி. சுவாமிநாதன், எம். எல். ஏ.,
3. திரு குமரி அனந்தன், எம். எல். ஏ.,
4. திரு எம். ஜான் வின்சென்ட், எம். எல். ஏ.,
5. திரு கே. லியாகத் அலிகான்,
6. டாக்டர் கோ. சமரசம், எம். எல். ஏ.,
7. திருமதி சௌந்தரா கைலாசம்,
8. திரு ஜீ. மூர்த்தி,
9. திரு எஸ். கோபாலகிருஷ்ணயாதவ்,
10. திரு குழ. செல்லையா,
11. திரு ஐ. டி. ஜவஹர் ராஜ்,
12. திரு எம். கே. பாலசுப்ரமணியன்,
13. திரு எஸ். கே. பாலகிருஷ்ணன்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆதி/திராவிடர்கள் பிற மதத்திற்கு **மாறினால்** கூட,—அவர்கள் எந்த தலைமுறையில் மதம் மாறியிருந்தாலும்—அவ்வாறு மதம் மாறுவதற்கு முன் அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களாக/ஆதி திராவிடர்களாக இருந்தார்கள் என்பதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து சான்றிதழ் பெற்று வழங்குவார்களாயின் அவர்களுக்குப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குரிய சலுகைளைத் தொடர்ந்து அளிக்க வேண்டுமென்று பின்வரும் உறுப்பினர்கள் 26—2—1985-ஆம் நாளன்று தெரிவித்தனர்:—

1. திரு ஜி. விஸ்வநாதன்,
2. திரு வி. வி. சுவாமிநாதன், எம். எல். ஏ.,
3. திரு குமரி அனந்தன், எம். எல். ஏ.,
4. திரு எம். ஜான் வின்சென்ட், எம். எல். ஏ.,
5. திரு கே. லியாகத் அலிகான்,
6. டாக்டர் கோ. சமரசம், எம். எல். ஏ.,
7. திருமதி சௌந்தரா கைலாசம்,
8. திரு ஜீ. மூர்த்தி,
9. திரு எஸ். கோபாலகிருஷ்ணயாதவ்,
10. திரு குழ. செல்லையா,
11. திரு ஐ. டி. ஜவஹர் ராஜ்,
12. திரு எம். கே. பாலசுப்ரமணியன்,
13. திரு எஸ். கே. பாலகிருஷ்ணன்.

இந்துக்களிடையேயிருந்து பிற மதத்திற்கு மாறுகிறவர்கள், இந்து மதத்தின் அந்தந்த சாதிகளிலிருந்து வேறுபட்ட ஒரு தனி வகை வகுப்பினராக இருப்பர். இத்தகைய மதமாற்றம் அண்மையில் நடைபெற்றதாயிருக்கலாம் அல்லது தலை முறைகளுக்கு முன்பு நடைபெற்றதாயிருக்கலாம். அவ்வாறு மதம் மாறியவர்களின் சமூக-கல்வி ரீதியான பிற்பட்ட நிலையை, தற்போது நிலவும் உண்மையான நிலவரத்தையொட்டி தனித்தனியாகத் தீர்மானிக்க வேண்டும். இக்குழு, தான் நடத்திய ஆய்வுகள், வரையறுத்த அளவு கோல்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, சமூக-கல்வி ரீதியான பிற்பட்ட நிலையைத் தீர்மானித்துள்ளது.

குறிப்பிட்ட சாதி/வகுப்பு சமூக அல்லது கல்வி ரீதியாக முற்பட்டதாக இருந்தால், அதையொத்த பெயரை உடைய வேறு ஒரு சாதி வேறு மதத்தைச் சார்ந்ததாக இருப்பதால் பிற்பட்ட வகுப்பாக இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக அக் குறிப்பிட்ட சாதி/வகுப்பையும் பிற்படுத்தப்பட்ட வகுப்பாக அல்லது நேர்மாறாக வகைப்படுத்த முடியாது. பல்வேறு சாதிகள்/வகுப்புகளின் சமூக-கல்வி ரீதியான முன்னேற்றம் ஒரே சீராக இருக்கமுடியாது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலக் குழு உறுப்பினர் திரு ஐ. டி. ஜவஹர் ராஜ் அளித்த தனிக்குறிப்பு.

இக்குறிப்பில் தெரிவித்துள்ள கருத்துக்களைத் தவிர, மற்றபடி, இக்குழுவின் பரிந்துரைகளைப் பொதுவாக நான் ஏற்றுக் கொள்கிறேன்.

இக்குழு கடந்த இரண்டாண்டுக்காலமாக கடுமையாக உழைத்து, தனக்கிட்ட பணியைச் செய்து முடித்துள்ளதென்றாலும், துரதிட்டவசமாக கள ஆய்வுகளின் பல்வேறு முடிவுகள், குழுவின் பதவிக்காலம் முடியக்கூடிய கடைசி கட்டத்தில்தான் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன. பிற்ரவரி மாத மத்தியில் தான் இரண்டாம் கட்ட ஆய்வுகளின் நகல்கள் எங்களுக்குக் கிடைத்தன. அதன்பிளைவாக, கள ஆய்வுகளையும் எனைய விவரங்களையும் நன்கு பரிசிலிக்க வேண்டுமென நான் விரும்பியிருந்தபோதிலும், கால அவகாசம் இன்மையால் அவ்வாறு செய்ய முடியவில்லை.

எனக்கு கிடைத்த நேரத்தில் நான் ஆய்வு செய்த சில வகுப்புகளைப் பொறுத்த மட்டில் அளிக்கப்பட்டுள்ள மக்கட் தொகை புள்ளிவிவரங்களை என்னால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. நம்முடைய 1984ஆம் ஆண்டு ஆய்வினிருந்து தெரியவந்த கிருத்துவர்களின் மக்கட் தொகை கணக்கு, 1981ஆம் ஆண்டு மக்கட் தொகைப் புள்ளி விவரங்களோடு ஒத்துப்போகவில்லை. முதல் கட்ட ஆய்வின்படி, கிருத்துவர்களின் மக்கட் தொகை, சுமார் 22 இலட்சமாகும். இரண்டாம் கட்ட ஆய்வின்படி சுமார் 29 இலட்சமாகும். முதல் கட்ட ஆய்வில், ஏறகெனவே பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்த சில கிருத்துவ சாதிகளுக்குக் (ஆதி திராவிட கிருத்துவர்கள் உட்பட) குறியீட்டெண்கள் கொடுக்கப்பட்டன. பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சாதிகளிலிருந்தும், முற்பட்ட சாதிகளிலிருந்தும் கிருத்துவராக மதம் மாறியவர்களுக்கும் (குறியீட்டெண்கள் 902, 903) எனைய சில பிரிவினர்களுக்கும் **கூட தனிக்** குறியீட்டெண்கள் கொடுக்கப்பட்டன. மேலும், கிறித்துவர்களின் **ஏதாவது** சில பிரிவுகள் விடுபட்டிருந்தால் அவர்களையும் கணக்கெடுப்பில் சேர்ப்பதற்காக '' கிருத்துவர்கள் '' என்ற பொதுவான பிரிவிற்கு தனியாக ஒரு குறியீட்டெண் (அதாவது 907) ஒதுக்கப்பட்டது. முதல் கட்ட ஆய்வில் கிருத்துவ நாடார்கள் சேர்க்கப்பட வில்லையாஎனாலும் குறியீட்டெண் 902-ன்கீழ் அவர்களின் மக்கட் தொகையும் சேர்ந்திருக்கும். ஆனால், இரண்டாம் கட்ட ஆய்வினிருந்து தெரிய வந்த கிருத்துவ நாடார்களின் மக்கட் தொகை புள்ளி விவரம் இதைவிட (குறியீட்டெண் 902) மிக அதிகமாக இருக்கிறது. கிருத்துவர்கள் குறித்த அத்தியாயத்தின் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளபடி, ஏனைய 49 சாதிகளுடனும் கிருத்துவர்கள் கணக்கெடுக்கப்பட்டனர் என்று பின்னர் சுட்டிக் காட்டப்பட்டது. இதையே வேறு விதமாகக் கூறுவதானால் அந்த 49 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் மக்கட் தொகையின், அந்தந்த சாதிகளி லிருந்து கிருத்துவ மதத்திற்கு மாறியவர்களும் அடங்குவர். இதனால், வேறு சில ஏற்றத் தாழ்வுகள் உருவாகக் கூடுமாயினும், தங்களிடையேயிருந்து கிருத்துவ மதத்திற்கு மாறியவர்களையும் அந்தந்த சாதிகள், தங்களின் ஒரு பிரிவினராக ஏற்றுக் கொள்கின்றன என்பதையே இது உணர்த்துகிறது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 340, 15 (4), 16(4)ஆம் பிரிவுகளின் கீழ் பிற்படுத்தப் பட்ட வகுப்பினரைத் தீர்மானிப்பதில், மதத்திற்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என்று நான் தொடக்கத்திலிருந்தே வாதிட்டு வந்துள்ளேன். அரியலமைப்புச் சட்ட ஆணை எண் 19/1950, தொடர் எண் 3-ஐக் கருத்திற் கொண்டு பார்க்கும்போது மட்டும் அரியலமைப்புச் சட்டத்தின் 341ஆம் பிரிவின்கீழ் ஆதி திராவிடர்களைப் பட்டியலிடும்போது மதம் கருத்தில் கொள்ளப்படுகிறது. அரியலமைப்புச் சட்டத்தின் 342ஆம் பிரிவின்கீழ் பல்வேறு பழங்குடியினர்களை பட்டியலிடுகையில் மதம் கருத்திற் கொள்ளப்படுவதில்லை. இதே போலவே, ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குச் **சலுகைகளை** நீட்டிக்கும்போது, மதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டக் கூடாது. அதேசமயம், இக்குழுவின் முன்சாட்சியம் அளித்த ஒவ்வொரு சாதியும், அந்தந்த சாதியி லிருந்து மதம் மாறியவர்களையும் அந்த சாதியினருக்கு நிகராகவே கருத வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். தென்னகத்தில், குறிப்பாக தமிழ் நாட்டில், கிருத்துவர் களிடையே சாதி முறை வழக்கில் இருக்கிறது என்பதை உச்ச நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட சாதியினர், அந்தச் சாதியிலிருந்து மதம் மாறுகிற வர்களையும் தங்களில் ஒருவராக ஏற்றுக் கொள்கிறார்களா என்பதைக் கொண்டு அவ்வாறு மதம் மாறியவர்களின் சாதியைத் தீர்மானிக்க வேண்டும் எனவும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேலும் பல சாதிச் சங்கங்களில் கிருத்துவர்களும் பொறுப்பாளர்களாக இருப்பதைக் காணலாம். பரிசுத்த நாடார், ஜார்ஜ்சாமி பிள்ளை, தேவதாஸ் தேவர் போன்ற பெயர்களே இக்கூற்றை நன்கு விளக்கும். நாடார் சாதியி லிருந்து மதம் மாறியவர்களுக்கும் ' பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ' அந்தஸ்தை நீட்டிக்க வேண்டுமென்று ' நாடார் சங்கம் ' தீவிரமாக வாதிட்டது. அச்சங்கத்தின்

கூற்றுப்படி, கிருத்துவ நாடார்கள் உட்பட நாடார்களின் மொத்த மக்கட் தொகை சுமார் 40 இலட்சம் ஆகும். 1953ஆம் ஆண்டில் சீக்கியர்களுக்கு அளித்ததுபோல, கிருத்துவ ஆதி திராவிடர்களுக்கும் ஆதி திராவிடர்களுக்கான அந்தஸ்தை நீட்டிக்க, அரசியலமைப்புச் சட்ட ஆணை எண் 19/1950 யைத் திருத்த வேண்டுமெனவும் மத்திய அரசு அமைத்த சிறுபான்மையினர் குழுவும், ஏனைய சில குழுக்களும் ஏற்கனவே பரிந்துரைத்துள்ளன. பேராசிரியர் மதுதந்தவதே, திருமதி அனந்தநாயகி போன்ற தேசிய தலைவர்களும் பெருந் திரளான ஏனைய பெருமக்களும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலக் குழுக்களின் முன் சாட்சியம் அளிக்கும்போது, இதே கருத்தைத் தான் வலியுறுத்தினர். கிருத்துவ, இஸ்லாமிய, பௌத்த சீக்கிய மதங்கள் மட்டுமன்றி, பண்டைய இந்து மதத்திலும் கூட சாதிப் பாகுபாடுகள் அங்கீகரிக்கப்படவில்லை. சாதி முறை என்பது இந்திய சமுதாயத்தினால் கற்பிக்கப்பட்ட ஒன்றாகும். இந்து அல்லாத பிறமத சாதிகளிலும் சாதி அமைப்புகள் இருப்பது தற்போதைய இந்திய சமுதாயத்தின் ஓர் இன்றியமையாக் கூறாக உள்ளது என்ற கருத்தை உறுதிப்படுத்து கிறது. மதுரை பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு மதுரைக் கல்லூரியின் சமூகவியல் துறைத் தலைவர் பேராசிரியர் பி. என். நடராஜன் அவர்கள் ஆய்வுரையை நிகழ்த்துகையில், '' வகுப்பு '' என்பதை சேர்க்க வேண்டுமென் பதற்காகத்தான் '' பிற்படுத்தப்பட்ட வகுப்புகள்'' என்ற சொற்றொடர் அரசியலமைப்புச் சட்டத்தில் வேண்டுமென்றே பயன்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். நாவிதர், வண்ணார், கள் இறக்குவோர், ஏனைய அசுத்தமான தொழில்களில் ஈடுபட்டுள்ள சாதிகளிலிருந்து கிருத்துவராக மதம் மாறியவர்களை, இவ்வளவு காலமாக முற்பட்ட வகுப்பினராகக் கருதி வந்தது மிகக் கொடுமை என்று நான் கருதுகிறேன்.

தற்போதைய தமிழ்நாடு அரசு இது தொடர்பாக சரியான முடிவெடுத்து இருக்கு வர்களின் சில பிரிவினர்களை பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்ந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கக் கூடிய ஒன்றாகும். கிருத்துவ நாடார் சாதியின் பிற்பட்ட நிலை குறித்து அரசு அண்மையில் விரிவாக ஆய்வு செய்துள்ளது. சென்னை உயர்நீதி மன்றமும் இம்முடிவை சரியென்று தீர்ப்பளித்துள்ளது.

நம்முடைய குழு, பல முற்பட்ட சாதிகளைப் பற்றி விசாரித்த போதிலும் இன்னும் அசுத்தமான தொழிலை மேற்கொண்டு வரும் சாதிகளிலிருந்து கிருத்துவர்களாக மாறியவர்கள் குறித்து ஆய்வு செய்யாதது துரதிட்டவசமானதாகும். நம்முடைய குழு நடத்திய ஆய்வு, கிருத்துவ நாவிதர் மற்றும் ஏனைய மதம் மாறியவர்களின் நிலை, அவர்களின் முந்தைய சாதிகளிலிருந்து எந்த அளவிற்கு வேறுபட்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டவில்லை. அத்தகைய சாதியினர், தங்களை இந்து மதத்தைச் சேர்ந்த தங்களுக்கு நிகரான சாதியினருடன் சேர்த்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று மனுக்கள் மூலமும், வாய்மொழி சாட்சியம் மூலமும் குழுவைக் கேட்டுக் கொண்டிருந்த போதிலும், அவர் களின் நிலை, பிரச்சனைகள் குறித்து ஆய்வு செய்ய எவ்வித முயற்சியும் மேற்கொள்ள படவில்லை.

ஆகையால், இந்துக்களல்லாத சாதிகள் தொடர்பாக மண்டல் குழு வகுத்துள்ள அளவு கோல்களையே இவ்வகையிலருக்கும் பின்பற்ற வேண்டுமென நான் பரிந்துரை செய்கிறேன். இந்த அளவு கோல்களின்படி, இந்துக்களல்லாத ஏனைய பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்கள் என்பதில்

(i) இந்து மதம் அல்லாத பிற மதங்களுக்கு மாறிய அனைத்து நிண்டதத்காத வர்கள் ;

(ii) பரம்பரைத் தொழிலின் பெயரையே சாதிப் பெயராகி கொண்டுள்ள வர்கள் இந்து மதத்தைச் சேர்ந்த இதே சாதியினர், ஏனைய இந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் இடம் பெற்றிருக்கும்போது.

குழு தயாரித்தபடியான, முஸ்லிம், சவராஷ்டிரா மற்றும் ஏனைய பல்வேறு சாதிகளின் மக்கட் தொகைப் புள்ளி விவரங்கள் குறித்து ஐயம் தெரிவிக்கப்பட்டுள்ளன. சாதிகளின் மக்கட் தொகைப் பற்றி பல்வேறு கணக்கெடுக்கப்பட்டுள்ளன. தேர்ந்து ஆய்வில் 0.96 சதவீதக் குடும்பங்கள் மட்டுமே கணக்கெடுக்கப்பட்டுள்ளன. தேர்ந்து ஆய்வில் 0.96 சதவீதக் குடும்பங்களில் ஏற்றத் தாழ்வுகள் காரணமாக, புள்ளி விவர தெடுக்கப்பட்ட மாதிரிகளில் காணப்படும் சமூகவியல் ஆய்வில் மாறுபாடுகள் முறையை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் சமூகவியல் ஆய்வின் அடிப்படையிலான இருக்கத்தான் செய்யும். சில இனங்களில், சமூக—கல்வி கள ஆய்வின் அடிப்படையிலான முடிவுகள், தற்போதைய சமூக உண்மை நிலைக்கு முரணாக உள்ளன என்று வல்லுநர் முடிவுகள், தற்போதைய சமூக உண்மை நிலைக்கு முரணாக உள்ளன என்று வல்லுநர் களே ஒப்புக் கொண்டுள்ளனர். சமூக—கல்வி நிலை ஆய்வை மட்டும் கருத்தில் எடுத்துக்கொண்டு, நீண்டகாலத் தாழ்த்தப்பட்ட சாதிகளை பிற்படுத்தப்பட்ட மீனவர்கள், கள் இறக்குவோர், படகர் ஆகிய சாதிகளிலிருந்து மதம் மாறியவர்கள் போன்ற தாழ்த்தப்பட்ட சாதிகளை பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து நீக்கிவிட முடியாது. அதாவது, சமூக—கல்வி ஆய்வை மட்டும் வைத்துக் கொண்டு ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களைக் கண்டறிய முடியாது. பெரும்பாலான மக்களின் சாட்சியங்களிலிருந்தும், ஏனைய வாயிலாகவும்

விருத்தும், பெறப்பட்டு குழுவிடம் உள்ள (அரசிடம் உள்ள) ஏனைய தகவல்களையும் பரிசிலிக்க வேண்டியிருக்கலாம். பிறப்பு—இறப்பு குறித்த புள்ளி விவரங்களும் அரசிடம் உள்ளன. கள ஆய்வுகள் சரியான முறையில் நடைப்பெற்றுள்ளன என்பதற்கு உத்தர வாதம் இல்லாத நிலையில், அந்த கள ஆய்வுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களைக் கண்டறிவதை நான் எதிர்க்கிறேன். '' படகர் '' '' கிருத்துவ ஆதி திராவிடர் '' போன்ற சாதிகளுக்கு இக் குழுவும் அரசும் சிறப்பு மதிப்பெண்கள் கொடுக்கலாம்.

சமூக—கல்வி ரீதியான பிற்பட்ட நிலையை மதிப்பிடுவது, மதிப்பெண்கள் வழங்கு வதற்காக அளவு கோல்கள் வகுப்பது அகியவற்றைப் பொறுத்தமட்டில், சமூக ரீதியான பிற்பட்ட நிலைக்கு '' ஏழ்மையை'' ஓர் அளவு கோலாகக் கொண்டதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. ''ஏழ்மை'' காரணமாக சமூக மற்றும் கல்வி ரீதியான பிற்பட்ட நிலை இரண்டுமே உருவாகக் கூடும். ஆகையால், '' ஏழ்மை '' என்பதன்கீழ் மதிப்பெண்களைப் பெறும் ஒரு சாதி, அவசியமான குறைந்த பட்ச மதிப்பெண்களைத் தவிர, 'சமூக' மற்றும் கல்வி அளவு கோல்களில் தனியாக குறைந்த பட்ச மதிப்பெண்ணைப் பெற வேண்டி அவசியமில்லை. மண்டல் குழு இவ்வாறுதான் செய்தது. ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்பவர்கள் பிற்பட்ட நிலையில் ஆதி திராவிடர்களுக்கு நிகரானவர்களாக (நீண்டகாலமையைத் தவிர) இருக்க வேண்டுமென நீதிமன்றங்கள் நிர்ப்பனித்துள்ளன. தாய்மைக் கேடான அல்லது அசுத்தமான அல்லது இழிவான பரம்பரைத் தொழிலை மேற்கொண்டு வருபவர்களுக்குச் சிறப்பு மதிப்பெண்கள் வழங்கப்பட வேண்டியுள்ளது.

மூன்று தலைப்புகளில் வரும் அளவுகோல்கள் மதிப்பெண்கள் பின்வருமாறு இருக்கலாம் :—

(i) சமூக ரீதியான பிற்பட்ட நிலை :

1. சமூக ரீதியாகப் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சாதி/வகுப்பு.

2. பரம்பரையான அசுத்தமான தொழில் :— சலவை செய்தல், துப்புரவுத் தொழில், கள் இறக்குதல், முடி திருத்தல், மீன் பிடித்தல், தோலுரித்தல் முதலிய இழிவான பரம்பரைத் தொழில்களைச் செய்துவரும் சாதி/வகுப்பு.

3. உடலுழைப்பு.—பிழைப்புக்கு உடலுழைப்பு/மகளிர் உழைப்பு/சிறார் உழைப்பையே பெரிதும் நம்பியிருக்கிற மாநில சராசரி அளவுக்குக் குறையாத சதவீதத்தைக் கொண்ட சாதி/வகுப்பு.

(ii) கல்வி ரீதியான பிற்பட்ட நிலை :

1. மெட்ரிகுலேஷன் தேறியவர்கள்/மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த வர்களின் விகிதாச்சாரம் மாநிலச் சராசரி அளவிற்கு மேற்படாத சாதி/வகுப்பு.

2. தொழிற் பட்டப் படிப்பு (மருத்துவம், பொறியியல், கால்நடை மருத்துவம், சட்டம்) முடித்தவர்களின் (ஏதேனும் இரண்டு) விகிதாச்சாரம் மாநில சராசரி அளவிற்கு மேற்படாத சாதி/வகுப்பு.

3. தற்குறிகள்/பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தியவர்களின் சதவீதம் மாநில சராசரி அளவை விடக் குறைவாக இல்லாத சாதி/வகுப்பு.

(iii) ஏழ்மை :

கூரை வீடுகளில் வாழும் குடும்பங்களின் சதவீதம் மாநில சராசரி அளவை விட குறைவாக இல்லாத சாதி/வகுப்பு.

அல்லது

வாழ்க்கைச் செலவுக் கடன்களை பெற்றுள்ள குடும்பங்களின் சதவீதம் மாநில சராசரி அளவைவிட குறைவாக இல்லாத சாதி/வகுப்பு.

மேற்சொன்ன மூன்று தொகுதிகளும் சம முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல. ஆகையால், அவை ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக கூடுதல் மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு :—

ஒவ்வோர் அளவு கோலுக்கும் 3 மதிப்பெண்கள் என்ற வீதத்தில் சமூக ரீதியான பிற்பட்ட நிலைக்கு ஒன்பது மதிப்பெண்கள் வழங்கப்பட வேண்டும்.

ஒவ்வோர் அளவு கோலுக்கும் 2 மதிப்பெண்கள் என்ற வீதத்தில் கல்வி ரீதியான பிற்பட்ட நிலைக்கு ஆறு மதிப்பெண்கள் வழங்கப்பட வேண்டும்.

ஏழ்மை அளவுகோலுக்கு மூன்று மதிப்பெண்கள் வழங்கப்பட வேண்டும்.

மொத்த : மதிப்பெண்கள் 18 ஆகும். மேற்சொன்ன அளவுகோலை பின்பற்றி கணக்கிடுகையில் 50 சதவீதம் (9) அல்லது அதற்குமேல் மதிப்பெண் பெறக்கூடிய சாதி/வகுப்புகள் அனைத்தையும், சமூக, கல்வி ரீதியாகப் பிற்படுத்தப்பட்டவையாக வகைப்படுத்த வேண்டும்.

மாற்றப்பட்ட பகுதிகள் :

மாற்றப்பட்ட பகுதிகளைப் பொறுத்தமட்டில், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் தனிப் பட்டியல் ஒன்று உள்ளது. அப் பகுதிகளில் நிலவும் நிலைமைகள், மாநிலத்தில் எஞ்சிய பகுதிகளின்றும் வேறுபட்டவை. மேலும், அவர்கள், மாநிலங்கள் சீரமைப்பிற்கு முன் என்னென்ன சலுகைகளை அனுபவித்து வந்தனரோ அதே சலுகைகளைத் தொடர்ந்து பெற்று வருகின்றனர். ஆகையால், அவர்களுக்குப் பாதகம் ஏற்படும் வகையில் இந்த சலுகைகளை திரும்பப் பெற முடியாது. ஆகையால், அந்தப் பட்டியலிலிருந்து எந்த சாதியையும் நீக்க வேண்டியதில்லை.

இக் குழுவில் உறுப்பினராகப் பணியாற்ற வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய கருத்துக்களுக்கும் கனிவுடனும் அக்கறையுடனும் செவிமடுத்த குழுவின் தலைவர் திரு. அம்பாசங்கர் அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக. என்னுடைய பணியில் ஆர்வமுடன் ஒத்துழைத்து அன்பு காட்டிய சக உறுப்பினர்களுக்கும் என் நன்றி.

ஜ. டி. ஜவஹர்ராஜ்

பிற்படுத்தப்பட்டோர நலர் குழு உறுப்பினர் திரு. ஜ.டி. ஜவஹர்ராஜ் அளித்த குறிப்பு மீதான சுருக்துரை.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு கடும் முயற்சியின்பேரில் மிகக் குறுகிய காலத்தில் ஏராளமான புள்ளி விவரங்களைத் திரட்டி மின்னணுக் கணக்கீட்டுப் பொறிகள் மூலம் 47 அட்டவணைகள் தயாரித்தது. புள்ளியல் துறை ஆணையரிடமிருந்து அட்டவணைகள் வந்து சேர்ந்தவுடன் குழு அவற்றை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்தது. முதல் கட்ட ஆய்வு தொடர்பான அட்டவணைகள் 8—11—1984 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இரண்டாம் கட்ட ஆய்வு தொடர்பான அட்டவணைகள் 22—1—1985, 31—1—1985, 5—2—1985, 14—2—1985 ஆகிய நாட்களில் அனுப்பி வைக்கப்பட்டன.

வீடு வீடாகச் சென்று முழுமையான கணக்கெடுப்பு நடத்தி மக்கட் தொகைப் புள்ளி விவரங்கள் திரட்டப்பட்டன. குழுவின் ஆய்வுகள் அனைத்துமே எவ்வித பாரபட்சத்திற்கும் இடமின்றி, முறையாக நடத்தப்பட்டன. மக்கட் தொகைப் புள்ளி விவரங்கள் 8—11—1984 அன்றே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டன. குழு, இப் புள்ளி விவரங்களை ஏற்றுக் கொண்டு அதனடிப்படையில் பல முடிவுகளை மேற்கொண்டுள்ளது. அப்படியிருக்க, இந்த நிலையில் அப்புள்ளி விவரங்கள் தவறு என்று கூறுவது நியாயமல்ல.

முதல் கட்ட ஆய்வில், தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் இடம் பெற்றுள்ள எல்லாச் சாதிகளுக்கும் தனித் தனி குறியீட்டெண்கள் ஒதுக்கப்பட்டன. கிறிஸ்துவர்களில் சில பிரிவினர் ஏற்கனவே பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தனர். ஆய்வு வரம்பின்படி, இக் குழு, சமூக நலத் துறையின் 1—2—1980ஆம் நாளிட்ட 72ஆம் அரசாணையில் ஏற்பளிக்கப்பட்டு தற்போது செயலில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலை ஆய்வு செய்ய வேண்டுமாகையால் இப் பிரிவினருக்குத் தனித் தனி குறியீட்டெண்கள் ஒதுக்கப்பட்டன. பிற கிறிஸ்தவர்கள் அனைவருமே முற்பட்ட வகுப்பினரோடு சேர்க்கப்பட்டனர். பின்னர் முதல் கட்ட ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அரசு, கிறிஸ்துவ நாடார், கிறிஸ்துவ சாணார், கிறிஸ்துவ ரொமணி ஆகிய சாதிகளைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்த்து, சமூக நலத் துறையின் 5—8—1983ஆம் நாளிட்ட 2069ஆம் எண் அரசாணையைப் பிறப்பித்தது. எனவே, இரண்டாம் கட்ட எடுத்துச்சை ஒரு சதவீத மாதிரி ஆய்வில் இச் சாதிகளுக்குத் தனியாகக் குறியீட்டெண்கள் ஒதுக்கப்பட்டன. முதல் கட்ட ஆய்வு நடைபெற்ற காலத்தில், கிறிஸ்துவ நாடார், கிறிஸ்தவ சாணார், கிறிஸ்துவ ரொமணி ஆகிய சாதிகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. எனவே, அந்த ஆய்வில் அச் சாதிகள் தனியாகக் கணக்கெடுக்கப் படவில்லை.

இந்து மதத்தைச் சேர்ந்த பல்வேறு சாதிகளிலிருந்து கிறிஸ்துவ மதத்திற்கு மாறியவர்கள், அந்தந்தச் சாதிகளில் ஒரு தனிப் பிரிவினராக உள்ளனர். இந்த மத மாற்றம், அண்மையில் நிகழ்ந்ததாகவும் இருக்கலாம். பல தலைமுறைகளுக்கு முன்னர் நடைபெற்றதாகவும் இருக்கலாம். இவ்வாறு மதம் மாறியவர்களின் சமூக, கல்வி ரீதியான பிற்பட்ட நிலைகளை, தற்போது நிலவும் உண்மை நிலைகளையொட்டித் தான் முடிவு செய்ய வேண்டுமேயல்லாது, அவர்களின் மூதாதையர் எந்தவகைப்பாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள் என்பதைக் கொண்டு முடிவு செய்யக் கூடாது. அவ்வாறு செய்வது நியாயமல்ல, நீதிமன்றங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. சாதிமுறை இந்துக்களிடையே மட்டும் நிலவுகின்ற சாபக் கேடாகக் கருதப்படுகிறது. இம் முறை கிறிஸ்தவர்களிடையேயும் முஸ்லீம்களிடையேயும் கிடையாது. மதம் மாறியவர்களின் சமூக ரீதியான பிற்பட்ட நிலையும் இந்து மதத்தைச் சேர்ந்த நிகரான சாதி

யினரின் சமூக ரீதியான பிற்பட்ட நிலையும் ஒன்றாக இருக்க முடியாது. அதுபோலவே, மதம் மாறியவர்களுக்கு நல்ல, மேலான கல்வி வாய்ப்புகள் கிட்டுவதால் அவர்கள் கல்வி ரீதியாகவும் முன்னேறியவர்களாகவே இருப்பர்.

இக் குழு நடத்தியதைப் போல, மண்டல் குழு விரிவான, நுணுக்கமான ஆய்வுகள் நடத்தவில்லையாதலால், இந்து அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைக் கண்டறிய அக் குழு பின்பற்றிய முறை மிக நேர்த்தியாக இல்லாவிட்டாலும் காரியத்திற்குப் பயன்படக் கூடிய அளவுகோல்களை நாம் பின்பற்ற முடியாது. 65 இலட்சம் மக்களை உள்ளடக்கிய ஒரு சதவத் ஆய்வைக்கூட மண்டல் குழு மிகப் பெரிய ஆய்வாகக் கருதியது. அதற்குப் பதிலாக, ஒவ்வொரு மாவட்டத்திலும், இரண்டு கிராமங்களிலும் ஒரு நகர்ப்புற வட்டாரத்திலும் 100 சதவத் ஆய்வு நடத்தினாலே போதுமென அக் குழு முடிவு செய்தது. அக் குழு, நுணுக்கமாக, பரந்த அளவில் ஆய்வு நடத்தாத காரணத்தால் சமூக, கல்வி ரீதியான பிற்பட்ட நிலையைத் தீர்மானிக்க மேலே குறிப்பிட்டது மிக நேர்த்தியானவையாக இல்லாவிட்டாலும் காரியத்திற்குப் பயன்படக் கூடிய அளவுகோல்களையே பின்பற்ற வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது.

மக்கட் தொகைப் புள்ளி விவரங்கள் தமக்குப் பாதகமாக உள்ளன என்று தெரிய வருகின்ற இந்த நிலையில் எந்த ஒரு சாதி/வகுப்புப் புள்ளி விவரங்கள் சரியில்லை என்று கூறலாம். ஏற்கனவே குறிப்பிட்டதைப் போலவே, குழுவின் ஆய்வுகள் எல்லாமே பாரபட்சமின்றி நடத்தப்பட்டன. இந்த ஆய்வுகள் மூலம் கிடைத்த மொத்த மக்கட் தொகைப் புள்ளி விவரங்களுக்கும் மக்கட் தொகைக் கணக்கெடுப்புத் துறையின் மக்கட் தொகைப் புள்ளி விவரங்களுக்கும் இடையே பெருத்த வேறுபாடு காணப்படவில்லை. இதையே முதல் கட்ட ஆய்வு சரியென்பதற்கான நிருபணமாகக் கொள்ளலாம்.

1981ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, நமது மாநிலத்தின் மொத்த மக்கட் தொகை 48,408,077 ஆகும். இக் குழு நடத்திய முதல் கட்ட ஆய்வின்படி, மக்கட் தொகை 49,990,743 ஆகும்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நிலைமைகள் குறித்துத் தகவல்கள் திரட்டி அத் தகவல்களின் அடிப்படையிலும் அறிவியல் பூர்வமாகவும் ஆய்வு நடத்துவதற்காகவே இக் குழு அமைக்கப்பட்டது. இதற்காகவே, இக் குழு பல்வேறு ஆய்வுகளை நடத்தியது. புள்ளி விவர ஆய்வின் அடிப்படையில் பார்க்கும்போது பிற்படுத்தப்பட்டவையென வகைப்படுத்தத் தகுதி பெறாத சில சாதி/வகுப்புகளுக்கு கருணை மதிப்பெண்கள் கொடுக்க குழுவுக்கு அதிகாரம் இல்லை. குழு அவ்வாறு செய்திருக்குமானால் ஒரு சாதி/வகுப்புக்கும் மற்றொரு சாதி/வகுப்புக்குமிடையே மனக் கசப்பை ஏற்படுத்தக் கூடிய பாகுபாடு காட்டிய குற்றத்திற்குள்ளாகியிருக்கும். சமூக, கல்வி ரீதியான பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல் தயாரிக்கப்பட்ட பின்னர், 19ஆம் தேதியன்று தான் முதன் முறையாக, உறுப்பினர்கள் கருணை மதிப்பெண் வழங்கும் யோசனையையே தெரிவித்தனர். சமூக, கல்வி ரீதியான பிற்பட்ட நிலையைத் தீர்மானிப்பதற்கான அளவுகோல்களை உறுப்பினர்களின் பரிசீலனைக்கு வைத்தபோது, அவற்றை மாற்றியமைக்க வேண்டும் என்று எந்த உறுப்பினருமே கூறவில்லை. மாறாக 22—1—1985 வாக்கிலேயே அவற்றை ஏற்றுக் கொண்டு ஒப்புதலும் அளித்தனர். இந்த நிலையில் மாறுதல் செய்ய வேண்டும் என்று கூறுவது காலங் கடந்த யோசனையாகும். அப்படியே மாற்றம் செய்தால், அது சில சாதி/வகுப்புகளுக்கு சாதகமாகவும் வேறு சில சாதி/வகுப்புகளுக்குப் பாதகமாகவும் அமையக் கூடும். அதன் காரணமாக, குழு, சில சாதிகளுக்குச் சாதகமாகவும் வேறு சில சாதிகளுக்குப் பாதகமாகவும் புள்ளி விவரங்களை மாற்றி விட்டது என்னும் விமர்சனத்திற்கு ஆளாக வேண்டியிருக்கும்.

ஜி. மூர்த்தி :

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பிற்பட்ட நிலை ஆதி திராவிடரின் பிற்பட்ட நிலையோடு ஒப்பிடத்தக்க அளவில் இருக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கிறிஸ்துவ ஆதி திராவிடர்கள், ஆதி திராவிடர்களோடு ஒப்பிடத் தக்கவர்கள் என்பதோடு மட்டுமல்லாமல் அவர்களில் ஓர் அங்கமாகவே விளங்குகிறார்கள். இக் குழுவின் அ/வ்வின்படி, அவர்களுக்கு, சமூக ரீதியான பிற்பட்ட நிலை என்பதன்கீழ் 9 மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டன.

கல்வி ஆய்வின் முடிவுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கல்வி ரீதியான பிற்பட்ட நிலையைத் தீர்மானிக்க முடியாது. கடந்த இரண்டு ஆண்டுகளின் கிறித்துவ ஆதி திராவிடர்களின் கல்வி ரீதியான பிற்பட்ட நிலை தொடர்பாக நாம் ஏராளமான சாட்சியங்களைத் திரட்டியுள்ளோம். எந்தவொரு சமூகவியல் ஆய்விலுமே தவறுகளும் பிழைகளும் ஏற்பட்டுத்தான் செய்யும்.

எனவே, ஏனைய சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டும் இது தொடர்பாக குழு உறுப்பினர்களுக்குச் சொந்த முறையில் தெரிந்த விவரங்களின் அடிப்படையிலும் அரசிடமும் குழுவிடமும் உள்ள புள்ளி விவரங்களைக் கொண்டும் கிறிஸ்தவ ஆதி திராவிடர்களுக்கு சிறப்பு மதிப்பெண்கள் வழங்கி, அச் சாதியை தொடர்ந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் இடம் பெறச் செய்ய வேண்டும். இல்லையெனில், ஏற்றத்தாழ்வானதொரு நிலை உருவெடுத்து, பல சாதிகளின் பிற்பட்ட நிலையை மதிப்பிட்டறிய கடைப் பிடிக்கப்பட்ட அணுகுமுறையே ஆட்சேபத்துக்குரியதாகி விடும்.

கிறிஸ்துவராக மதம் மாறிய ஆதி திராவிடர், ஆதி திராவிடர்களோடு ஒப்பிடத் தக்கவர்களே என்றும், எனவே கல்வி ஆய்வின் அடிப்படையில் அவர்கள் பிற்படுத்தப் பட்ட வகுப்பினராக வகைப்படுத்தத் தகுதியற்றவர்களாக்கிவிடக் கூடாது என்றும் திரு. ஜி. மூர்த்தி, 26—2—1985ஆம் நாளிட்ட தனது குறிப்பில் தெரிவித்துள்ளார். சமூக மற்றும் கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்டவர்கள் மட்டுமே 15 (4) பிரிவின்கீழ் இட ஒதுக்கீடு பெறத் தகுதியுடையவராவர் ; சமூக ரீதியாகவோ அல்லது கல்வி ரீதியாகவோ மட்டும் பிற்படுத்தப்பட்டவர்கள் அச் சலுகை பெறத் தகுதியுடையவர் களல்லர். கிறிஸ்துவராக மதம் மாறிய ஆதி திராவிடர் (குறியீட்டெண் 901) உட்பட தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் இடம் பெற்றுள்ள அனைத்துச் சாதிகளையும் பொறுத்தவரையில், முதற் கட்ட 100 சதவீத ஆய்வின் அடிப்படையில் கல்வி ரீதியான பிற்பட்ட நிலை தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த வகுப்பினருக்கு கல்வி ரீதியான பிற்பட்ட நிலை என்பதன்கீழ் 2 கருணை அல்லது மிகை மதிப்பெண்கள் வழங்கி, கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக அறிவிப்பது முறையல்ல. அவ்வாறு செய்ய குழுவுக்கு அதிகாரமும் இல்லை. இவ்வாறு செய்வது சாதிகளுக்கிடையே கசப்புணர்வை எற்படுத்திவிடும். எனவே இது ஆட்சேபகரமான செயலாகும்.

அனுப்புநர்

கா. லியாகத் அலிகான்,
மெம்பர்,
இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு,
சென்னை-18.

பெறுநர்

திரு. சேர்மன் அவர்கள்,
இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு,
சென்னை.

அன்புடையீர்,

வணக்கம். ஏற்கனவே பிற்பட்டோர் பட்டியலில் உள்ள முஸ்லீம்களை அப்படியே பிற்பட்டோராக (BC) கொண்டு,

ஷேக்-அன்சார்-சையத் ஆகிய முற்பட்டோர் பட்டியலை பிற்பட்டோராக மாற்றியும் உள்ள கமிஷனின் பரிந்துரைக்கு எனது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். சமூக நிலையிலும், கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின் தங்கி இருப்பினும், தற்போது முற்பட்டோர் பட்டியலில் உள்ள தாவுத்-காக்கா, பகுர் ஆகிய பிரிவுகளையாவது, பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமாய் அன்புடன் பரிந்துரைக்கின்றேன்.

மாண்புமிகு தலைவர் அவர்கள் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

(கா. லியாகத் அலிகான்)
உறுப்பினர்,
தமிழ்நாடு இரண்டாவது
பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு.

உறுப்பினர் திரு. லியாகத் அலிகான் அவர்கள், முஸ்லீம் இனத்தைச் சேர்ந்த மேற்கண்ட மூன்று பிரிவுகளையும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என 26—2—1985ஆம் நாளிட்ட தனது குறிப்பில் யோசனை தெரிவித்துள்ளார்:—

1. தாவுத்
2. காக்கா
3. மீர்

இவர்கள் தற்போது முற்பட்ட வகுப்பினர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். அனைத்து மதங்களையும் சேர்ந்த முற்பட்ட சாதி/வகுப்பைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தவரையில், தங்களைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற முறையீடு செய்து கொண்டவர்களின் கோரிக்கையை மட்டுமே குழு பரிசீலித்தது. இம் மூன்று பிரிவுகளும் அவ்வாறு கோரிக்கை விடுக்கவில்லை. எனவே, அவை தொடர்ந்து தற்போதைய முற்பட்ட வகுப்பினர் பட்டியலிலேயே இடம் பெறும்.

தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலக்குழு.

இம் மாநிலத்திலுள்ள சாதிகளின் பிற்பட்ட நிலைக்கான புள்ளி விவர குறியீட்டெண்களைக் காட்டும் அறிக்கை.

பிரிவு 1—மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்.

தொடர் எண்.	சாதியின் குறியீட்டெண்.	சாதியின் பெயர்.	சமூக ரீதியில் பிற்பட்ட நிலை.						கல்வி ரீதியில் பிற்பட்ட நிலை.			
			தொழில்.			ஏழ்மை.						
			உடலுழைப்பை நம்பி இருப்போர்.	மனைவி உழைப்பு.	தோர் உழைப்பு.	கூரை வீடு.	செலவுக் வாழ்க்கைச் கடன்.	அடகுக் கடைக்காரர் களிடம் கடன்.	மேல்நிலைக் கல்வியும் அதற்கு மேலும்.	உயர்நிலைக் கல்வி மட்டும்.	பாதியில் நிறுத்தி விட்டவர்கள்	தற்குறிகள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
1	101	அம்பலக்காரர்	74	147	97	146	112	156	23	32	94	133
2	102	ஆண்டிப்பண்டாரம்	63	103	106	111	74	64	46	64	116	107
3	103	பெஸ்தா, பிவியர்	49	60	0	55	104	116	61	87	113	97
4	105	போயர், ஒட்டர்	78	136	146	124	71	51	21	28	76	155
5	106	தாசரி	70	123	99	99	81	0	55	54	93	119
6	107	டொம்மாரா	85	271	811	191	0	271	29	24	73	153
7	108	எரவல்லர்	100	361	0	191	0	0	68	76	69	138
8	109	இசை வேளாளர்	37	48	105	105	109	91	126	141	129	64
9	110	ஜாம்பவானோடை	0	0	0	0	0	0	60	76	177	59
10	111	ஜங்கம்	59	81	93	93	97	112	93	100	105	98
11	112	ஜோகி	69	102	126	127	57	96	26	28	81	150
12	113	கொங்கு செட்டியார்	52	70	0	57	23	50	120	138	117	85
13	114	கொரச்சா	91	361	0	191	0	0	10	43	38	173
14	115	குலாலா (குயவர், கும்பரர் உட்பட) ..	67	114	93	93	96	81	60	77	105	108
15	116	குன்னுவர் மன்னாடி	57	126	982	156	0	0	34	38	121	95
16	117	குரும்பா	74	129	89	110	71	110	27	37	75	148

17	118	குருகினி செட்டி	85	230	0	96	0	0	115	203	124	80
18	119	மருத்துவர், நாவிதர், மங்களர, வேலகட்டலவர், வேலக்கட்டல நாயர், பரோணபகாரி.	64	88	92	123	110	113	57	72	117	99
19	120	மொண்டு கொல்லா	(குறியீட்டெண் 279—யாதவாவைக் காண்க.)									
20	121	மவுண்டாடன் செட்டி	55	60	0	64	0	0	69	75	105	100
21	122	மகேந்திரா, மேதாரா	76	241	243	48	46	0	38	67	117	106
22	123	முட்டுகும்பட்டி	0	0	0	0	0	0	13	39	78	146
23	124	நரிக்குறவர்	44	61	0	137	131	84	27	33	58	155
24	125	நோக்கர்	63	103	0	64	122	0	50	63	100	114
25	126	வன்னிய குல சூத்திரியர் (வண்னியர், வன்னியா வன்னிய கவுண்டர், கவுண்டர் அல்லது கண்டர், படையாச்சி, பள்ளி உட்பட).	69	118	123	128	110	125	39	52	92	125
26	128	மீனவர் (பர்வதராஜகுலம், பட்டணவார், செம்படவர்) (இருத்துவ மதம் மாறியவர்கள் உட்பட).	56	52	52	127	146	205	43	57	114	101
27	129	புன்னான் வேட்டுவ கவுண்டர்	64	90	0	96	0	0	80	82	91	116
28	131	சோழிய செட்டி	51	96	77	53	227	315	120	132	112	76
29	133	தொட்டிய நாயக்கர் (இராஜகம்பலம், கொல்லவர், சில்லவர், தொக்கலவர், துளுவ நாயக்கர் உட்பட).	72	157	204	107	103	89	28	33	83	146
30	134	தொண்டமான்	61	84	0	96	152	271	53	72	120	93
31	135	வலையர்	79	165	269	139	114	203	15	19	96	140
32	136	வண்ணார் (சலவைத தொழிலாளர் கன்னியா குமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டம் நீங்கலாக)— அங்கு இவர்கள் ஆதி திராவிடர்களாகக் கருதப்படுகின்றனர்.)	76	143	77	138	118	117	29	45	100	125
33	137	வேட்டைக்காரர்	87	164	199	176	64	121	8	13	72	163
34	138	வேட்டுவக் கவுண்டர்	69	119	138	88	62	46	44	49	86	149
35	139	யோகீஸ்வரர்	63	77	0	87	199	0	66	78	123	92

பிரிவு 2—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
1	201	அகமுடையார் (துளுவ வேளாளர் உட்பட) ..	47	63	63	75	123	154	124	139	110	74
2	202	அர்ச்சகாரி வேளாளர்	27	27	0	33	76	112	158	162	106	70
3	206	தேவாங்கர் (சேடர்)	57	92	76	48	84	54	156	140	130	76
4	207	துடிகுலா	41	0	0	96	0	814	100	128	112	85
5	208	ஏனாதி	36	361	0	191	0	0	94	96	75	133
6	210	கவரா/கவரை, வடுகர் (வடுவர்) (கும்மா, பலிஜா, காப்பு, ரெட்டி நீங்கலாக).	54	89	50	80	101	106	141	152	109	74
7	211	கௌடா (கும்மாள, கலாளி மற்றும் அனுப்ப கவுண்டர் உட்பட).	67	130	0	67	22	192	87	93	115	92
8	212	ஹெக்டே	100	361	0	0	730	0	98	106	107	85
9	213	இடிகா	57	82	28	96	99	132	79	99	92	109
10	214	இல்லத்துப் பிள்ளைமார்	59	111	61	91	157	124	156	165	119	58
11	217	கம்பர்	41	70	0	74	112	125	109	117	138	60
12	218	கைகோளர், செங்குந்தர்	61	95	104	54	98	75	143	142	115	76
13	219	கலிங்கி	50	103	730	64	0	0	89	109	105	98
14	220	கள்ளர்	52	86	76	100	133	134	87	87	114	90
15	221	கல்வேலி கவுண்டர்	54	76	0	115	183	163	93	90	101	99
16	222	கம்மாளர் அல்லது விஸ்வகர்மா மற்றும் விஸ்வகம்மாளர (தட்டார் அல்லது பொற்கொல்லர் உட்பட) கன்னார், கருமார் அல்லது கொல்லர், தச்சர் மற்றும் கல்தச்சர்.	56	61	80	90	111	107	74	94	128	79
17	223	கனி அல்லது கனிசு அல்லது கணியர் பணிக்கர்.	67	148	0	132	225	251	95	108	125	80
18	226	கடேசர் அல்லது பட்டம் கட்டி	82	111	0	57	73	0	82	82	97	110
19	229	கார்வி	100	0	0	191	0	0	74	102	102	99
20	230	கத்ரி	21	11	0	42	127	71	92	97	109	91

21	231	கொங்கு வேளாளர்	65	118	73	59	50	49	73	76	101	122
22	233	கோட்டேயர்	0	0	0	0	0	0	55	98	137	72
23	234	குஞ்சிடிகர்	51	90	0	72	91	0	57	66	65	137
24	235	லம்பாடி	82	207	0	191	146	326	15	20	29	186
25	237	மலையர்	64	90	0	76	146	652	52	72	63	149
26	239	மறவர்	71	125	125	94	105	110	61	66	109	104
27	240	மணியகார்	62	150	87	90	64	96	63	68	111	101
28	241	முக்குவர் அல்லது முகையர் (திருத்துவராக மாறியவர் உட்பட).	0	0	0	0	0	0	92	96	115	98
29	242	முத்துராஜா (முத்துராச்சா, முட்டிரியர், முத்திரியர், முத்தரையர்).	72	133	82	117	106	84	44	62	97	118
30	243	நாடார், சாணார், கிராமணி	59	88	99	84	88	72	111	104	121	77
31	245	நன்குடி வேளாளர்	69	72	0	75	22	99	96	112	120	68
32	247	ஓவச்சார்	18	0	0	38	146	0	111	114	117	73
33	249	பாணர் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டம் நீங்கலாக—அங்கு இவர்கள் ஆதி நிராவிடர்களாகக் கருதப்படுகின்றனர்).	69	129	0	64	0	0	142	165	122	63
34	250	பன்னிரெண்டாம் செட்டியார் அல்லது உத்தம செட்டியார்.	33	70	215	90	172	0	118	148	124	71
35	251	பண்ணையார் (கன்னியாகுமரி மாவட்டத்தி லுள்ள சுதந்திக்காரர் உட்பட).	25	0	0	96	0	0	74	92	120	91
36	252	பார்க்கவ குலம் (சுருமிமார், மலையமார், நத்தமார்).	75	138	195	90	68	49	65	69	105	109
37	255	புல்லுவர்	0	0	0	0	0	0	58	60	95	133
38	256	பூசாலர்	67	64	0	143	0	204	38	63	71	145
39	257	ரெட்டி (சுஞ்சம்)	69	124	85	71	138	135	110	117	121	81
40	258	சாதுச் செட்டி, (தெலுங்குச் செட்டி, தெலுங்குப்பட்டிச் செட்டி, இருபத்து நான்கு மனைத் தெலுங்குச் செட்டி உட்பட)	42	53	98	59	52	120	122	132	115	72

பிரிவு 2—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்—தொடர்ச்சி.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
41	259	சாலிவாகனா	17	0	0	64	0	543	52	102	98	110
42	260	சாலியர் (பத்மசாலியர், பட்டு சாலியர், பட்டாரியர், அடலியர்)	70	129	81	69	96	78	144	128	132	71
43	261	சவலக்காரர்	49	87	118	85	189	181	65	83	150	69
44	262	சேனைத் தலைவர், இலைவாணியர், சேனைக் குடையார்	63	105	20	63	123	199	99	106	117	84
45	263	சேளராஷ்டிரா (பட்டு நூல்காரர்) ..	49	72	107	66	57	70	237	176	133	51
46	266	தொகட்ட வீரஷத்திரியர்	67	72	0	72	91	204	132	119	84	100
47	267	தொழுவ நாயக்கர், வெத்தலைக்கார நாயக்கர்.	54	75	95	108	98	80	86	95	101	102
48	269	உப்பரா	67	104	97	103	81	136	48	63	103	123
49	270	ஊராளி கவுண்டர் (மாநிலம் முழுவதும்) ஒருடைய கவுண்டர் (மதுரை, கோயம்பத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், பெரியார் மாவட்டங்களில்)	71	145	96	97	41	78	34	45	82	141
50	271	வால்மீகி	76	167	311	127	203	452	21	35	58	162
51	272	வாணியர், வாணிய செட்டியார் (கண்டலா கணிகா, தெலிகுலா, செக்காளர் உட்பட)	48	60	58	74	98	133	129	145	114	68
52	273	வேடர் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டம் நீங்கலாக—அங்கு இவர்கள் ஆதி திராவிடர்களாகக் கருதப்படுகின்றனர்).	73	163	61	118	62	35	67	65	94	120
53	274	வல்லம்பர்	63	81	0	61	146	65	58	74	108	101
54	276	வீரக்கொடி வேளாளர் (மாநிலம் முழுவதும்)	54	97	68	78	115	59	115	126	105	83
55	277	ஒக்கலிகர், (வக்கலிகர், ஒக்கலிகர், கப்பிலியர், கப்பிலியா, ஒக்கலியர, கௌடா, ஒக்கலியா கவுண்டர், ஒக்கலிய கௌடா உட்பட) ..	58	102	91	59	59	80	83	86	95	115
56	278	வைதாடு செட்டி (நீலகிரி மாவட்டம்) ..	57	20	0	17	0	0	88	115	145	52
57	279	யாதவர் இடையர் வடுக ஆயர் என்றழைக்கப்படும் தெலுங்கு பேசும் இடையர் கொல்லா, மொண்ட் கொல்லா, ஆந்திர கொல்லா (குறியிட்டெண் 120. மொண்ட் கொல்லா உட்பட)	60	95	97	94	107	126	66	77	104	104
58	281	ஏருகுலா	72	200	126	127	135	0	40	37	82	154

பிரிவு 3 : கன்னியாகுமரி மாவட்டத்திலும், செங்கோட்டை வட்டத்திலும் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
1	301	ஆந்வார், ஆழவார், அலவார்	14	72	0	191	365	0	44	22	167	43
2	302	அரயர் (நுலயர்)	85	213	0	137	0	0	22	71	111	105
3	304	சவலக்காரர்	100	0	0	143	0	0	176	117	77	169
4	306	எழுத்தச்சர்	50	0	0	96	0	0	0	0	250	0
5	307	எழவாதி	97	257	0	187	0	0	33	136	185	29
6	308	சுழவர்	56	59	77	96	57	26	133	135	107	71
7	309	கலாரி குரூப் (கலாரி பணிக்கர்)	50	0	0	0	0	0	114	106	124	107
8	310	குடும்பி	0	0	0	0	0	0	54	37	194	57
9	311	நாயக்கர்	42	40	42	96	136	129	85	84	93	106
10	313	ஒடர்	58	181	0	191	0	0	0	0	132	0
11	315	சக்கரவர் (காவதி)	63	0	0	96	0	0	45	56	110	127
12	316	தொல்கொல்லர்	0	0	0	191	730	1620	70	95	150	41
13	317	வீரசைவர்	71	120	0	118	112	0	100	103	99	97
14	319	இருஷ்ணவாகா	55	57	146	82	63	93	71	90	108	104
15	908	லத்தின் கத்தோலிக்கர் (கன்னியாகுமரி மாவட்டம்) (பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்).	52	77	0	96	243	0	93	90	107	83

பிரிவு 4 : குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் (சீர் மரபினர்).

1	401	ஆத்தூர் கிழ்நாட்டுக் குறவர்கள் (சேலம் தென்னார்க்காடு, இராமநாதபுரம் மாவட்டங்கள்).	85	120	0	172	37	81	25	28	86	149
2	402	ஆத்தூர் மேல்நாட்டுக் குறவர்கள் (சேலம் மாவட்டம்)	100	72	0	0	730	1629	80	52	57	154
3	403	அப்பநாடு கொண்டையம் கோட்டை மறவர் (இராமநாதபுரம், மதுரை மாவட்டங்கள்). .	92	229	58	127	147	16	48	38	112	111

பிரிவு 4 : குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர (கீர் மரபினர்)—தொடர்ச்சி.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
4	404	அம்பலக்காரர், (தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள்) ..	76	143	126	161	75	87	28	36	96	128
5	405	அம்பலக்காரர் (ரூரியனூர்)	45	60	0	48	0	0	46	42	103	114
6	406	போயால்	75	120	0	64	0	543	18	31	67	154
7	408	ஐ. கே. குறவர்கள்	97	316	281	191	0	204	6	10	54	172
8	409	சக்கிலர் (இராமநாதபுரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, நீலகிரி மாவட்டங்கள்)	0	0	0	0	0	0	34	40	97	117
9	410	செங்கயம்புரி குறவர்கள் (வடார்க்காடு மாவட்டம்)	100	361	0	191	0	0	27	30	40	166
10	411	செட்டிநாடு வலையர்கள் (இராமநாதபுரம் மாவட்டம்)	73	149	159	153	258	0	11	19	101	141
11	412	டோம்ஸ் (திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்கள்)	0	0	0	0	0	0	11	76	54	165
12	413	தொப்ப குறவர்கள் (சேலம் மாவட்டம்) ..	79	181	0	153	146	163	18	22	76	157
13	414	டொம்மார்கள் (தஞ்சாவூர், புதுக்கோட்டை, வடார்க்காடு மாவட்டங்கள்)	0	0	0	0	0	0	25	31	74	145
14	415	தொங்க போயர்	95	193	0	153	0	977	76	58	15	192
15	418	துப்பை கொரசால் (திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்கள்)	100	197	0	191	0	0	296	39	71	113
16	419	டோபி குறவர்கள் (தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, வடார்க்காடு மாவட்டங்கள்)	100	361	0	191	0	0	41	60	103	109
17	420	தொங்க தாசரிகள் (செங்கற்பட்டு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சென்னை, சேலம் மாவட்டங்கள்)	100	361	0	96	0	0	27	37	104	128
18	421	கொரவா தொட்ட போயர்	0	0	0	0	0	0	0	77	126	139
19	422	குடுதாபிரிகள்	0	0	0	0	0	0	0	69	78	114
147. யாதவர் (இடையர், வடுக ஆயர் அல்லது வடுக இடையர் அல்லது கொல்லா என்றழைக்கப்படும் தெலுங்கு பேசும் இடையர் (மொண்ட் கொல்லா, ஆஸ்தாந்திர கொல்லா உட்பட).

148. யவணா.

149. ஏருகுலா.

150. யோகீஸ்வரர்.

குறிப்பு.—(1) மாநில சராசரி அளவிலிருந்து 10 சதவீத வேறுபாட்டு அளவைப் பின்பற்றி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15(4) பிரிவின்கீழ் சலுகைகளை அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு இப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. மாநில சராசரிக் கொள்கையைப் பின்பற்றி மேலும் சேர்க்கப்பட்டுள்ள சாதிகள் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

(2) மேலே குறிப்பிட்டுள்ள 15(1) பட்டியலின் ''குறிப்பு'' என்பதன்கீழ் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் இப் பட்டியலுக்கும் பொருந்தும்.

தமிழ்நாடு கல்வி விதிகளின் 92ஆம் விதியின்கீழ் முழு கல்விக் கட்டணச் சலுகை பெறத் தகுதிபெறும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடையேயான சாதிகளின் பட்டியல் (மாநில சராசரியின்படி).

1. அம்பலக்காரர் (சேர்வை உட்பட).

2. ஆண்டிப்பண்டாரம்.

3. பெஸ்தா, கிவியர்.

4. போயர், ஒட்டர் (போயர்கள், தொங்க போயர்கள், கொரலா தொட்ட போயர், கால்வதிலா போயர்கள், பெத்தபோயர்கள், ஒட்டர்கள், கல் ஒட்டர்கள், நெல்லூர்பேட்டை ஒட்டர்கள், குரமாரி ஒட்டர்கள் உட்பட).

5. தாசரி (தொங்க தாசரிகள், குடு தாசரிகள் உட்பட).

6. டொம்மாரா (டோம்ஸ், டொம்மார்கள் உட்பட).

7. தினக் வேளாளர்.

8. ஜாம்பவன்னோடை.

9. ஐங்கம்.

10. ஜோகி (ஜோகிஸ் உட்பட).

11. கொங்கு செட்டியார் (கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்கள் மட்டும்).

12. குலாலா (குயவர், கும்பரர் உட்பட).

13. குன்னுவர் மன்னாடி.

14. குருகிலி செட்டி.

15. குரும்பா.

16. மகேந்திரா, மேதாரா.

17. மருத்துவர், நாவிதர், மங்களா, விலக்கத்தலவர், விலக்கதலவ நாயர், ப்ரனோபகாரி.

18. மீனவர், பர்வதராஜகுலம், பட்டணவர், செம்படவர் (இருத்துவராக மாறியவர் உட்பட).

19. மவுண்டாடன் செட்டி.

20. முட்லகம்பட்டி.

21. நரிக்கொறவர.

22. நோக்கர்.

23. சோழிய செட்டி.

24. தொண்டமான்.

25. தொட்டிய நாய்க்கர் (இராஜகம்பலம், கொல்லகர், கில்லவர், தொக்கலவர் அலுவ நாயக்கர் உட்பட).

26. வலையர் (செட்டிநாட்டு வலையர் உட்பட).

27. வண்ணார் (சலவைத் தொழிலாளர்) (அகஸா, மடிவலா, ஏகாலி, இராஜகுலா வேலுதடர், இராஜக்கா உட்பட).

(கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டம் நீங்கலாக அங்கு இவர்கள் ஆதி-திராவிடர்களாகக் கருதப்படுகின்றனர்).

28. வன்னிய குல க்ஷத்திரியா (வன்னியர், வன்னியர், வன்னிய கவுண்டர், கவுண்டர் அல்லது கண்டர், படையாச்சி, பள்ளி, அக்னிகுல க்ஷத்திரியா உட்பட).

29. வேட்டைக்காரர்.

30. வேட்டுவக் கவுண்டர், புன்னான் வேட்டுவக் கவுண்டர்.

31. மொண்ட் கொல்லர்.

32. யோகீஸ்வரர்.

குறிப்பு.—(1) மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களாக இருந்து மதம் மாறியவர்களும் இந்து மதத்தைச் சேர்ந்த மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களைப் போலவே கல்வித் துறையிடமிருந்து கிடைக்கக்கூடிய முழு கல்விக் கட்டணச் சலுகையை பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

(2) மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இருந்து மதம் மாறியவர்கள் (பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று இட்டவட்டமாக அறிவிக்கப்பட்டவர்கள் நீங்கலாக) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறையிடமிருந்து வேறெந்த சலுகைகளையும் பெற தகுதியுடையவர் ஆகமாட்டார்கள்.

(3) மாநில சராசரி அளவிலிருந்து 10 சதவீத வேறுபாட்டு அளவைப் பின்பற்றி 15(4) பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மிக பிற்படுத்தப்பட்ட பட்டியலை அடிப்படையாகக் கொண்டு இப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. மாநில சராசரி கொள்கையைப் பின்பற்றி மேற்கொண்டும் சேர்க்கப்படவுள்ள சாதிகள் அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதியினர் பட்டியல்.

(மாநில சராசரி அடிப்படையில்)

மாநில சராசரி அளவிலிருந்து 10 சதவீத வேறுபாட்டு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட, குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதியினரின் பட்டியல், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15(4)ஆம் பிரிவின் கீழ் சலுகைகள் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் முதன்மைப் பட்டியலுடன் இணைக்கப்பட்டுள்ளது. மாநில சராசரி கொள்கையைப் பின்பற்றிய பிறகும் கூட, இதில் கூடுதலாக சாதி எதையும் சேர்க்க வேண்டிய நிலை ஏற்படவில்லை. எனவே, 10 சதவீத வேறுபாட்டுப் பட்டியலுடன் இணைந்துள்ள குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதியினர் பட்டியலையே மாநிலச் சராசரி அளவின் அடிப்படையில் தயாரிக்கப்படும் பட்டியலின் செயல் நோக்கங்களுக்காகவும் பின்பற்ற வேண்டும்.

வாழ்விடத்தை அடிப்படையாகக் கொண்டு, கல்வி நிறுவனங்களில் செய்யப்படும் இட ஒதுக்கீடு, 70 சதவீதத்திற்கு மேற்படக் கூடாது என்றும், உயர் சிறப்புப் படிப்பு (Super Specialities) களைப் பொறுத்த வரையில் இட ஒதுக்கீடே கூடாது என்றும் உச்ச நீதிமன்றம், 6091ஆம் எண் ரிட் மனுவில் (ஏ.ஐ.ஆர். 1984 எஸ்.சி. 1420) தீர்ப்பளித்துள்ளது. உச்ச நீதிமன்றத்திலும், மத்திய அரசிடமும் வாதிட்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலனைப் பாதுகாப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதற்காக இப்பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

பணிமாற்று நியமன முறையில் இட ஒதுக்கீடும் ரிட் மனுவும் :

ஐந்து மாநிலப் பணிகளில் பணிமாற்று முறையில், பணியாளர்களை நியமிக்கும் போது, பதவி ஒதுக்கீடு விதி கடைப்பிடிக்கப்படுவதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு (எண் 4996/80) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதுபற்றி, இக் குழு தீர ஆராய்ந்தது. தெரிந்தெடுத்த சில பதவிகளுக்கும் பணிகளுக்கும் ஆட்களை நியமனம் செய்யும்போது பதவி ஒதுக்கீடு விதியைக் கடைப்பிடிக்க அரசுக்கு அதிகாரம் உண்டு. இதனைப் பாரபட்சமானதென்று கூற முடியாது. ஆகவே, ரிட் மனுவில் குறிப்பிடப் பட்டுள்ள ஐந்து மாநிலப் பணிகளிலும் தற்போது பதவி ஒதுக்கீடு விதி கடைப்பிடிக்கப் பட்டு வருகின்றதமிழ்நாடு வருவாய்த் துறை சார்நிலைப் பணி, தமிழ்நாடு வணிக வரிகள் சார்நிலைப் பணி ஆகிய இரண்டு சார்நிலைப் பணிகளிலும் பணிமாற்று முறையில் ஆட்களை நியமனம் செய்யும்போது பதவி ஒதுக்கீடு விதி தொடர்ந்து கடைப்பிடிக்கப் படலாம்.

நேரடி நியமனமுறை வரம்பை விரிவு படுத்துதல் :

தற்போது சில பதவிகளுக்கு, நேரடி நியமன முறையில் ஆட்தேர்வு செய்யப்படு வதில்லை. அரசுப் பணிகளில் இள ரத்தங்களைப் புகுத்தி நிறையைப் பெருக்க வேண்டுமாயின் மேலும் மேலும் அதிகமான பதவிகளுக்கும் பதவித் தரங்களுக்கும் நேரடி நியமன முறையில் ஆட்தேர்வு செய்ய வேண்டும். இதற்காக, அரசு தற்போதைய நேரடி நியமன விதிகளை மேலும் செம்மையாகச் செயற்படுத்துவதோடு, அத்தகைய விதிகள் நடைமுறையில் இல்லாத பதவிகளுக்கும் பணிகளுக்கும் பொருத்தமான விதிகள் இயற்றவும் செய்யலாம்.

கல்வி :

பாரர் கல்வி.—நமது மாநிலத்தில் மேல்நிலை வகுப்பு முடிய இலவசமாகக் கல்வி கற்க வகை செய்யப்பட்டுள்ளது: ஆனாலும், பெற்றோரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகள் மோசமாக இருப்பதால் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த பல சிறார்களால் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ள முடிவதில்லை. தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களிலும் தொழில்நுட்பம் சாரா கல்வி நிறுவனங் களிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் சேர்ந்து, பயின்று, பயன்பெற வேண்டுமென்பதற்காக அரசு அவர்களுக்குப் பல சலுகைகள் வழங்கி வருகிறது.

ஒரு குழந்தையின் அறிவாற்றல் மிகச் சிறு வயதிலேயே வளர்ச்சியடையத் தொடங்கி விடுகிறது. மாநிலமெங்கிலும், வெளித் தொடர்பு இல்லாத உள்ளார்ந்த பகுதிகளில் பாரர் கல்வி வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தால், பரம்பரை பரம்பரையாக உரிமைகள் மறுக்கப்பட்டு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் குழந்தைகள் போதிய ஊக்கம் பெற்று, கல்வியில் நல்லார்வம் காட்டுவர். இதனால், பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த குழந்தைகள் தங்களின் இருண்ட சூழல்களிலிருந்து விடுபடுவதோடு பெற்றோர் கல்வி யறிவில்லாதவர்களாக இருப்பதால் அவர்களிடமிருந்து அறிவுரைகளும் ஆலோசனை களும் பெற முடியாத குறையும் நீங்கும்.

இதற்காக மாநில அரசு, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பாலர் பள்ளி தொடங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அவசியப்படுமானால், முதலமைச்சரின் சத்துணவு நிலையங்களையும் பால்வாடி நிலையங்களையும்கூட இண்டர்கார்ட்டன் அல்லது மாண்ட் சௌரி மாதிரியின முழுமையான பாலர் பள்ளிகளாக மாற்றலாம். பாலர் பள்ளித் திட்டத்தை அக்கறையோடு பெரிய அளவில் செயற்படுத்தினால், உயர் கல்வி நிறுவனங்களிலும் அரசுப் பணிகளிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கென ஒதுக்கப்படும் இடங்களை நிரப்ப, பொருத்தமான நிறமையாப் இளைஞர் உருவாவதற்கு நாம் அடித்தளம் அமைத்தவர்களாவோம்.

கல்லூரிக் கல்வி :

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு பரம்பரையான வரலாற்றுப் பூர்வமான மற்றும் சுற்றுச் சூழல் சார்ந்த பல்வேறு குறைபாடுகள் உள்ளன ; இவை காரணமாக இம் மாணவர்களுக்குக் கல்வியில் போதிய நாட்டம் இருப்பதில்லை. சத்தான உணவுடன் கூடிய மாணவர்இல்ல வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்து, தாராளமாக படிப்புதவித் தொகைகள் வழங்கினால் அவர்களுக்குள்ள சில குறைகள் நீங்கும். பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களில் பலர் படிப்பில் மந்தமாக இருக்கிறார்கள். தேர்வுகளில் வெற்றி பெருகின்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களின் சதவீதம், பொதுவாகவே, மாநிலச் சராசரியைவிட குறைவாகத்தான் இருக்கிறது. பலவித வசதிகள் செய்து கொடுத்தும் தனிப் பயிற்றுவிப்பு வகுப்புகள் நடத்துதல் போன்ற தனிக் கவனிப்புகள் மூலமும் அவர்கள் கல்வித் தரத்தை கணிசமாக உயர்த்தலாம். பட்ட வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிட. பழங்குடியின மாணவர்களுக்கு நடத்தப்படுகின்ற தனிப் பயிற்றுவிப்பு வசதிகளை பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் நீட்டிக்கலாம். பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வமும் அக்கறையும் ஏற்படச் செய்வதற்காக அவர்களுக்கு வழங்கப்படும் படிப்புதவித் தொகை மற்றும் ஏனைய சலுகைகளில் அளவை படிப்படியில் அவர்கள் காட்டுகின்ற முன்னேற்றத்தோடு இணைத்து விட வேண்டும்.

நலப் பணித் திட்டங்கள் பற்றிய ஆய்வும் புத்துயிரூட்டுவதற்கான நடவடிக்கைகளும் :

பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த ஏழை எளியவர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காக, அரசு, பல்வேறு நலப் பணித் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. 1969ஆம் ஆண்டு மே திங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கென தனியாக ஒரு இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்தப்பட்டது. 1974ஆம் ஆண்டு மே திங்களில் மாவட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இதனால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் மேம்பாட்டுத் திட்டங்கள் புதிய உத்வேகம் பெற்றுள்ளன. பிற்படுத்தப்பட்டுள்ள வகுப்பினருக்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடும் ஆண்டுக்காண்டு சீராக அதிகரித்து கொண்டே வருகிறது. ஆனால், மாறில வரவு-செலவுத் திட்ட மொத்த செலவுக்கும் இத் துறைக்கான ஒதுக்கீட்டுச் தொகைக்கும் இடையேயான விகிதாச்சாரம் குறைந்து கொண்டே வருகிறது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் கல்வி முன்னேற்றத்தை உத்தேசித்து, தற்போது குறிப்பான 23 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றை கீழ்க்கண்ட ஆறு பெருந் தலைப்புகளின்கீழ் வகைப்படுத்தலாம் :—

1. படிப்புதவித் தொகைகள்.

2. மாணவர் இல்ல வசதிகள்.

3. குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதி மாணவர்களுக்கான தனிப் பள்ளிகள்.

4. சில குறிப்பான பொருளாதார நடவடிக்கைகள்.

5. தனிப் பயிற்சி திட்டம்.

6. ஏனைய நலப் பணி திட்டங்கள்.

1. படிப்புதவித் தொகைகள் :

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவர் படிப்புதவித் தொகை பெற அவரது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கு மேற்பட்டிருக்கக் கூடாதென ஒரு வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த உச்ச வரம்பை ரூ. 10,000ஆக உயர்த்த வேண்டுமென்று இக் குழு பரிந்துரை செய்கிறது. அதுபோலவே, தமிழ்நாடு கல்வி விதியைச் சேர்ந்த 92ஆவது விதியின்கீழ், கல்விக் கட்டண சலுகை பெறுவதற்கான, பெற்றோர் ஆண்டு வருமான வரம்பை ரூ. 1,500-லிருந்து ரூ. 5,000-மாக உயர்த்த வேண்டும்.

மேல்நிலை வகுப்பு முடிய இலவசக் கல்விக்கு வகை செய்யப்பட்டுள்ளதால், மாணவர்களின் புத்தகச் செலவு, சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகிய செலவுகளுக்காக மட்டுமே படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. மேல்நிலை வகுப்புக்கு மேல் வழங்கப்படும் படிப்புதவித் தொகையில் கல்வி கட்டணமும் சேர்க்கப்படுகிறது. இந்தப் படிப்புதவித் தொகை வீதங்கள் எல்லாமே நெடுங்காலத்திற்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்டவையாகும். இவை தவியார் கல்வி நிறுவனங்களில் வசூலிக்கப்படுகின்ற கல்விக் கட்டணத் தொகை மற்றும் சிறப்புக் கட்டணத் தொகைகளில் ஒரு பகுதிக்கு மட்டுமே போதுமானவையாக உள்ளன. ஆகவே, இந்த வீதங்களை மறு ஆய்வு செய்து, நடைமுறையில் வசூலிக்கப்படுகின்றன கல்விக் கட்டணங்களுக்கு இணையாக நிர்ணயிக்கப்பட வேண்டும். படிப்புதவித் தொகை பெறத் தகுதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள 90 சதவீத வருகை விதி கண்டிப்புடன் செயல் படுத்தப்பட வேண்டும்.

மெட்ரிக்குக்குப் பிந்திய படிப்பு மாணவர்களுக்கு, தெரிந்தெடுத்த சில பாடப் புத்தகங்கள் மட்டுமே—அனைத்துமல்ல—வழங்கப்படுகின்றன. அவைகூட சில வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்குத்தான் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், முன்பணம் பெற்றுக் கொண்டு இப் புத்தகங்களை வழங்குகிறது. முன்பணம் வழங்குவதில் தாமதமேற்படும்போது புத்தகங்கள் கிடைப்பதும் தாமதமாகிறது. பாடநூல் நிறுவனத்திற்கு முன்பணம் வழங்கும் அதிகாரத்தை பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இயக்குநருக்குப் பிரித்துத் கொடுத்து, அதன்மூலம் இத் தாமதத்தைத் தவிர்க்கலாம். ஒரு சில வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் தெரிந்தெடுத்த சில புத்தகங்களை வழங்குவதற்குப் பதிலாக, எல்லா வகுப்பு மாணவர்கட்கும் எல்லாப் புத்தகங்களும் வழங்க வகை செய்யப்பட வேண்டும்.

மேல்நிலை வகுப்பு மாணவர்கட்கு, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 என்ற வீதத்தில் புத்தகச் செலவுப் பணம் (Book-Money) வழங்கலாம். பட்ட வகுப்பு மாணவர்கட்கு முதல் ஆண்டில் ரூ.100-ம், இரண்டாவது மூன்றாவது ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50-ம் புத்தகச் செலவுப் பணமாக வழங்கப்பட வேண்டும். பட்ட மேற்படிப்பு மாணவர்கட்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 150 வழங்க வேண்டும்.

2. மாணவர் இல்ல வசதி :

தற்போது மெட்ரிக்குக்கு முந்திய, பிந்திய வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ மாணவியரின் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கும் குறைவாக இருந்தால் அவர்களுக்கு இலவச மாணவர் இல்ல வசதி அளிக்கப்படுகிறது. படிப்புதவித் தொகை விசயத்தில் செய்தது போலவே இந்த வருமான வரம்பையும் ரூ. 10,000 ஆக உயர்த்த வேண்டும். மாணவரில்லங்களில் நிலவுகின்ற நிலைமைகள் மனதுக்கு நிறைவளிப்பனவாக இல்லை. புதிய மாணவரில்லங்கள் தொடர்பாக, தனியே அளிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில் குறிப்பிட்டதுபோல, மாணவரில்ல வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு, நபர் ஒருவருக்கு, திங்கள் ஒன்றுக்கு ரூ. 75 என்ற வீதத்தில் உணவு மானியம் அளிக்கப்பட வேண்டும். அரசினர் கல்லூரி மாணவர் இல்லங்களில் உணவுச் செலவு மாணவர் ஒருவருக்கு ரூ. 150 ஆகவும் அரசினர் உயர்நிலைப் பள்ளி மாணவர் இல்லங்களில் உணவுச் செலவு மாணவர் ஒருவருக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 100 ஆகவும் உயர்த்தப்பட வேண்டும்.

3. குற்ற பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதி மாணவர்களுக்கான தனி பள்ளிகள் :

குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதி மாணவர்களுக்காக தற்போது நடத்தப்பட்டு வரும் தனிப் பள்ளிகள் அனைத்தும் தொடர்ந்து நடத்தப்படலாம்.

4. சில குறிப்பான பொருளாதார நடவடிக்கைகள் :

(i). சலவைத் தொழிலாளர், முடி திருத்துவோர், போயர்கள் ஆகியோருக்கு இலவசமாகத் தொழில் கருவிகள் வழங்கப்படுகின்றன ; அத்தோடு, வெவ்வேறு வட்டி வீத முறையின்கீழ் கடன்களும் நடமாடும் சலவைக் கூடங்கள், முடி திருத்து நிலையங்கள் அமைப்பதற்கு உதவித் தொகைகளும் வழங்கப்படுகின்றன. இத் திட்டங்களை மேலும் விரிவுபடுத்தவும் பிரபலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(ii). பாசனக் கிணறுகள் தோண்டுதல்.—இரண்டு ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருக்கின்ற குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த ஊழவர்களுக்கு கிணறு தோண்டுவதற்காக உதவித் தொகையாக ரூ. 2,500-ம் வழங்கப்படுகின்றன. தற்போது கிணறு தோண்டுவதற்காகும் செலவுகள் அதிகரித்து விட்டபடியால், உதவித் தொகையும் வங்கிக் கடனாக ரூ. 5,000-ம் அதிகரிக்க வேண்டுமென இக் குழு பரிந்துரை செய்கிறது. அவசியமானால் வங்கிக் கடனையும் அதிகரிக்க வேண்டுமென இக் குழு பரிந்துரை செய்கிறது.

(iii). பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்.—முதலில் திட்டமிட்டப்படியே, இக் கழகம், பயனுள்ள பொருளாதாரப் பணிகளைத் தொடங்கு வதற்காக தனிப்பட்ட நபர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தொடக்க நிதி உதவித் தொகையும், உதவித் தொகையும் வழங்க வேண்டும். பயனுள்ள இந்தத் திட்டத்தைக் கைவிடலாகாது.

5. தனிப் பயிற்சித் திட்டம் :

தற்போது, மூன்று பொது நோக்கு பொறியியல் பட்டறைகள், இரண்டு தொழில் பயிற்சி நிலையங்கள், ஒரு தச்சுப் பிரிவு, ஒரு நெசவுப் பிரிவு, ஏழு தையல் நிலையங்கள் ஆகியன இங்கு வருகின்றன. இந்த மூன்று பொது நோக்கு தொழில் பட்டறைகளும் தொழில் பயிற்சி நிறுவனங்களாகத் தரமுயர்த்தப்பட்டு; வேலை வாய்ப்பு, பயிற்சித் துறை இயக்குநரின் கட்டுப் பாட்டுக்கு மாற்றப்பட்டு விட்டன. இந்தத் திட்டங்கள் அனைத்தையும் தொடர்ந்து செயற்படுத்துவதோடு அவற்றை விரிவுபடுத்தவும் வேண்டும்.

6. ஏனைய நலப் பணித் திட்டங்கள் :

கீழ்க்கண்ட திட்டங்களை மேலும் பல பகுதிகளுக்கு விரிவுபடுத்தி பயன்பெறுவோரின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும்.

(). குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதியினருக்கு ஒவ்வொன்றும் ரூ. 5,600 மொத்தச் செலவுக்கு மிகாமல் வீடுகள் கட்டித்தரும் திட்டம்—இச் செலவுத் தொகையில் 75 சதவீதம் உதவித் தொகையாகவும் 25 சதவீதக் கடனாகவும் வழங்கப்படும்.

(ii). வீட்டு மனைகள் வழங்குவதற்காக நிலம் கையகப்படுத்தும் திட்டம்.

(iii). நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் சலவைக் கூடங்கள் கட்டுவதற்காக 50 : 50 என்ற அடிப்படையில் கடனும், உதவித் தொகையும் வழங்குதல்.

மின்னணு கணக்கிடு பொறி இயந்திரவியல் முதலான தொழில்களில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு புதிய மாணவர் இல்லங்கள், பயிற்சிபெறும் சட்டப் பட்டதாரிகளுக்கு உதவித் தொகை, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் முதுநிலை வழக்குரைஞர்களுக்கு மதிப்பூதியம் ஆகிய திட்டங்களை பிரபலப்படுத்தி முனைப்புடன் செயற்படுத்த வேண்டும். தற்போது ஆதி திராவிடர்களுக்காகச் செயற்படுத்தப்பட்டு வரும் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தை வறுமைக் கோட்டுக்கும் கீழே உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் நீட்டிக்க வேண்டும். தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதிக் கழகத்தின் (THADCO) மூலமாகவே இத் திட்டத்தையும் செயற்படுத்தலாம். தமிழ்நாடு பிற்படுத்தப் பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தகுதிவாய்ந்த தனிப்பட்ட விவசாயிகளுக்கு குழுவாக இணறு தோண்ட தொடர்ந்து உதவித் தொகை வழங்கலாம். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP), கிராமப்புற இளைஞர்கள் சுய வேலைவாய்ப்புப் பயிற்சி (TRYSEM) தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (NREP) சாண எரிவாயுத் திட்டம் போன்ற திட்டங்களினாலும் 20 அம்சத் திட்டங்களின் கீழ்வரும் இதர திட்டங்களினாலும் கிடைக்கக் கூடிய முழுப் பயன்கள் பற்றி பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு எடுத்துக் கூறி ஆக்கமும் ஊக்கமும் அளித்து வழி காட்ட வேண்டும்.

மேற்பார்வை, கண்காணிப்பு, மறு ஆய்வு :

அரசு மேற்கொள்கிற பல்வேறு நலப் பணித் திட்டங்களால் மக்களுக்கு நிறைந்த பயன் கிடைக்க வேண்டுமானால், அத் திட்டங்களின் செயற்பாட்டை மேற்பார்வை செய்து கண்காணித்து, அவ்வப்போது மறு ஆய்வு செய்தல் வேண்டும். அவ்வாறு திட்டங்கள் செயற்படுத்தப்படுவதையும் கல்வி நிறுவனங்களிலும் அரசுப் பணிகளிலும் இட ஒதுக்கீட்டு விதிகள் முறையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதையும் கண்காணிக்க பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறை இயக்குநர் அலுவலகத்தில் தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்த வேண்டும். இது தொடர்பாக பிறிதோர் இடத்தில் தனியாகப் பரிந்துரைகள் அளிக்கப்பட்டுள்ளன.

அரசுப் பணிகளில் பதவி ஒதுக்கீடு விதி முறையாகக் கடைப் பிடிக்கிறதாவென முதலமைச்சரின் தலைமையிலான ஓர் உயர் மட்டக் குழு ஆய்வு செய்ய வேண்டும்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறை இயக்குநர், அரசினர் நலப் பணித் திட்டங்களை செயற்படுத்துவதில் ஏற்படுள்ள முன்னேற்றம் பற்றி, குறித்த காலத்திற் கொருமுறை அறிக்கைகள் பெற்று, நுண்ணாய்வு செய்ய வேண்டுமென இக் குழு பரிந்துரைக்கிறது. இதனை அரசும் மறு ஆய்வு செய்ய வேண்டும்.

தற்போது செயல்படாமல் உள்ள மாநில அளவிலான ஆலோசனைக் குழுவுக்கு அரசு புத்துயிரூட்ட வேண்டும்.

மாவட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல அதிகாரிகள் ஆறு மாதத்திற்கொரு முறை, சம்பந்தப்பட்ட அமைச்சரின் தலைமையில் கூடி நலப் பணித் திட்டங்களின் செயலாக்கம் பற்றி ஆலோசனை நடத்தினால், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் செயல் வேகத்தை முடுக்கிவிட முடியும்.

மாணவர் இல்லங்களுக்கான பெறிவுத் திட்டம் :

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்தின் முதற்படி கல்வியே. அன்றாடம் ஒரு வேளை கூட வயிறார உணவு கிடைக்காமல், ஏழ்மையின் இருப்பிடமான மண் குடிசைகளில் வாழுகின்ற, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் குழந்தைகள் கல்வியில் போதிய முன்னேற்றம் காண முடியாத போது அவர்கள், மூற்பட்ட வகுப்பினருடன் சரிநிகராகப் போட்டியிடுவது எங்ஙனம் ? அக் குழந்தைகள் கல்வியில் முன்னேற வேண்டுமாயின் அவர்களுக்குப் பாங்கான இடவசதி, சத்தான உணவு, நல்ல சுற்றுச் சூழல் ஆகிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். எனவே பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கான மாணவர் இல்லங்களை அதிகரிக்க வேண்டியது மிக அவசியம். தற்போதுள்ள மாணவர் இல்லங்களில் செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் போதா. அவற்றைச் சீரமைத்து வசதிகளைப் பெருக்க வேண்டும். இது தொடர்பாக, இக் குழு, அத்தியாயம் 9(iii)-ல் விரிவான அடங்கல் திட்டம் ஒன்றை வகுத்தளித்துள்ளது. அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு :—

1. அடுத்த 5 ஆண்டுகளில் புதிதாக 600 மாணவர் இல்லங்கள் தொடங்குதல்.

2. அவற்றில் 100 மாணவர் இல்லங்களுக்கு புதிதாக நிரந்தரக் கட்டடங்கள் கட்டுதல் எஞ்சிய 500 மாணவர் இல்லங்களை தற்போதைக்கு வாடகைக் கட்டடங்களில் நடத்துதல்.

3. கழிவு அறை, குளியல் அறை, தண்ணீர் வசதி போன்ற அடிப்படை வசதி களைச் செய்து கொடுத்தல்.

4. போதுமான தட்டுமுட்டுச் சாமான்கள், சமையல் பாத்திரங்கள், மேசை நாற்காலிகள் முதலியன வழங்குதல்.

5. போதுமான புத்தகங்கள், வசதியான மேசை நாற்காலிகளோடு கூடிய நூலகம் ஏற்படுத்துதல்.

6. மாணவர்களுக்கு, இரண்டு ஜோடி ஆடைகள், பாய்கள், தலையணைகள், படுக்கை விரிப்புகள், ஒரு ஜோடி காலணிகள் மற்றும் போதுமான குறிப்பேடுகள் வழங்குதல்.

7. விளையாட்டு வசதிகள் செய்து கொடுத்தல்.

8. மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களை ஆரம்ப சுகாதார நிலையங்களுடன் அவற்றின் துணை நிலையங்களோடும் இணைத்து மருத்துவச் சோதனைகளுக்கு ஏற்பாடு செய்தல்.

9. மாணவர் இல்லக் காப்பாளர்களுக்கு, உணவு விதிமுறை, முதலுதவி ஆகியவற்றில் பயிற்சி அளித்தல்.

10. மாணவர் இல்லங்கள் செயல்படும் விதத்தைக் கண்காணித்து மேற்பார்வையிட மாவட்டத் தலைமையிடத்திலும் போதிய பணியாளர்களை நியமிக்க அனுமதி அளித்தல்.

<u>தனிப் பயிற்சி நிலையம் :</u>

அகில இந்தியப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கையை பெருக்க வேண்டும் என்னும் சீரிய நோக்கோடு 1971ஆம் ஆண்டு வாக்கில், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கென தனிப் பயிற்சி நிலையம் ஒன்று தொடங்கப்பட்டது. துரதிஷ்டவசமாக, எண்ணிய பயன் கிட்டவில்லை. கடந்த பத்தாண்டுகளில் இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றவர்களில் மூவர் மட்டுமே தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதிலிருந்து இதனை நாம் தெளிவாக உணர முடிகிறது. இப்பயிற்சி நிலையம் தொடங்கப்பட்ட நோக்கம் நிறைவேற வேண்டுமாயின் அதனை முற்றிலுமாகச் சீரமைக்க வேண்டியது அவசியம். இது தொடர்பாக குழுத் தலைவரும் இரண்டு இதர உறுப்பினர்களும் இத்தப் பயிற்சி நிலையத்தைப் பார்வையிட்டு, அங்குள்ள வர்களுடன் மனந்திறந்து உரையாடினர். இப் பயிற்சி நிலையத்தைச் சீரமைப்பது தொடர்பாக இக்குழு கீழ்க்கண்ட யோசனைகளைத் தெரிவிக்க விரும்புகிறது.

1. இப்பயிற்சி நிலையத்தையும் அதோடு இணைந்த மாணவர் இல்லம் மற்றும் நூலகத்தையும் சென்னை, ஆடம் சாலையிலுள்ள ' கூவம் இல்லம் ' போன்றதொரு விசாலமான மாளிகைக்கு மாற்ற வேண்டும். இளமையான, செயலார்வத் துடிப்பு மிகுந்த ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை இப்பயிற்சி நிலையத்தின் பொறுப்பாளராக நியமிக்க வேண்டும்.

2. இப்பயிற்சி நிலையத்திலுள்ள நூலகத்தில் நாளது வரையிலான நூல்களும் பருவ இதழ்களும் இடம் பெற வேண்டும். வசதியான மேசை நாற்காலிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. இப் பயிற்சி நிலையத்திற்கு மாணவர்கள் தெரிந்தெடுக்கும் முறையை மாற்றியமைக்க வேண்டும். வரையறுக்கப்பட்ட வருமான வரம்பிற்குட்பட்ட பிற்படுத்தப் பட்ட வகுப்பினரிடையேயிருந்து 50 சதவீத மாணவர்களையும் பெற்றோரின் வருமான வரம்பு என்னவாக இருந்தாலும் நல்ல மதிப் பெண்களுடன் தேர்ச்சி பெற்ற, திறமையான பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களிடையேயிருந்து 40 சதவீதத்தினரையும் தெரிந்தெடுக்கலாம். எஞ்சிய 10 சதவீத மாணவர்களை பொருளாதார ரீதியாக நலிந்த, முற்பட்ட வகுப்பைச் சேர்ந்த, திறமையான மாணவர்களிடையே இருந்து தேர்ந்தெடுக்கலாம். இவ்வாறு தெரிந்தெடுக்கப்படும் முற்பட்ட வகுப்பு மாணவர்களிடமிருந்து நியாயமான தொகை கட்டணமாக வசூலிக்கப்படலாம்.

4. இவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களை மருத்துவச் சோதனை செய்து, தகுதியானவர்கள் என்று அறிந்த பின்னரே பயிற்சி நிலையத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

5. தற்போது ஓர் ஆண்டில் 50 மாணவர்களே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இந்த எண்ணிக்கையை உடனடியாக 100 ஆக உயர்த்த வேண்டும். அதற்குப் பின்னர், ஒவ்வோர் ஆண்டும் நூறுநூறாக உயர்த்திக் கொண்டே வந்து ஓர் ஆண்டில் 500 மாணவர்கள் வரையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

6. (i) மேடைப் பேச்சுப் பயிற்சியும் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

(ii) பிரபலமான பாடங்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

(iii) பயிற்சி ஆசிரியர்களுக்கு நல்ல சிறப்பூதியம் வழங்க வேண்டும்.

(iv) பல்கலைக் கழகங்களிலிருந்தும் பிற கல்லூரிகளிலிருந்தும் அவ்வப்போது வந்து உரையாற்றும் விரிவுரையாளர்களுக்கு விரிவுரை ஒன்றுக்கு ரூ. 100 சன்மானமாக வழங்கப்பட வேண்டும்.

7. (i) அரசு வரையறுத்த வருமான வரம்பிற்குட்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான உணவுச் சலவுத் தொகைதிங்கள் ஒன்றுக்கு ரூ. 250 ஆக உயர்த்தப்பட வேண்டும்.

(ii) மாணவியருக்கு வழங்கப்படும் பேரூந்துக் கட்டணத் தொகை, உண்மையான பேரூந்து கட்டண விதங்களுக்கு ஏற்றவாறு உயர்த்தப்பட வேண்டும்.

8. இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று வெளியேறும் மாணவர்கள் பிற் காலத்தில் என்னென்ன பதவிகள் வகிக்கிறார்கள் என்று கண்காணித்து பதிவு செய்து வரவேண்டும்.

9. இப்பயிற்சி நிலையத்திற்கு அவ்வப்போது வந்து உரை நிகழ்த்தும் விரிவுரை யாளர்களை அழைத்து வருவதற்கும் அனுப்பிவைப்பதற்கும் மற்றும் மாணவர்கள், நூலகங்களுக்கும் பிற கல்வி நிறுவனங்களுக்கும் சென்றுவரவும் ஒரு வண்டி (Van) வழங்கப்பட வேண்டும்.

10. சென்னையிலுள்ள இப்பயிற்சி நிலையத்தில், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும் இ.ஆ.ப., இ.கா.ப. தேர்வுகள் மற்றும் பிற அதிகாரிகள் தேர்வுகளுக்கு மட்டும் சிறப்புப் பயிற்சி அளிக்க வேண்டும். மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு, இரயில்வே, வங்கிப்பணியாளர் தேர்வுக் குழு, ஐந்திய ஆயுள் காப்புறுதிக் கழகம் ஆகியவற்றால் அகில இந்திய அளவில் நடத்தப் படுகின்ற ஏனைய தேர்வுகளுக்கும் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு நடத்தும் தேர்வுகளுக்கும் பயிற்சி அளிப்பதற்காக, எல்லா மாவட்டத் தலைமை யிடங்களிலும் இதுபோன்ற பயிற்சி நிலையங்கள் திறக்கப்பட வேண்டும். இந்த மாவட்ட பயிற்சி நிலையங்களில் முதலில் 200 பேர் சேர்த்துக் கொள்ளப்படலாம். பின்னர், நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில், இந்த எண்ணிக்கையை, பெரிய மாவட்டங்களாயிருந்தால் 1,000 ஆகவும் சிறு மாவட்டங்களாயிருந்தால் 500 ஆகவும் உயர்த்தலாம்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்.

இக்கழகம், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தனிப்பட்ட நபர்களுக்கும் அவர்களால் ஏற்படுத்தப்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உதவுவதற்காக அமைக்கப் பட்டதாகும். இக்கழகம், தனிப்பட்ட நபர்களுக்கு மொத்த முதலீட்டில் 20 சதவீதத்திற்கு மேற்படாத தொகையை (ரூ. 5,000 என்னும் உயரளவுக்குட்பட்டு) தொடக்க உதவித் தொகையாக வழங்குகிறது. கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரையில் ரூ. 25,000 என்னும் உயரளவுக்கு உட்பட்டு தொடக்க உதவித் தொகை வழங்கப்படுகிறது. இக்கழகம் தொடக்க உதவித் தொகை வழங்கும் பட்சத்தில் எஞ்சிய 80 சதவீதத் தொகையை தனியார் நிதி ஆதாரங்களிலிருந்து அல்லது நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் அல்லது கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து பெற்றுத் தரவும் இக்கழகம் ஏற்பாடு செய்கிறது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தனிப்பட்ட நபர்களுக்கு அளிக்கப்படும் உதவியை நிறுத்திவிடுவது என்னும் செயற்குறிப்பு முறையானதோ நியாயமானதோ அல்ல. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத் திட்டத்தின் கீழ் கடன் வாங்குவோருக்கு உதவித் தொகை அளிக்கப்படுவதுபோலவே, இக் கழகமும் உதவித் தொகை அளிக்க வேண்டும். கடன் வழங்குகின்ற வங்கியின் மூலமாகவே தொடக்க உதவித் தொகையும், உதவித் தொகையும் வழங்கப்பட வேண்டும். இக் கழகத்திற்கு, பங்கு மூலதனமாக அனுமதிக்கப்பட்ட ரூ. 10 கோடியை வழங்க வேண்டும். இதைத் தவிர, 20 அம்ச திட்டத்தின்கீழ் கிடைக்கின்ற நிதியையும் இக்கழகம் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். இக்கழகம் வழங்குகிற 20 சதவீதத் தொடக்க உதவித் தொகை போக எஞ்சிய 80 சதவீதத் தொகையும் குறைந்த வட்டிக்குக் கடனாகக் கிடைக்க இக்கழகம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இக்கழகத்தின் செயல்பாட்டைச் சீரமைத்து திறமையைப் பெருக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு குறைந்தது இன்னும் மூன்று ஆண்டுகளாவது உள்ள மாவட்ட வருவாய் அதிகாரி ஒருவரை பொது மேலாளராக நியமிக்க வேண்டும். பிற்படுத்தப்பட்ட நலத் துறை இயக்குநர் அலுவலால் இக்கழகத்தின் நிர்வாக இயக்குநராக இருக்க வேண்டும். இதனால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறை இயக்குநர் தன் கட்டுப்பாட்டின் கீழ்வரும் மாவட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நல அதிகாரிகளையும் அவர்களின் பணியாளர்களையும் பயன்படுத்திக் கொள்ள முடியும். இக் கழகத்தின் திட்டங்கள் பற்றி கள ஆய்வு நடத்துவதற்காக, தற்போதைய பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். ஒரு மூத்த இ.ஆ.ப. அதிகாரி இக்கழகத்தின் தலைவராக இருக்க வேண்டும். இக் கழகம் சம்பந்தப்பட்ட பொருள்களைப் பொறுத்தவரையில் இவர் அலுவலால் அரசு கூடுதல் செயலாளராகவும் இருக்கலாம்.

அரசு தலைமைச் செயலாளர், இக்கழகத்திற்குள்ள தொடக்க நிலை இடர்பாடுகள், பிரச்சினைகள் ஆகியன குறித்து பரிசீலனைசெய்து உடனடியாகத் தீர்த்து வைக்க வேண்டும்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறையை வலுப்படுத்துதல் :

படிப்புதவித் தொகைகள் சம்பந்தப்பட்ட தணிக்கை மறுப்புகளைத் தீர்த்து வைப்பது தொடர்பாக, இயக்குநர் அலுவலகத்தில் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற நடைமுறை மனநிறைவு அளிப்பதாக இல்லை. இப்பணிக்கென தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்த வேண்டியது அவசியம்.

மாணவர் இல்லங்களில் எண்ணிக்கை உயர்த்துவிட்ட காரணத்தால் ஏற்பட்டுள்ள பணிச்சுமையைச் சமாளிக்கவும் மாணவர் இல்லங்கள், பள்ளிகள், படிப்புதவித் தொகைகள் தொடர்பான கணக்குகளைத் தணிக்கை செய்யவும், இரண்டாவது உள்தணிக்கைக் குழு ஒன்று ஏற்படுத்த வேண்டும்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறையைச் சேர்ந்த மாவட்ட அலுவலகங் களின் பணியாளர்கள் தற்போது வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கிறார்கள். இவர்களை பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வர வேண்டும்.

படிப்புதவித் தொகை தொடர்பான பணிகளுக்காக, மாவட்டங்களில், அவ்வப் போது தற்காலிகமாகப் பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அப்பணிகள் முடியும் முன்னரே அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுவிடுகிறார்கள். எனவே, இப் பணிகளுக்கென போதிய அளவில் முறையான பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 15(4) மற்றும் 16(4) பிரிவுகளின் கீழ் அளிக்கப்படும் இட ஒதுக்கீட்டு திட்டமும் / ஏனைய இட்டங்களும் முறையாகச் செயற்படுத்தப் படுகின்றனதாவெனக் கண்காணிப்பதற்காக, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறை இயக்குநர் அலுவலகத்தில், புள்ளியியல் இணை இயக்குநர் ஒருவரின் தலைமை யினால் ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்.

குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதிகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ள சாதிகளை மாற்றிச் சீரமைத்தல் :

தற்போது பல்வேறு முன்னிணைப்புகளுடன் கூடிய 27 கொறவன் சாதிகள் உள்ளன. கொறவன் என்பதும் குறவன் என்பதும் ஒரே சாதியையே குறிக்கின்ற வேறுவேறு பெயர்கள் என்பதாலும் குறவன் என்ற சாதி ஏற்கெனவே ஆதி திராவிடர் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாலும் கொறவன் சம்பந்தப்பட்ட பல்வேறு முன்னிணைப்புகளுடன் கூடிய 27 பதிவுகளும், நாம் தயாரிக்கும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் இடம் பெற வேண்டுமென்ற அவசியமில்லை. எனவே, அவற்றை குற்றப்பரம்பரை யினர் பட்டியலிலிருந்து நீக்கி, அதன் மூலம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலி லிருந்தும் நீக்க வழிகோலலாம்.

''வெங்கனூர் ஆதி திராவிடர்'', ''வேப்பூர் பறையர்'', ஆகிய இரண்டு சாதிகளும் முறையே ''ஆதி திராவிடர்'' சாதியையும், 'பறையர்' சாதியையும் சேர்த்தவையாகும். இவ்விரண்டு சாதிகளுமே பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவை அல்ல. எனவே, இக்குழு தயாரித்த பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் அவ்விரு சாதிகளும் சேர்க்கப்படவில்லை. குற்றப்பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதி யினர் பட்டியலிலிருந்தும் அவை நீக்கப்படும்.

குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதியினர் **பட்டியலில் உள்ள** எஞ்சிய 41 சாதிகளையும் மீற்க்கண்ட 20 முதன்மையான சாதிகளுக்குள் அடக்கித் தொகுக்கலாம் :—

1. போயர்கள், ஒட்டர்கள்
2. மறவர்கள்
3. கள்ளர்கள் (பிரமலைக் கள்ளர் உட்பட)
4. வலையர்கள், அம்பலக்காரர்கள்
5. வேட்டுவக் கவுண்டர்
6. தாசரிகள்
7. டொம்மாரா, டோம்ப

8. ஜோகி

9. ஜாம்பவானோடை

10. முட்லகும்பட்டி

11. நோக்கர்

12. படையாச்சி

13. தெலுங்குபட்டிச் செட்டி

14. தொட்டிய நாயக்கர்

15. ஊராளி கவுண்டர்

16. வேட்டைக்காரர்

17. மொண்ட் கொல்லா

18. காலாடி

19. சக்களா

20. தேவகுடி தலையாரிகள்.

இவ்வாறு மறுதொகுப்புச் செய்யப்பட்ட 20 சாதிகளில், கீழ்க்கண்ட மூன்று சாதிகள் நீங்கலாக மற்ற எல்லாச் சாதிகளுமே, ஏற்கெனவே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன:—

1. சக்களா

2. தேவகுடி தலையாரி

3. காலாடி.

அவற்றை இக்குழு தயாரித்தளிக்கும் திருத்தவடிவிலான பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம்.

தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் இடம்பெற்றுள்ள சில சாதிகள் பற்றி இக்குழுவின் பரிந்துரைகள் :

நரிக்குறவர்கள் (குறியீட்டெண் 124) :

''நரிக்குறவர்களை'' பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் எனப் பரிந்துரைத்து மாநில அரசு ஏற்கெனவே மத்திய அரசுக்கு எழுதியுள்ளது. இச் செயற்குறிப்பு நெடுங்காலமாக மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இது குறித்து மாநில அரசு முனைப்புடன் தொடர் நடவடிக்கைகள் எடுக்கலாம்.

பாமுலு (குறியீட்டெண் 248) :

பாமுலு, பாம்பு பிடிக்கும் குறவர் இனத்தைச் சேர்ந்த ஒரு வகுப்பாகும். இவர்கள், பொது இடங்களில் பாம்புகளை வைத்து, வித்தைகள் காட்டி பிழைப்பு நடத்தி வருகிறார்கள். (தர்ஸ்டனின் ''தென்னிந்தியாவின் சாதிகள் பழங்குடிகள்'' என்னும் நூலின் தொகுதி VI பக்கம் 29 ஐக் காண்க). இச்சாதி, (ஆதி திராவிடர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள) மால (Mala) சாதியின் புறமணக் கட்டுடைய ஒரு பிரிவாகும். இவற்றைக் கொண்டு பார்க்கும்போது, இது, ஆதி திராவிடர் பட்டியலில் சேர்க்கப்படுவதற்குத் தகுதியான ஒரு சாதியாகும். எனவே, இச்சாதியை ஆதி திராவிடர் பட்டியலில் சேர்க்குமாறு பரிந்துரைத்து மத்திய அரசுக்கு எழுதலாம்.

எருகுலா (குறியீட்டெண் 281) :

எருகுலா என்பது 'குறவன்' என்ற பெயரின் தெலுங்கு வடிவமாகும். இதுபற்றி, சாதிகள்/இனங்கள் பற்றிய குறிப்போவியம் என்ற தலைப்பில், குறியீட்டெண் 281-இன் கீழ் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. குறவன் என்னும் சாதி தற்போது ஆதி திராவிடர் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இவற்றையெல்லாம் எடுத்துக்கூறி, 'எருகுலா' சாதியையும் ஆதி திராவிடர் பட்டியலில் சேர்க்குமாறு பரிந்துரைத்து மத்திய அரசுக்கு எழுதலாம்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு தற்போது ஒழுக்காணும் சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன :

(i) 'நேரடியாக நியமிக்கப்பட்டவர்' என்ற சொற்றொடருக்கான பொருள் விளக்கத்தின்படி, ஒரு நபர், மத்திய அல்லது ஒரு மாநில அரசுப் பணியில் முதன் முறையாக நியமிக்கப்பட்டு ஐந்தாண்டு காலம் முடியவில்லையானால், அவர் அப் பணியில் இல்லாதவராகவே கருதப்பட வேண்டும். ஆனால், இந்த ஐந்து ஆண்டு என்னும் கால வரையறை பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்களுக்குப் பொருந்தாது.

(ii) பல்வேறு பதவிகளுக்கான ஆட் தேர்வுக்கு விண்ணப்பிக்கும்போது செலுத்த வேண்டிய கட்டணங்களை பொறுத்தவரையில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதல் மூன்று வாய்ப்புகளுக்கு எந்தக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.

(iii) பல்வேறு பதவிகளுக்கும் பணிகளுக்கும் ஆட்சேர்க்கும்போது, பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பினின்று முழு விதி விலக்கு அளிக்கப்படுகிறது. அல்லது வயது வரம்பு உயர்த்தி நிர்ணயிக்கப்படுகிறது.

(iv) சில பணிகளைச் சேர்ந்த ஒரு சில பதவிகளுக்கு ஆட் சேர்க்கும் போது, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு தகுதிகள் குறைத்து நிர்ணயிக்கப்படுகின்றன.

(v) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு, மாநிலப் பணிகளைச் சேர்ந்த சில பதவிகளுக்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடையேயிருந்து ஆட்களைத் தெரிவு செய்யும்போது, தகுதிபெறுவதற்கான குறைந்த அளவு மதிப்பெண்ணைக் குறைத்து நிர்ணயிக்கிறது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தற்போது அனுபவித்து வரும் இச் சலுகைகளையும் இன்னும் பிற சலுகைகளும் அவர்களுக்குத் தொடர்ந்து அளிக்கப்பட வேண்டும்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்ற திற்காக மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளைக் எடுத்து வந்துள்ளது. ஒரு சாதி/வகுப்பின் சமூக மற்றும் கல்வி நிலை வரையறுத்த மாநிலச் சராசரி அளவைவிட அதிகரிக்கும்போது, தாமாகவே, அச்சாதி/வகுப்பு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு, இட ஒதுக்கீட்டுச் சலுகை பெற தகுதியற்றதாக்கப்பட வேண்டும். குறித்த காலத்திற்கொரு முறை, (பத்தாண்டுகளுக்கு மிகாமல்) இவ்வாறு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலை விரிவாகவும் அறிவியல் பூர்வ மாகவும் மறு ஆய்வு செய்து முன்னேற்றமடைந்த சாதிகளை பட்டியலிலிருந்து நீக்க னால்தான் இது சாத்தியமாகும். எனவே, இத்தகைய மறு ஆய்வுகள், குறித்த காலத்திற்கொரு முறை செய்யப்பட வேண்டுமென இக் குழு பரிந்துரைக்கிறது. ஒரு சாதி/வகுப்பின் சமூக, கல்வி நிலை வரையறுக்கப்பட்ட மாநிலச் சராசரியைவிட உயரும்போது அது தானாகவே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து விடு பட்டு விடுகிறது என்பதே இப் பரிந்துரையின் நிறப்பம்சமாகும்.

(ஒப்பம்)
(ஜெ. அ. அம்பாசங்கர்),
தலைவர்.

உறுப்பினர்கள் :

திருவாளர்கள் :

2. ஜி. விஸ்வநாதன்.
3. வி. வி. சுவாமிநாதன், எம்.எல்.ஏ.
4. எஸ். ஆண்டித் தேவர்,
5. ப. நெடுமாறன்.
6. அன்பில் தருமலிங்கம்.
7. குமரி அனந்தன், எம்.எல்.ஏ.
8. எம். ஜான் வின்சென்ட், எம்.எல்.ஏ.,
9. கே. லியாகத் அலிகான்.
10. டாக்டர் கோ. சமரசம், எம்.எல்.ஏ.

திருவாளர்கள் :

11. திருமதி சௌந்தரா கைலாசம்.

12. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரிப்.

13. ஜி. மூர்த்தி.

14. எஸ். கோபாலகிருஷ்ண யாதவ்.

15. குழ. செல்லையா.

16. டி. இராமசாமி, எம்.எல்.ஏ.

17. ஐ. டி. ஜவஹர் ராஜ்.

18. எம். கே. பாலசுப்பிரமணியம், இ.ஆ.ப. (ஓய்வு).

19. எஸ். கே. பாலகிருஷ்ணன்.

20. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இயக்குநர், உறுப்பினர்—செயலாளர்

21. அரசு இணைச் செயலாளர், சட்டத் துறை, கூடுதல் உறுப்பினர்—செயலானர்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு உறுப்பினர்கள் அளித்த கடிதங்களும் அவை குறித்த கருத்தும்.

இணைப்பு—1

குழு உறுப்பினர் திரு வி. வி. சுவாமிநாதன் அவர்களிடமிருந்து வரப்பெற்ற 22–11–1986 ஆம் நாளிட்ட கடிதத்தின் நகல்:

பெறுநர் :

தலைவர்,
இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு.

அன்புடையீர்,

''இட ஒதுக்கீட்டிற்கு ஒரு வரம்பு'' என்று தலைப்பிட்ட தங்களின் குறிப்பிற்குப் பதிலளிக்கும் வகையில் என்னுடைய கருத்துக்களை இங்கே தெரிவித்துள்ளேன்.

1963ஆம் ஆண்டில் பாலாஜி வழக்கில்[1] அளிக்கப்பட்ட தீர்ப்பு குறித்து 1976ஆம் ஆண்டில், கேரளாவிற்கும், என். எம். தாமஸ் என்பவருக்குமிடையே நடைபெற்ற வழக்கில் விவாதிக்கப்பட்டது. அவ் வழக்கில் தீர்ப்பளிக்கும்போது நீதிபதி ஃபசல் அலி அவர்கள், மக்கள் தொகையில் 80 சதவீதத்தினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இருக்கின்ற ஒரு மாநிலத்தின் அரசு, அவர்களுக்காக 80 சதவீதப் பதவிகளை ஒதுக்கீடு செய்யுமாயின், அது, அனுமதிக்கத் தக்க அளவை மீறியதாகும் என்று கூற முடியாது'' எனத் தெரிவித்த கருத்து, ''தீர்ப்பிடைக் கருத்து'' (obiter dicta) அல்ல. இந்த தாமஸ் வழக்கை உச்ச நீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் அடங்கிய முழு ஆயம் (full bench) விசாரித்தது. இது உச்ச நீதிமன்றத்தின் பெரும்பான்மையான தீர்ப்பாகும். நீதிபதி ஃபசல் அலி அவர்களின் கருத்தை நீதிபதி கிருஷ்ணய்யர் அவர்களும் ஆதரித்துள்ளார். இதுதான், இந்த வகையில் உச்ச நீதிமன்றம் அளித்த கடைசித் தீர்ப்பாகும். இதுவரை, உச்ச நீதிமன்றத்தில், இத் தீர்ப்பைத் தள்ளுபடி செய்து வேறெந்த தீர்ப்பும் அளிக்கப்படவில்லை.

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் மக்கட் தொகை 68 சதவீத மென்றால் அவ் வகுப்பினருக்காக மட்டும் 68 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டுமென நம்முடைய குழு பரிந்துரை செய்யவேண்டும்.

1979 ஆம் ஆண்டு நிலவரப்படி தமிழ்நாட்டின் விரித்துக் கணக்கிடப்பட்ட மக்கட் தொகை 54 சதவீதம் ஆகும். கல்வி, வேலைவாய்ப்பு வசதிகள் ஆகியவற்றில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு செய்யும் விஷயத்தில் நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தின் 15(4) ஆம் பிரிவு வரம்பு எதையும் நிர்ணயிக்கவில்லை.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் மேலும் மேலும் அதிக சாதிகள் சேர்க்கப்பட்டு வருவதாலும், அதே நேரத்தில் தமிழ்நாட்டின் மக்கட் தொகையும் அதிகரித்து வருவதாலும், இட ஒதுக்கீட்டின் அளவையும் உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல, நீதிபதி ஃபசல் அலியின் தீர்ப்பு, ''தீர்ப் பிடைக் கருத்து'' அல்ல. இது ''தீர்ப்பிடைக் கருத்தே'' என்று எவரேனும் கருதினால் கூட உச்ச நீதிமன்றத்தின் ''தீர்ப்பிடைக் கருத்து'' கட்டுப்படுத்தக் கூடியதுதான். 1958 AP./173 (FH) 1955 பம்பாய் 220 FB 1959 SC 814 ஆகிய வழக்குகளை இதற்கு மேற்கோள் காட்டலாம்.

மேலும் எஸ். சிவசுப்பிரமணியம் என்பவருக்கும் தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்குநருக்குமிடையேயான ஒரு வழக்கில் (ரிட் மனு எண் 6425-6961/1980) நீதிபதி மோகன் அவர்கள், தாமஸ் வழக்கையும், பாலாஜி வழக்கையும் முழுமையாக ஆராய்த் துள்ளார். அவர் 13–1–1981 ஆம் நாளிட்ட தன்னுடைய தீர்ப்பில் நீதிபதி ஃபசல் அலி அவர்களின் கருத்தை ஆதரித்துள்ளார். நம்முடைய உயர் நீதிமன்றம் கடையாக அளித்த இத்தீர்ப்பும் எனக்கு சாதகமாகவே உள்ளது. இதனை எதிர்த்து மேல் முறையீடு எதுவும் செய்யப்படவில்லை.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு 50 சதவீதத்திற்கு மேற்படக் கூடாது என்று திட்டவட்டமான கொள்கை (axiomatic) எதுவும் இல்லை யென்று நீதிபதி மோகன் கூறுகிறார். மேலும் அவர், உச்சநீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகள் கொண்ட ஓர் ஆயம் அளித்த தீர்ப்பு, அந் நாட்டின் சட்டமாகும் என்றும் இதற்கு முரணாக தெரிவிக்கப்படும் கருத்து சரியான சட்டமாக அமையமுடியாது என்று தீர்ப்பளிக்கப்பட வேண்டுமென்றும் நீதிபதி கிருஷ்ணய்யர் அவர்கள் தெரிவித்த கருத்தையும் மேற்கோள் காட்டுகிறார். ஆகையால் மக்கட் தொகை வாரியாக இட ஒதுக்கீட்டின் சதவீதத்தை உயர்த்தலாம்.

ஒரு கால கட்டத்தில் சில தீர்ப்புகளில் வரையறுக்கப்பட்ட 50 சதவீதம் என்ற கணித வகையிலான வரம்பை எப்போதுமே விடாமல் பிடித்துக் கொண்டிருக்க முடியாது என்ற நீதிபதி ஃபசல் அலி அவர்களின் கருத்தை தான் ஏற்றுக் கொள்வதாக நீதிபதி கிருஷ்ணய்யர் தெளிவுபடக் கூறியுள்ளார்.

நீதிபதி ஃபசல் அலி அவர்களின் தீர்ப்பு, அவருடைய வெறும் கருத்தே என்று கூற உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை. உச்ச நீதிமன்றத்தின் ''தீர்ப்பிடைக் கருத்து'' கூட உயர் நீதிமன்றத்தைக் கட்டுப்படுத்தக் கூடியதே. எனவே சமூக நலத் துறையின் 1-2 1980 ஆம் நாளிட்ட 72 மற்றும் 73ஆம் எண்களுள்ள அரசாணைகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டளவை 31 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்தியது சரியே என்று நான் உறுதிப்படுத்த வேண்டியது அவசிய மாகிறது'' என்று நீதிபதி மோகன் தீர்ப்பளித்தார்.

தாமஸ் வழக்கில் அவிக்கப்பட்ட தீர்ப்பை ஏ.பி.எஸ்.கே. சங் என்பவருக்கும் மத்திய அரசுக்குமிடையே (ரயில்வே) யான வழக்கின் தீர்ப்பும் ஆதரிக்கிறது. 1980 ''பணிச்சட்ட காலமுறை ஏடு 743 அல்லது தொழிலாளர் நலன் தொழில்கள் வழக்கு 12/1325.

நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களில் ஒருவராகக் கருதப் படுகின்ற டாக்டர் அம்பேத்கார் அவர்கள், நாடாளு மன்றத்தில் உரையாற்றுகின்ற போது ''அரியலமைப்புச் சட்டத்தை ஒழிக்கக் கூடிய முதல் ஆளாக நான் இருப்பேன்'' எவ்வு கூறியதை என்னால் மறக்க முடியாது. அரசியல் நிர்ணய சபையில் அவர் கூறியவற்றை ஏற்றுக் கொள்ள நான் தயாராக இல்லை. ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்பதில் தான் அவர் அதிக அக்கறை கொண்டிருந்தார். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு இட ஒதுக்கீடு செய்வதற்காக அரசியலமைப்புச் சட்டத்தில் விதித் துறைகளை ஏற்படுத்த வேண்டுமென்பது பற்றி எவருமே கவலைப்படவில்லை.

நம்முடைய குழு, ஒரு நீதிமன்றம் அல்ல. இது தகவல்களை சேகரித்தறிந்து எடுத்துரைக்கும் ஓர் உயர்மட்டக் குழுவே ஆகும். ஆகையால், நாம் 50 சதவீத இட ஒதுக்கீட்டை நியாயப்படுத்துவதோடன்றி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 68 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க வேண்டுமென்றும் பரிந்துரை செய்ய வேண்டும். இதனை ஏற்றுக் கொள்வது குறித்த முடிவை அரசிடம் விட்டுவிடலாம். இட ஒதுக்கீட்டு சத வீதத்தை எதிர்த்து எவரேனும் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தால், அதை எதிர்த்து வாதாடுவதற்கு வேண்டிய வலிமையையும் அதிகாரத்தையும் நாம் மாநில அரசுக்கு அளிக்க வேண்டும். சமநிலையில் உள்ளவர்களிடையே அல்லது சமுதாயத்தில் ஒரே நிலையில் வாழ்பவர்களிடையேதான் சமத்துவத்தைப் பற்றி பேசமுடியும்.

தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்)

வி.ஃ வி. சுவாமிநாதன்.

நகல்.

சென்னை,
7-2-1985

அனுப்புதல்

அடியில் கையொப்பமிட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பு
இரண்டாவது விசாரணைக்குழு உறுப்பினர்கள்,
தமிழக அரசு.

பெறுதல்

உயர்திரு தலைவர் அவர்கள்,
பிற்படுத்தப்பட்ட வகுப்பு. இரண்டாவது விசாரணைக் குழு,
தமிழக அரசு.

ஐயா,

தமிழ் நாட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு கல்வி நிறுவனங்களில் மற்றும் வேலைவாய்ப்புகளில் இடம் ஒதுக்கும் சதவிகித எல்லைப் பற்றி மேற்கண்டவாறு எங்கள் அபிப்பிராயத்தை தெரிவித்த அதை நமது குழு இறுதி அறிக்கையில் சேர்க்க கேட்டுக் கொள்கிறோம்.

அரசியல் சாசனத்தில் ஆர்டிகிள் 15(4) மற்றும் 16(4)-ன் கீழ் எத்தனை சதவிகிதம் ஒதுக்க வேண்டும் என்று எல்லை நிர்ணயிக்கப்படவில்லை. 1963-ல் ''பாலாஜி'' வழக்கில் தான் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 68 சதவீதம் இடம் ஒதுக்கியது செல்லாது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது. 'தேவதாசன்' வழக்கில் சுப்ரீம் கோர்ட் 1964-ல் சாதாரணமாக இட ஒதுக்கீடு 50 சதவீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்று தீர்ப்பளித்தது. அனால் 1976ல் சுப்ரீம் கோர்ட் ''தாமஸ்'' வழக்கில் பிற்படுத்தப்பட்ட மக்களது தொகை 80 சதவீதம் இருக்குமானால் அவர்களுக்கு 80 சதவீதம் இடம் அரசு பணிகளில் ஒதுக்குவது சட்டவிரோதமாகாது என்று தீர்ப்பளித்தது. இது பெரும் பான்மையான 7 நீதிபதிகள் அளித்த தீர்ப்பாகும். நீதிபதி சுப்பல் அலி தீர்ப்பு எங்களுக்கு கொடுக்கப்பட்ட குறிப்பில் கூறுவது போல ''ஆபிட்டர் டிக்டா'' அல்ல. அது 'நேரியோ டெசிடெண்டு' யாகும். ஒருக்கால் குறிப்பில் சொல்வது போல அது ஆபிட்டர் டிக்டா என்று வாதத்திற்கு ஒப்புக்கொண்டால் கூட சுப்ரீம் கோர்ட்டின் ஆபிட்டர் டிக்டா உயர்நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும். எல்லாவற்றிற்கும் மேலாக சென்னை உயர்நீதிமன்றத்தில் 13–1–1981 நீதிபதி மோகன் அவர்கள் ''சிவசுப்பிரமணியம்'' வழக்கில் அளித்த தீர்ப்பு தமிழக அரசு ஆணை எண் 72/1980 அதாவது பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 50 சதவீதம் ஒதுக்கியது செல்லாது என்று சிலர் போட்ட வழக்கில் 'பாலாஜி' 'தாமஸ்' போன்ற வழக்குகளில் சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்புகளை எல்லாம் அலசி, ஆராய்ந்து பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவீதம் இடம் ஒதுக்கியது கட்டாயமாக செல்லும் என்று தீர்ப்பளிப்பதோடு 50 சதவீதத்திற்கு மேல் இடம் ஒதுக்க கூடாது என்று சொல்ல முடியாது என்றும் அழுத்தம் திருத்தமாக தீர்ப்பளித்திருக்கின்றார்.

'தாமஸ்' வழக்கில் பெரும்பான்மையான நீதிபதிகள் அளித்த சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்கு மாறாக இது வரை வேறு தீர்ப்பு கூறப்படவில்லை. அத்துடன் 13–1–1981 சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதி மோகன் அளித்த தீர்ப்பு இதுவரை (7–2–1985) இறுதியான தீர்ப்பாக இருக்கிறது. அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்கு மேல் முறையீடு செய்யப்படவில்லை.

'தாமஸ்' வழக்கில் சுப்ரீம் கோர்ட நீதிபதி பசல் அலி மெஜாரிடி தீர்ப்பு பிரகாரமும் 13–1–1981 சென்னை ஹைகோர்ட் நீதிபதி மோகன் அளித்த தீர்ப்பு பிரகாரமும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு இட ஒதுக்கீடு சதவிகிதம் இருக்க வேண்டும். நமது விசாரணைக் குழு ஏற்படுவதற்கு காரணமாயிருந்த வழக்கில் கூட 50 சதவீதம் இட ஒதுக்கீடு பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருக்கு செய்தது சட்டப்படி செல்லாது என்று எங்களுக்கு தரப்பட்ட குறிப்பில் வாதிடுவது போல உண்மையாக இருந்திருக்குமானால், சுப்ரீம் கோர்ட் 50 சதவீதம் இட ஒதுக்கீடு செய்த தமிழக அரசின் ஆணை செல்லாது என்று எளிதில் தீர்ப்பளித்திருக்கும். ஏன், கே. பி. சங்கரன் போன்ற வழக்குரைஞர்கள் சட்டப்படி முடியுமானால் தீர்ப்பளிக்க செய்திருப்பார்கள். வழக்கில் தமிழக அரசு தரப்பில் வாதிடும் போது 1979ஆம் ஆண்டு தமிழ் நாட்டின் மொத்த எண்ணிக்கையில் பிற்படுத்தப்பட்ட மக்கள் எண்ணிக்கை 54 சதவீதம் என்று வாதிட்டதினால்தான் பிற்படுத்தப்பட்ட மக்கள் தொகை விகிதாசாரப்படி 50 சதவீதம் இட ஒதுக்கீடு குறைவாக இருந்தால் (கே. வி. சங்கரன்) போன்ற வழக்கறிஞர்கள் தங்கள் வாதத்தை வேறு விதமாக திருப்பினார்கள். அதாவது தற்போதுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்புக்களில் சில வகுப்புகள் முன்னேறிவிட்டன. அந்த வகுப்புகளின் பெயர்களை அடையாளம் கண்டுபிடித்து எடுத்து விட்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் தற்போதைய பட்டியலை விஞ்ஞான அடிப்படையில் திருத்தப்பட வேண்டும் என்று வாதிட்டார்கள். சூட்சமம் என்னவென்றால் சில பிற்பட்ட வகுப்புகளை முற்போக்கு அடைந்துவிட்டது என்று பிற்படுத்தப்பட்ட வகுப்புகளில் இரண்டாவது விசாரணைக்குழு எடுத்து விட்டால் தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் சதவிகிதம் 50 சதவீதத்திற்கு குறையலாம் என்பது அவர்களின் கணிப்பு அல்லது கற்பனை. கே. வி. சங்கரன் போன்ற வழக்கறிஞர்கள் வாதத்தால் கூட சுப்ரீம் கோர்ட்டில், சென்னை உயர்நீதிமன்றத்தில் சாதிக்க முடியாததை நமது அறிக்கையில் சாதிக்க ஒரு போதும் நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

நமது சமூக நீதிமன்றமல்ல. நமது அறிக்கையும் இறுதியானதல்ல. நமது அறிக்கை மீது தமிழக அரசு எடுக்கிற முடிவு தான் இறுதியானது. 'தாமஸ்' வழக்கில் அறிவிக்கப்பட்ட சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு 'சிவ சுப்பிரமணியம்' வழக்கில் சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பு ஆகியவைகளை நமக்கு சாதகமாக்கி கொள்ள வேண்டும். தவிர மேற்படி தீர்ப்புகளுக்கு எதிராக நாங்கள் செய்வது போல விமர்சனம் செய்வது 'சுப்ரீம் கோர்ட்' சென்னை உயர்நீதிமன்றம்' இரண்டையும் அவமதித்த குற்றத்திற்கு ஆளாவதாகும். அதை நாங்கள் செய்யத் தயாராக இல்லை என்பது மாத்திரமல்ல, அப்படி செய்வது 'பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு' செய்யும் பாவமாக, துரோகமாக காண்கிறோம்.

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பிற்படுத்தப்பட்ட மக்கள் எண்ணிக்கை 1970-ல் 52 சதவீதம் ஆகவும் 1979-ல் 54 சதவீதமாகவும் நாம் விஞ்ஞான அடிப்படையில் 1984-ல் எடுத்த கணக்கு பிரகாரம் 67.15 சதவீதமாகவும் இருக்கிறது- ''ஜன்பகம் துரைராசன்'' ''பாலாஜி'' தீர்ப்பின்போதெல்லாம் பிற்படுத்தப்பட்ட வகுப்பு நலனை நிலை நாட்டக் கூடிய வழக்கறிஞர்கள் இல்லாமல் இருந்திருக்கலாம். அல்லது 'பிற்படுத்தப்பட்ட மக்கள் எண்ணிக்கை பற்றி விபரம் கிடைக்காமல் அதன் அடிப்படை முக்கியத்துவத்தை வலியுறுத்த தவறியிருக்கலாம். எல்லாவற்றையும்விட சில நேரங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் நலனில் மாறுபட்ட தவறான கொள்கை உடையவர்கள் மக்கள் தொகை சதவீதத்திற்கு ஏற்றவாறு ஆதிதிராவிடர் மலைவாழ் குடியினருக்கு ஒதுக்கப்பட்ட இட ஒதுக்கீடு சதவிகிதத்தை பாதுகாப்பதில் காட்டும் அக்கறையை பொதுவாக பல நூற்றாண்டுகளாக பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் நலனில், முன்னேற்றத்தில் காட்ட சில நீதிபதிகள் தயார் இல்லாமல் இருக்கலாம் அல்லது தயங்கலாம்.

உண்மைகளை, புள்ளி விவரங்களை கண்டுபிடித்து பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்ட நமது குழு தற்போது பிற்படுத்தப்பட்ட மக்களின் சதவிகிதம் 67.15 சதவிகிதம் என்றால் பிற்படுத்தப்பட்ட மக்களை கல்வித் துறையிலும், சமூகத்திலும் மிகப் பலவீனமாக இருக்கும் வகுப்பினருக்கு இந்தியா சுதந்திரம் பெற்ற பின்பு குறிப்பிட்ட காலத்திற்குள் முன்னேற / மற்ற முன்னேற்றம் அடைந்துள்ள சமூகத்தினருடன் சமமாக வாழ்க்கையில் போட்டியிட்டு முன்னேற இந்திய அரசு அரசியல் சாசனத்தில் ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் இட ஒதுக்கீடு போன்ற சலுகைகளை அரசியல் சாசனத்தில் செய்யாததாலும், நிதி ஒதுக்காததாலும், அதிக வேலைவாய்ப்புகள் முதலீடுகள் செலவுகள் பல கோடி செய்யப்படும். மத்திய அரசு ஸ்தாபனங்கள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஈடு செய்யக்கூடிய பிறப்பு சலுகைகளை மத்திய அரசு செய்கிற வரை நாம் நமது மாநில மொத்த மக்கள் எண்ணிக்கையில் 67 சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு அரசியல் சாசனம் ஆர்டிகள் 15(4). 16(4) இரண்டின் மீதும் இட ஒதுக்கீடு செய்வது சமூகத்தில் சமநீதி வளர தவிர்க்க முடியாதுதொரு அவசியமும், அவசரமும் ஆகும் என்றும் ஏற்கெனவே செய்த ஒதுக்கீடு 50 சதவிகிதம் போதாது என்றும் தமிழக அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

நமது பரிந்துரை மீது தமிழக அரசு முடிவு எடுக்க வேண்டும். அந்த முடிவின் மீது யாராவது எதிர்த்து வழக்கு போட்டால் அதை எதிர்த்து வழக்காடுவது அரசின் கடமை. கோர்ட் பாதகமாக ஒருக்கால் தீர்ப்பளித்தாலும் அதற்கு பிறகு 67 சதவீதத்திற்கு மேல் உள்ள மக்களின் நலனை எப்படி வளர்க்க வேண்டுமென்பதில், அக்கறை உள்ள நமது அரசும் மக்களும் ஏற்கெனவே 'சண்பகம் துரைராசன்' வழக்கின் தீர்ப்பின் விளைவை ரத்து செய்ய இந்திய அரசியல் சாசனத்தையே திருத்தி நடவடிக்கை எடுத்தது போல எடுப்பார்கள். எனவே நல்ல தீர்ப்புகள் கையில் இருக்கும்போது கற்பனை வழக்குகளில் நமது சுவனத்தை செலுத்த வேண்டியதில்லை என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

விசாரணைக் கமிஷன் சட்டத்தின் கீழ் நமது விசாரணைக் குழுவும் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஒருமித்த அல்லது பெரும்பான்மையான உறுப்பினர்களின் அபிப்பிராயமே இறுதி அறிக்கையில் பிரதிபலிக்க வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

(ஒப்பம்)

வி. வி. கவாமிநாதன்.

(ஒப்பம்)

கோ. சமரசம்.

(ஒப்பம்)

எஸ். கே. பாலகிருஷ்ணன்.

(ஒப்பம்)

குழ. செல்லையா.

(ஒப்பம்)

ஜி. விஸ்வநாதன்.

(ஒப்பம்)

அன்பில் தர்மலிங்கம்.

(உண்மை நகல்)

தலைவருக்காக.

குழு உறுப்பினர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்களிடமிருந்து வரப்பெற்ற 19—11—1984ஆம் நாளிட்ட கடிதத்தின் நகல் :

பெறுநர்:

தலைவர்,
பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு,
27, சர். சி. வி. ராமன் சாலை,
சென்னை-18.

அன்புடையீர்,

கல்வி ரீதியிலான பிற்பட்ட நிலையைத் தீர்மானிக்க மாநில சராசரி அளவிலிருந்து 10 சதவீத வேறுபாட்டு அளவை அளவுகோலாகவும், அறிகுறியாகவும் கொள்வதென தற்காலிகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. என்று 9—11—1984ஆம் நாளன்று நடைபெற்ற கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலை பாதிக்காத சதவீத அளவைத் தான் அளவுகோலாகக் கொள்ள வேண்டுமென அனைத்து உறுப்பினர்களும் விரும்பினர் என்பதுதான் உண்மை.

தலைவரும் கூட, பல்வேறு சதவீத அளவுகளைப் பின்பற்றி, முடிவுகளைக் கணித்து, பின்னர் அது குறித்து உறுப்பினர்களுடன் விவாதிப்பதாக ஒப்புக்கொண்டார்.

15—11—1984ஆம் நாளன்று நடைபெற்ற கூட்டத்தில், கல்வி ரீதியான பிற்பட்ட நிலைக்கான அளவுகோல்கள், அறிகுறிகள் பற்றிய குறிப்பு எங்களுக்கு வழங்கப்பட்டது.

அக்குறிப்பில் கண்டுள்ளதாவது :—

1. 10ஆம் வகுப்பு அல்லது அதற்கு சமமான வகுப்பு மட்டும் தேறியுள்ளவர்களின் சதவீதம், மாநிலச் சராசரியைவிட குறைந்தது, 10 சதவீதமாவது குறைவாக உள்ள சாதிகள்/இனங்கள்.

2. மேல்நிலை வகுப்பு அல்லது அதற்குச் சமமான வகுப்பு மட்டும் தேறியுள்ளவர்களின் சதவீதம் மாநிலச் சராசரியைவிட குறைந்தது 10 சதவீதமாவது குறைவாக உள்ள சாதிகள்/இனங்கள்.

3. தற்குறிகளாக உள்ளவர்களின் சதவீதம் மாநிலச் சராசரியைவிட குறைந்தது 10 சதவீதமாவது அதிகமாக உள்ள சாதிகள்/இனங்கள்.

அல்லது

படிப்பை பாதியில் நிறுத்தியவர்களின் சதவீதம், மாநிலச் சராசரியைவிட குறைந்தது 10 சதவீதமாவது அதிகமாக உள்ள சாதிகள்/இனங்கள்.

இந்த அறிகுறி ஒவ்வொன்றுக்கும் 2 மதிப்பெண்கள் ஒதுக்கப்படலாம்.

15—11—1984ஆம் நாளன்று நிலவிய தவிர்த்தன்மையான சூழ்நிலையின் காரணமாக, இந்த முக்கியமான பிரச்சினை குறித்து விவாதிக்கப்படவில்லை. ஆனால், 15—11—1984ஆம் நாளன்று நடைபெற்ற கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்பில் இது 4வது இனமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய முரண்பாடு எப்படி ஏற்பட்டது என்று தெரியவில்லை.

மாநில சராசரி அளவிலிருந்து 10 சதவீத வேறுபாடு என்பது விரும்பத்தக்கதோ அல்லது நியாயமானதோ அல்ல என்ற எனதுடைய வன்மையான கருத்து வேறுபாட்டை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவர் அவர்கள், உறுதி அளித்தபடி மாநில சராசரியிலிருந்து பல்வேறு வேறுபாட்டு சதவீத அளவுகளைப் பின்பற்றி கணக்கிடப்பட்ட முடிவுகள் குறித்து முழுமையாக விவாதித்து அதற்குப் பின்னரே முடிவு எடுக்க வேண்டும். எனது கருத்து வேறுபாட்டை தெரிவிக்கவே நான் இக்கடிதத்தை எழுதுகிறேன். இதனைப் பதிவு செய்ய வேண்டுகிறேன்.

இணம் 2 :

தலைவரின், 9—11—1984ஆம் நாளிட்ட ஏ2/4178/84ஆம் எண்ணுள்ள நேர்முகக் கடிதத்தைப் பொறுத்த மட்டில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கென தற்போதுள்ள 50 சதவீத இட ஒதுக்கீட்டை எக்காரணத்தை முன்னிட்டும் மாற்றக் கூடாது என்று நான் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன். இக்குழு அமைக்கப்பட்டதன் முக்கிய மான நோக்கமே தற்போதைய சதவீதத்தை நியாயப்படுத்துவதுதான். எச் சூழ்நிலையிலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான 50 சதவீத இட ஒதுக்கீடு

3.2 சதவிதமாகக் குறைக்கப்படக் கூடாது. நம் கைவசமுள்ள புள்ளி விவரங்களைக் கொண்டு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு இவ்வாறு 50 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்கப்படுவதன் பலாபலன்களையும் மக்கட் தொகையில் 13 சதவீதமே உள்ள முற்பட்ட வகுப்பினர் வகிக்கின்ற மேலாதிக்க நிலையையும் தெளிவாக உணர்த்த வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள நிலை துணித் தன்மை வாய்ந்ததாகும். மக்கட் தொகையில் 13 சதவீதம் மட்டுமே உள்ள லெ சுயநல விரும்பிகள் தொழில்நுட்ப, நிருவாக அமைப்புகளைச் சேர்ந்த செல்வாக்கான பதவிகளில் பெரும்பாலானவற்றை ஆக்கிரமித்து வருவதை தற்போது கிடைத்துள்ள புள்ளி விவரங்கள் நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

சர். ஏ. டி. பன்னீர்செல்வம் லண்டன் சென்று வைசிராயின் ஆலோசனைக் குழு உறுப்பினர்களைச் சந்தித்திருந்தால் இந்த முரண்பாடான நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைத்திருப்பார். இந்த வரலாற்று உண்மை இன்றைய இளைய தலைமுறை யினருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டியவர்கள் அதை மறந்துவிடலாகாது.

தற்போதைய 50 சதவீத இட ஒதுக்கீட்டை, இக்குழு, நியாயப்படுத்த வேண்டு மென்றும், தற்போதைய இட ஒதுக்கீட்டளவை குறைக்க பரிந்துரை செய்யக் கூடாது என்றும் நான் பரிந்துரை செய்கிறேன்.

இக் குழு நம்பியிருக்கிற பாலாஜி வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் வலிமை அதற்குப் பின் அளிக்கப்பட்ட தீர்ப்புகளால் குன்றிவிட்டது. தற்போதைய சதவீதத்தை நாம் குறைக்க வேண்டாம். உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், எதிர் வழக்காட அரசுக்கு உதவக் கூடிய வகையில் நமது அறிக்கை அமைய வேண்டும்.

(உண்மை நகல்.)

தங்கள் உண்மையுள்ள,
(ஒப்பம்) அன்பில் தர்மலிங்கம்.

நகல் :

பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவருக்கு அவர் எந்த மதத்தைச் சேர்ந்த வராக இருப்பினும், அதே சாதியை சேர்ந்த இந்துக்களுக்கு அளிக்கப்படுகின்ற அனைத்து சலுகைகளும் வழங்கப்பட வேண்டும்.

(ஒப்பம்) குமரி அனந்தன்.

பெறுநர் :
தலைவர்
பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு.

(உண்மை நகல்.)

நகல் :

பெறுநர்:
தலைவர்
பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு
சென்னை.

அன்புடையீர்,

கீழே கையொப்பம் இட்டுள்ள நாங்கள் பின்வரும் கருத்துக்களை தங்களின் பரிசீலனைக்கு வைக்கிறோம்.

(1) இந்துக்களல்லாத ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைக் கண்டறிவதற்கான அளவு கோல்கள் :—

(i) தீண்டத்தகாதவர்கள் அனைவரும் அதாவது இந்து மதம் அல்லாத பிற மதங்களுக்கு மாறிய ஆதி திராவிடர்கள்;

(ii) தங்களின் பரம்பரைத் தொழிலின் பெயரையே சாதிப் பெயராகக் கொண்ட தொழில் முறை சாதியினர்;

(iii) இந்து மதமல்லாத பிற மதத்திற்கு மாறிய சாதியினர் (அவர்கள் எந்த தலைமுறையில் மதம் மாறியவர்களாக வேண்டுமானாலும் இருக்கலாம்; இந்து மதத்தைச் சேர்ந்த இதே சாதியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்). (உதாரணம்: வண்ணார், மீனவர்கள், பரவர்கள் முதலியன).

(II) இருத்துவ நாடார்களைப் பொறுத்தமட்டில், முதல் கட்ட கல்வி ஆய்வில் அவர்கள் சேர்க்கப்படவில்லை; 1 சதவீத மாதிரி ஆய்வில் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். கிருத்துவ நாடார்களின் மக்கட் தொகை 9 இலட்சம் அளவிற்கு இருக்கும்போது, சுமார் 9 ஆயிரம் பேர்கள் மட்டுமே ஆய்வு செய்யப்பட்டுள்ளனர். ஆகையால், இரண்டாம் கட்ட ஆய்வில் விடைத்த கல்வி நிலை குறித்த புள்ளி விவரங்களைக் கொண்டு இந்தச் சாதியினரின் பிற்பட்ட நிலையை முடிவு செய்யக் கூடாது. தற்போது இக்குழு முடிவு செய்துள்ள அளவுகோல்களின்படி இச் சாதி நீக்கப்படுமாயின், இவர்கள், இந்து மதத்தைச் சேர்ந்த இதே சாதியினருக்குள்ள அந்தஸ்தையே பெறுவர் என்பது சேர்க்கப்பட வேண்டும்.

(III) மாநிலச் சராசரியை பிற்பட்ட நிலையை முடிவு செய்வதற்கான வரையறைப் புள்ளியாகக் கொள்ளலாம்.

ஒம் .....

திரு. எம். ஜான் வின்சென்ட்,
எம்.எல்.ஏ.

ஒம் .....

திரு. ஜி. விஸ்வநாதன்.

ஒம் .....

திரு. ஜி. மூர்த்தி.

ஒம் .....

திரு. எம். கே. பாலசுப்பிரமணியம்,
இ.ஆ.ப. (ஓய்வு) 18-2-1985.

ஒம் .....

திரு. ஜவஹர் ராஜ்.

ஒம் .....

டாக்டர் கோ. சமரசம், எம்.எல்.ஏ.

(உண்மை நகல்)

ஒம் .....

தலைவருக்காக.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. லியாகத் அலிகான், பி.ஏ., எல்.எல்.பி., அவர்களின் 11—1—1985 நாளிட்ட கடிதத்தின் நகல்.

திரு. ஜெ. அ. அம்பாசங்கர்,
தலைவர்,
27, சர்.சி.வி. இராமன் சாலை,
ஆழ்வார்பேட்டை, சென்னை-600 018.

அன்புடையீர்,

பொருள் : குழு—பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு—9—1—1985 மற்றும் 10—1—1985 ஆகிய நாட்களில் நடைபெற்ற குழு கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரல் குறிப்புகள்—வலியுறுத்தலை தளர்த்தும்படி வேண்டுதல்.

பார்வை: கடித எண். அ2/4178/84, நாள் 4—1—1985.

மேலே பார்வையில் குறிப்பிட்ட கடித நகலின் பிரிவு 3-ல் மாநிலத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் (பக்கம் 4) மாணவர் படிப்புதவித் தொகை பெற வேண்டுமானால் அவர் குறைந்தது 90 சதவீத நாட்கள் பள்ளி/கல்லூரிக்கு வந்திருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. இந்த விதியைத் தளர்த்த வேண்டுமென பிற்பட்ட ஏழை, எளிய மாணவர்களின் நலன் கருதி கேட்டுக் கொள்கிறேன்.

படிப்புதவித் தொகை பெறுகின்ற மாணவர்களின் நன்மையை உத்தேசித்துத்தான் இவ் விதியைத் தளர்த்தி 80 சதவீத நாட்கள் பள்ளி/கல்லூரிக்கு வந்திருத்தல் போதுமானது என்பதை நான் வலியுறுத்துகிறேன்.

நன்றி, வணக்கம்.

தங்கள் அன்புள்ள,
(ஒம்)
(கா. லியாகத் அலிகான்)

(உண்மை நகல்.)

டாக்டர் சமரசம், உறுப்பினர் அவர்களின் 26—1—1985 நாளிட்ட கடிதத்தின் நகல்.

பெறுநர் :

திரு. ஜெ. ஏ. அம்பாசங்கர்,
தலைவர்,
தமிழ்நாடு பிற்பட்டோர் நலக் குழு,
ஆழ்வார்பேட்டை, சென்னை-600 018.

அன்புடையீர்,

பொருள் : 67 விழுக்காடு ஒதுக்கீடு பிற்பட்டோர் பட்டியல் சம்பந்தமாக—முடிவு.

இந்திய நாடு பல்வேறு மொழிகள் பேசும் மக்களைக் கொண்டது. அவர்கள் கலாச்சாரத்தினால் வேறுபட்டு உள்ளனர். மத்திய அரசு தாழ்த்தப்பட்ட மக்களை மட்டும் முன்னேற்றுவதில் பல்வேறு சலுகைகள் வழங்கியுள்ளது. மக்களிடையே முற்பட்டோர்களுக்கும் தாழ்த்தப்பட்டோர்களுக்கும் இடையில் ஒரு மாபெரும் சமுதாயம் பல்வேறு பிரிவுகளாக பிற்படுத்தப்பட்ட நிலையில் உள்ளதை அவ்வரசு இதுகாறும் கவனிக்கவில்லை.

ஆனால் சென்னை மாநிலமாக (தமிழ், கேரளம், ஆந்திரம், கன்னடம்) இருந்த நேரத்தில், நீதிக் கட்சியினர் ஆட்சிக் காலத்தில் பெருவாரியான மக்களைக் கொண்ட பிற்பட்டோர் சமுதாயத்தை உயர்த்தி அவர்கள் வாழ்வில் ஏற்றம் காண அனைத்து மக்களும் வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் மூலம் சலுகைகள் பெற்று முன்னேற சட்டங்கள் தீட்டி நீதி வழங்கினர். அப்போது முற்பட்டோர் சமுதாயம் ஏற்படுத்திய குறுக்கீடுகளை அவ்வரசு திறமையுடன் தகர்த்தெறிந்து வெற்றி கண்டனர். 1937ல் தொடர்ந்து ஆட்சி பீடம் ஏறிய காங்கிரஸ் இயக்கமும் அச் சலுகைகளை தொடர்ந்து கடைப் பிடித்து வந்தனர்.

இத்தகைய சலுகைகளை எப்படியாவது குறைக்க சுதந்திரம் அடைந்த பிறகு அரசியல் சட்டம் தீட்டிய முற்பட்டோர் சமூகத்தினை சேர்ந்தவர்கள் விடாப்பிடி கொள்கைகளால் சில படிகளை அரசியல் சட்டத்தில் உண்டாக்கியதால் அச் சலுகைகள் பறிபோயிற்று.

இருப்பினும் உச்சநீதிமன்றம் பிற்பட்டோர் நலன்களை பேணி காக்க காலவரம் பின்றி மும்பக்தொரு விழுக்காடு ஒதுக்கீடு தேவை என்பதை வலியுறுத்தி அச் சலுகைகள் தொடர தமிழ்நாடு அரசுக்கு நீதி வழங்கியுள்ளது. அடுத்து வந்த தமிழக அரசு பிற்பட்டோர் நலத்தையே பேணி வளர்க்க ஒரு தனி அமைச்சு ஒன்றையே நிறுவியுள்ளது.

புரட்சித் தலைவர் ஆட்சி பீடம் ஏற்றதும், அவர் மக்களுக்கு வழங்கிய பல்வேறு நன்மைகளில் பிற்பட்டோர் சமுதாயத்திற்கு ஐம்பது விழுக்காடு ஒதுக்கிய மாபெரும் சாதனை மறுக்க முடியாது. ஏனெனில் பல்வேறு பிரிவுகள் கொண்டுள்ள பிற்பட்டோர் பட்டியலில் அடங்கிய மக்கள் அவர்கள் இன்னும் முழுமையாக தாங்கள் உயர்வதற்கு வேண்டிய வசதிகளைப் பெற இயலவில்லை என்ற உண்மையினால்தான் என்பது வெள்ளிடைமலை.

இந்த நேரத்தில் வட மாநிலங்களில் இப்போதுதான் பிற்பட்டோர் சமுதாயத்தி னரிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டு அவர்கள் நிலைகளை உணரலாயினர். குஜராத் மாநிலத்தில் அண்மையில் ஐம்பது விழுக்காடு ஒதுக்கீட்டை பிற்பட்டோர் சமுதாயத்திற்கு வழங்கியது குறிப்பிடத் தக்கது. மேலும் மத்திய பிரதேசத்தில் அச் சலுகை விரிவாக்கப் பட்டுள்ளதும், கன்னட மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சியின்போது அச் சமூகத்தினருக்கு 67 விழுக்காடு ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நமது குழுவின் பணி இத்தருணத்தில் மிக முக்கியமாகும். முற்பட்டோர் சமூகத் தினைச் சேர்ந்தவர்கள் சிலரின் தூண்டுதலால் உச்சநீதிமன்றம் வரை கொடுக்கப்பட்டுள்ள வழக்கில் அரசு ஐம்பது சதவிகித ஒதுக்கீடு பிற்பட்டோர் சமூகத்தினருக்குத் தேவை என்பதனையும் **மேலும்** **அதை உயர்த்த** தமிழக அரசு முற்படுவதில் தவறு ஒன்றும் இல்லை **என்பதனையும்** நிலைநிறுத்த ஆய்வு செய்து பரிந்துரைகள் மட்டும் தேவை என்பதையும் நாம் அனைவரும் உணர வேண்டும். எனவே, 32 விழுக்காடு பிற்பட்டோர் நலனுக்கு உகந்ததல்ல என்பதும் அச் சமூகத்தின் பட்டியலில் அடங்கிய பிரிவினர்கள் எவரும் அவர்கள் பெற்று வரும் சலுகைகளின் மூலம் அவர்கள் முழுமையான பலனை இன்னும் பெறவில்லை என்பதையும் நான் தங்களுக்குத் தெளிவாக எடுத்துக்கூற வேண்டிய கடமைக்கு உட்பட்டுள்ளேன்.

தங்கள் அலுவலகத்தின் மூலம் கிடைக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள்படி மக்கள் தொகையில் 13 சதவிகிதம் வகிக்கும் முற்பட்டோர் சமூகம் கல்வித் துறையில் தாங்கள் பெறவேண்டிய விகிதாச்சார சலுகைகளுக்குமேல் அடைந்து வருகின்றனர் என்பதோடு அல்லாமல், 67 சதவிகிதம் மக்கள் தொகை கொண்ட பிற்பட்டோர் சமூகம் தங்களுக்கு நியாயப்படி கிடைக்க வேண்டிய விகிதாச்சார சலுகைகள் பெறமுடியாமல் கீழ் மட்டத்தி தில் உள்ளனர் என்பதும் தெளிவாக புலனாகின்றது. இக் கருத்தினை வைத்தே 50 சதவிகித ஒதுக்கீடு மேலும் தொடர பரிந்துரைகள் வழங்குவதோடு மட்டுமின்றி 67 விழுக்காடு ஒதுக்கீடு பிற்பட்டோர் சமுதாயத்தினருக்கு வழங்க பரிந்துரைகள் தீட்டி விரைவில் கால வரம்புக்குள் முடிவுகளை அரசுக்கு தாங்கள் அனுப்பியிருக்கலாம். எனவே, எந்தவிதமான வாய்ப்புகளையும் பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பிரிவினர் களுக்குப் பாகுபாடு இன்றி பரிந்துரைகள் வழங்க முடிவெடுத்து மேலும் பிரச்சினைகளை எழுப்பி பிற்பட்ட சமூகத்திலிடையே உட்பகையை எழுப்ப நாம் ஒரு காரணகர்த்தாவாக இருக்கக் கூடாது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டுகிறேன். அவர்களுக்குள் ஏற்றத் தாழ்வு இருப்பினும் அவைகளைச் சுட்டிக் காட்ட இது தக்க தருணமல்ல. வேண்டுமானால் மேலும் பிற்பட்ட சமுதாயத்தின் பட்டியலை விரிவுபடுத்தலாம் தவிர குறைவுபடுத்துதல் அரசுக்கு ஏற்ற பரிந்துரையாகாது.

மேற்கண்ட என் கருத்துக்களுக்கு மாறாக முடிவுகள் எடுக்கப்படுமாயின் அவை களுக்கு நான் உட்பட்டவனாக மாட்டேன். ஏனெனில் அதன் விளைவு மக்கள் சமுதாயத்தினருக்கு ஊறு பயப்பதோடு அல்லாமல் தீய சக்திகளை உருவாக்கும் என்பதை நான் அறிவேன். இது ஒரு எச்சரிக்கையாகவே தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

(ஒம்)

(கோ. சமரசம்).

(உண்மை நகல்.)

சுகல :

பிற்பட்ட நிலைவாரியான தனித்தனி இட ஒதுக்கீடு குறித்து அரசிடமிருந்து வரப் பெற்ற 4—2—1985ஆம் நாளிட்ட கடிதம் பற்றிய குறிப்பு.

பெறுநர் :

தலைவர் அவர்கள்,
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலக குழு,
சென்னை 600 018.

அரசு பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் நலத் துறை இயக்குநருக்கு எழுதி, இக் குழுவுக்கு அனுப்பப்பட்ட சமூக நலத் துறையின் 26—11—1983ஆம் நாளிட்ட 81244/பி.வ. (1-2)/81ஆம் எண் கடிதமும், 31—10—1984ஆம் நாளிட்ட 91649/அதிந7/84-1ஆம் எண் கடிதமும் பிற்பட்ட நிலைவாரியான தனித்தனி இட ஒதுக்கீட்டை ஆதரிக்கவில்லை. தலைவர் அவற்றைக் குறிப்பிட்டு பிற்பட்ட நிலைவாரியான தனித் தனி இட ஒதுக்கீடு முறைக்கு உறுப்பினர்களிடையே ஆதரவு தேட முயற்சிக்கக் கூடாது. இதுபற்றி ஏற்கனவே, விரிவாக விவாதித்து பாலாஜி வழக்கில் குறிப்பிட்டபடி இது அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று முடிவு செய்யப்பட்டுவிட்டது.

மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு சலுகைகள் பற்றி ஆய்வு செய்து மதிப்பிட வேண்டுமென்றுதான் முதல் கடிதம் இக் குழுவை கேட்டுக் கொள்கிறது. இட ஒதுக்கீட்டிற்கான வரம்பிற்கு (அதாவது இட ஒதுக்கீடு 50 சதவீதத் திற்கு மேல் இருக்கக் கூடாது). பாலாஜி வழக்கையே எப்பொழுதும் நம்பும் தலைவர், அத்தீர்ப்பில் பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீட்டு முறைக்கு எதிராக அளிக்கப் பட்டுள்ள முடிவை கண்ணுறாதது விநோதமாக உள்ளது. பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு உச்சநீதிமன்றத்தின் முடிவிற்கு எதிரானதாக இருக்கிறது : எனவே, தலைவர் அவர்கள், பிற்பட்ட நிலைவாரியான தனித்தனி இட ஒதுக்கீட்டு முறை ஏற்றுக் கொள்ளப்படுமாயின், அது உச்ச அரசியலமைப்புச் சட்டத்தின் விதி தறை களுக்கு எதிரானதென்று நீதி மன்றத்தால் அறிவிக்கப்பட்ட விதிதாச்சார இட ஒதுக்கீட்டு முறையை ஏற்றுக் கொள்வதற்கு ஒப்பாகும் என்று தெரிவித்து அரசுக்குத் தகுந்த பதில் ஒன்றை அனுப்புவதுதான் உகந்ததாக இருக்கும்.

இரண்டாவது கடிதம், 'X' என்பவர் அரசுக்கு அனுப்பிய ஒரு மனு ஆகும். கருத்துறை வேண்டி அக் கடிதம் இக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. மனுதாரர் (அவர் யாராக இருந்தபோதிலும்) ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பொதுவான போட்டியில் தகுதி பெறுவோர் ஆகிய பிரிவினரிடையே வறுமைக் கோட்டிற்கு மேலும் மேலும் உள்ளவர்களுக்கு இட ஒதுக்கீடு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். சுருங்கக் கூறின், முற்பட்ட வகுப்பினர் உட்பட அனைத்து சாதிகளுக்கும் இட ஒதுக்கீடு செய்ய பொருளாதார நிலையை அளவு கோலாகக் கொள்ள வேண்டும் என்பதுதான் இதன் பொருளாகும்.

தலைவர் தெரிவித்த பிற்பட்ட நிலைவாரி தனித் தனி இட ஒதுக்கீட்டு முறையி லிருந்து இக் கருத்து முற்றிலும் வேறுபடுகிறது. ஆகையால், பிற்பட்ட நிலைவாரி தனித் தனி இட ஒதுக்கீட்டு முறையைக் கொண்டு வருவது குறித்த முடிவை மீண்டும் மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், இது குறித்து ஏற்கனவே 31—1—1985ஆம் நாளன்று விவாதிக்கப்பட்டு அது குறித்து பரிந்துரையும் முடிவு செய்யப்பட்டு விட்டது. தூரதிட்டவசமாக, இக் குழு உறுப்பினர் களின் அன்றாட விவாதங்களைப் பதிவு செய்வதில்லை. இது குறித்து, திரு. ஜி. விஸ்வநாதன் அவர்கள் தன்னுடைய கருத்தை 31—1—1985ஆம் நாளன்று தெரிவித் துள்ளார்.

(ஒம்)
(டாக்டர் கோ. சமரசம்)

(உண்மைநகல்.)

(ஒம்)
தலைவருக்காக.

தகவல் :

மேன்மைமிகு,

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுத் தலைவர் அவர்களின் கனிவான பரிசீலனைக்கு,

குழு உறுப்பினர் டாக்டர் சமரசம் எழுதிக் கொள்வது :

பெருந்தகையீர்—வணக்கம்:

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மக்கட் சமுதாயத்தில் பெரும்பான்மையராய் உள்ளனர். அவர்கள் பன்னெடுங் காலமாக சமூகக் கட்டுப்பாடுகளால் ஒடுக்கப்பட்டும், நசுக்கப்பட்டும் அவல நிலையில் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையை நன்கு உணர்ந்த நம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் எந்த ஆட்சியினரும் வழங்க முடியாத ஒரு பெரும் வாய்ப்பினைத் துணிவோடு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு வழங்கினார். கல்வித் துறைகளிலும் அரசு பணித் துறைகளிலும் 31 விழுக்காட்டு ஒதுக்கீட்டினை 50 விழுக்காடாக உயர்த்தினார்.

வரலாறு படைத்த நம் பொன்மனச் செம்மல் ஆட்சி வழங்கிய இச்சலுகையை ரத்து செய்ய வேண்டிச் சிறு பான்மையினருள் சிலர், ஏதோ தமக்குத் தீங்கு ஏற்பட்டதாகக் கருதி உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்து உள்ளனர். எந்த ஒரு நியாயமான செயலையும் செயல்பட விடாமல் எதிர்க்கும் மனப்பான்மை இந்நாட்டில் ஒரு சிலருக்கு இன்றும் இருந்து வருவதை நாம் நன்கு அறிவோம். உதாரணமாக நீதிக் கட்சியினர், இந்து மத அறநிலையங்களைச் சீர்படுத்த 50 ஆண்டுகளுக்கு முன்னே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தனர். அன்றும், பெரியதொரு எதிர்ப்பினை உருவாக்கி முட்டுக் கட்டையாய் நின்றனர்.

நம் ஆய்வுப்படி பிற்படுத்தப்பட்டோர் 67 விழுக்காடு உள்ளனர். அதனால் ஒதுக்கீட்டு முறையை மேலும் உயர்த்தி, மேலும் பல பிரிவினரைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது நம் தலையாய கடமையாகும். உச்சநீதிமன்ற ஆணைப்படி பிற்பட்டோர் நலக் குழு நியமிக்கப்பட்டுச் செயற்படுகிறது. கணக்குத் துறைப் பேராசிரியத் தலைவர் (ஜ.ஏ.எஸ்.) தலைமையில் ஆய்வு நடத்தி, நம் நாட்டில் 67 விழுக்காடு பிற்பட்டோர் எனக் கண்டறிந்துள்ளார். இதுகாறும் துல்லியமாகக் கணக்கிடாமல் ஒரு தோராயமான அடிப்படையிலேயே ஒதுக்கீடு செய்துள்ளனர். அக்குறையைத் தவிர்த்து, இக் குழு நல்லதொரு திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

1931ஆம் ஆண்டுக்குப் பிறகு அறிவியல் முறைப்படி சாதி வாரியாக மக்கள் கணக் கெடுப்புக் குறுகிய காலத்தில் குறைந்த செலவில் நடத்தி பிற்படுத்தப்பட்டோர் 67 விழுக்காடு உள்ளனர் என்றும், மாபெரும் உண்மையைக் கண்டறிந்து ஒதுக்கீட்டு முறையை 50 விழுக்காடாக அரசு வழங்கியது. அதனை உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை உருவாயிற்று. இது நம் குழுத் தலைவரின் அயராத உழைப்பின் பயனே என்பதனைப் பாராட்டுகின்றேன்.

இந் நிலையில் தம் வாதத் திறமையால் உண்மைக்கும் நீதிக்கும் புறம்பான கருத்துக் களை எழுப்பி மக்களிடையே பூசல்களையும் உட்பகையினையும் ஏற்படுத்தித் திசை திருப்ப சிலர் முயல்கின்றனர். அது தவறு. பிற்படுத்தப்பட்டோர் அனைவரும் ஒட்டு மொத்தமாக (with ut defeti n of any Community) இதுவரை பெற்று வந்த பயன்களைத் தொடர்ந்து பெற்று, மேலும் அவர்கள் முன்னேற்ற பாதையில் பீடு நடை போட சிறந்த ஒளி விளக்காக நம் குழு திகழ வேண்டும். அதற்கு நாம் உறுதுணையாக நீதிக வேண்டும். குழுவின் பரிந்துரைகளாக இருக்க வேண்டிய முப்பெரும் கருத்துக்களை வற்புறுத்தி யாளும் தலைவருக்குக் கடிதம் ஒன்று எழுதியுள்ளேன்.

கீழ்க்கண்ட பிரச்சினைகள் பற்றி நாம் முடிவான கருத்துக்களை எடுக்க வேண்டும்:

1. Limits of Reservation : பிற்படுத்தப்பட்டோர் அடைந்து வரும் 50 விழுக்காடு ஒதுக்கீடு நமது தலைவர் கணக்கின்படி நியாயமானது. அதனை 67 விழுக் காடுவரை உயர்த்த நாம் பரிந்துரை செய்ய வேண்டும். இந்த நேரத்தில், தலைவர் அவர்கள் முன்னெற்பாடான முடிவுகள் ஏற்கப்பட தக்கதல்ல.

" Objections to restrictions to total reservation for 50 per cent at page 19

" Without more tangible grounds it would not be possible to justify reservations of more than 52 per cent for Backward Classes, Any such Recommendations is bound to be struck down and the result will be total denial of reservation for Backward Classes".

2. Compartmental Reservation :—பிரிவு முறை (Compartmental) ஒதுக்கீடு முறை, குறிப்பிட்ட பிற்பட்டோர் பிரிவினர் அடையக் கூடிய முறையாக அரசியல் சட்டத்திற்கு விரோதமாக நிகழ்கிறது. இதனைப் பல நீதிபதிகள் வாயினால் அறிந்துள்ளோம். அதனால் அம்முறையைக் கொண்டு வரப் பரிந்துரை செய்யக் கூடாது. சிலர் நீதிபதிகள் நிலையைக் குறை கூறுவது பொருந்துவதன்று. அது இக் குழுவின் நடவடிக்கைக்குத் தேவையற்றதே.

3. Deletion of certain communities from existing Backward Class List :—இம் முறையைக் கொண்டு வர எந்தச் சட்ட முறையும் ஏதுவாக இல்லை. அதனால் நம் தலைவர் விடாது முயன்று, ஒரு (ya dstick) திட்டத்தை வகுத்துக் காட்டிப் பாதிக்கப்படும் வகுப்பினர்களைச் சுட்டிக் காட்டினார். நான் பலமுறை கேட்டிருந்தும் சென்ற கூட்டத்தில்தான் அதன் பரிட்சார்த்த முடிவுகளை அறிவித்தார். அம் முடிவுகள் பற்றி நாம் விவாதித்து ஆலோசனை கூற நேரமில்லை. அந்து ஒரு பெரிய பிரச்சினை. ஏன், ஓர் அரசியல் பிரச்சினை எனவும் கூறலாம். மக்கள் தொகையில் 13 சதவீதமே உள்ள முற்படுத்தப்பட்டோர் தாங்கள் பெற வேண்டிய விகிதாச்சார சலுகைகளை மிக அதிகமாகவே இன்று பெற்று வருகின்றனர். இதனைத் தலைவர் வழங்கிய அறிக்கை (Survey Report) வாயிலாக அறிகின்றோம். அதனால் 67 சதவீத பிற்படுத்தப்பட்டோர், தாங்கள் நியாயமாக பெற வேண்டிய சலுகைகளை முழுமையாகப் பெறவில்லை என்பதனையும் அறிகின்றோம். பிற்படுத்தப் பட்டோர்மீது வழக்குக் தொடுத்துள்ள முற்பட்டோர்க்கு எவ்விதப் பாதிப்பும் விளைய வில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆகையால், எந்த வகுப்பினரையும் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யத் தேவையில்லை. தலைவர் அக் கருத்தைக் கைவிட வேண்டும். ஒதுக்கீட்டை 67 சதவிகித அளவுக்கு ஒதுக்கினால் புதிதாகச் சேர்க்கப்படும் பிற்படுத்தப்பட்டோரும் உரிய பயன்களை செம்மையாய்ப் பெறுவர். மீண்டும் மீண்டும் இப் பிரச்சினையை வலியுறுத்துவது நல்லதன்று. அரிய செயல்கள் பல புரிந்த நம் தலைவர், நம் ஏகோபித்த கருத்துக்களுக்கு இசைவு அளித்துப் பரிந்துரைகள் பற்றி முடிவு செய்ய வேண்டும்.

நம் மதிப்பிற்குரிய நண்பர் விஸ்வநாதன் அவர்கள் "Safe average should not become Fate Accompli" என்று குறிப்பிட்டதனை நாம் கவனிக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட 3 கருத்துக்களும் தலைவர் வழங்கிய குறிப்புகளில் தரப்பட்டுள்ளன. இதனை அனைவரும் ஏற்றுக் கொள்வர் என்பதில் ஐயமில்லை. "Alpha Beta Gama Delta Lambda, Sigma" என்றும் கணித துறைச் சொற்களைப் புகுத்தி, அட்டவணைகள் தயாரித்து, நம்மை ஏற்றுக் கொள்ள செய்யும் "deletion" முறை போற்றத் தக்கதன்று. அது பலவித அரசியல் பிரச்சினைகளை மக்களிடையே எழுப்பிவிடும். அவைகளுக்கு நாம் உதவவும் தலைவர் அவர்கள் முற்பட்டோர் கொள்கைகளுக்கு ஒரு உதவியாளராகப் போக நாம் இடம் கொடுக்கக் கூடாது.

சாதிப் பிரிவு எண் 201-ல் அகமுடையார் (துளுவ வேளாளர் உட்பட) எண்ணிக்கைத் தொகை 17,41,852 என்று நமக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தர்மபுரி, வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கை போன்ற மாவட்டங்களிலும் சென்னை, மதுரை போன்ற நகரங்களிலும் உள்ள அப் பிரிவினரின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், ஏன் கம்ப்யூட்டர் கணக்கில் தவறு இருக்கக் கூடாது என்று ஐயம் ஏற்படுகிறது. இதற்கு உதவியாக மதுரை முன்னாள் மேயர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் கணக்கெடுப்பைப் பற்றிக் கூறியது கேள்விக்குறிக்கு உட்படுத்தியுள்ளது. ஐயத்தை மேலும் உண்டாக்கு கிறது. எனவே ஒரு சமுதாயம் அரசியல் சட்டப் பிரிவு 15 (4)படி பிற்படுத்தப்பட்ட தாகவும் 16 (4)படி முற்படுத்தப்பட்டதாகவும் ஏற்றுக் கொள்வது தவறு. எனவே, இத்தகைய சர்ச்சைகளை இந் நேரத்தில் எழுப்புவதை தடுக்க நாம் ஏற்கனவே பிற்பட்டோர் பட்டியலில் உள்ள சமூகத்தினரை முற்பட்டோர்களாக ஆக்க முயலுவது தவிர்க்கப்பட வேண்டும் என்பதனை இதன் மூலம் தெரிவித்துக் கொள்வதுடன் இந்தியாவிற்கு பல்வேறு வகைகளில் முன்னோடியாக தமிழகம் இருப்பதை மனதில் கொண்டு தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து நிறைவேற்ற பெரிதும் வேண்டுகிறேன்.

தங்கள்

(ஒப்பம்). . . . . .

(கோ. சமரசம்)

(உண்மை நகல்.)

(ஒம்)——

தலைவருக்காக.

நகல் :

தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு உறுப்பினர் திருமதி சௌந்தரா கைலாசம் குழுவிடம் கொடுத்த குறிப்பு:

இக் குழு பன்முகச் சோதனைகளைப் (அதாவது மூன்று வெவ்வேறு வகையான சோதனைகளை) பின்பற்றி ஒவ்வொரு சாதி/வகுப்பின் பிற்பட்ட நிலையையும் மதிப்பிட உத்தேசித்துள்ளது. சமூக, கல்வி ரீதியான பிற்பட்ட நிலையைத் தீர்மானிப்பதற்காக வகுக்கப்பட்டுள்ள மூன்று வகையான உத்தேச அளவுகோல்கள் வருமாறு :—

1. சமூக ரீதியிலான பிற்பட்ட நிலை :

(1) சமூக ரீதியில் பிற்பட்டவையென ஏற்றுக் கொள்ளப்பட்ட சாதி/வகுப்பு.

(2) தொழில் வகையில் பிற்பட்ட நிலை.

(3) ஏழ்மை.

2. கல்வி ரீதியான பிற்பட்ட நிலை :

சமூக ரீதியான பிற்பட்ட நிலை என்பதன்கீழ், ஒவ்வொரு அளவுகோலுக்கும் 3 என்ற வீதத்தில் 9 மதிப்பெண்களும், கல்வி ரீதியான பிற்பட்ட நிலை என்பதன்கீழ் ஒவ்வொரு அளவுகோலுக்கும் இரண்டு மதிப்பெண்கள் என்ற வீதத்தில் 6 மதிப்பெண்களும் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில், ஏழு மதிப்பெண்களுக்கு மேலும், கல்வி ரீதியான பிற்பட்ட நிலை என்பதன்கீழ் குறைந்தது இரண்டு மதிப்பெண்களையும் பெறுகின்ற சாதி/வகுப்புதான் சமூக, கல்வி ரீதியிலான பிற்படுத்தப்பட்டவையெனக் கருதப்படும்.

சமூக கல்வி ரீதியிலான பிற்பட்ட நிலையைக் கண்டறிவதற்கான உத்தேச அளவுகோல்கள் நியாயமானவை, நேர்மையானவை என்று நான் கருதுகிறேன். இவை, ஒவ்வொரு சாதியின் சரியான நிலையை பிரதிபலிக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், ஏழ்மை நிலையைத் தீர்மானிக்க பின்வரும் அளவுகோல்களைப் பின்பற்றுவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது :

(1) கூரை வீடுகளில் வாழ்வோர்.

(2) வாழ்க்கைச் செலவுக் கடன்.

(3) லேவாதேவிக்காரர்கள்/அடகுக் கடைக்காரர்களிடமிருந்து கடன்கள்.

எதேச்சை மாதிரி முறையிற்தான் ஆய்வு நடத்தப்பட்டிருப்பதால், மேற்சொன்ன அளவுகோல்கள் மட்டும் ஏழ்மை நிலையைச் சரியாகவும் முழுமையாகவும் பிரதிபலிக்க மாட்டா என்று நான் கருதுகிறேன். ஏழ்மையும் கல்வியும் ஒன்றோடொன்று தொடர்புடைய, ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்ற கூறுகளாகும். பொருளாதாரப் பிரச்சனை காரணமாக ஒரு சாதி/வகுப்பைச் சேர்ந்த 6 முதல் 14 வயதுத் தொகுதியில் உள்ள சிறார் கல்வி கற்க முடியாமலிருந்தாலோ அல்லது, அந்த வயதுத் தொகுதியில் இருப்பவர்களில் படிப்பை பாதியில் நிறுத்திவிடுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலோ, அது அந்த சாதியின் ஏழ்மை நிலையைத்தான் காட்டுகிறது. ஏழ்மை நிலை காரணமாக, அவர்கள் தங்களுடைய குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல், குடும்ப வருவாயைப் பெருக்கிக் கொள்ள அவர்களைப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர். கல்வி ரீதியாக பிற்பட்ட நிலையை மதிப்பிட, படிப்பை பாதியில் நிறுத்தி விட்டவர்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டிருந்தபோதிலும்கூட, அவர்கள் ஏழ்மை நிலையை மதிப்பிட பொருளாதார பிரச்சினை காரணமாக படிப்பைப் பாதியில் நிறுத்தி விட்டவர்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேல்நிலை வகுப்பு முடிய மாதில அரசு இலவசக் கல்விக்கு ஏற்பாடு செய்திருந்த போதிலும், பொருளாதார பிரச்சினை காரணமாக சில சாதியினர் தங்களின் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப இயலவில்லை என்பதே அந்த சாதியினரில் ஏழ்மை நிலையை உத்தேசுக்கிற்கு இடமின்றி மெய்ப்பிக்கிறது. ஆகையால், ஏழ்மை நிலையை மதிப்பிட தற்போது வரையறுத்துள்ள மூன்று உத்தேச அளவுகோல்களுடன் பின்வரும் அளவுகோலையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் கருதுகிறேன். அதாவது:—

6 முதல் 14 வயது தொகுதியைச் சேர்ந்தவர்களில் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக பள்ளிக்குச் செல்ல இயலாத அல்லது அதே வயதுத் தொகுதியைச் சேர்ந்தவர்களில் நிதி இடர்பாடு காரணமாக படிப்பை பாதியில் நிறுத்தியவர்களின் சதவீதம், மாநில சராசரியைவிட குறைந்தது. பொருளாதாரப் பிரச்சனை சதவீதம் அல்லது பொருளாதாரச் சதவீதத்தில் 10 சதவீதமாவது அதிகமாக உள்ள சாதி/வகுப்பு.

மேலும், மாறிவ் சராசரி அளவிலிருந்து 10 சதவீதம் வேறுபாடு என் னும் வரையறை நியாயமானதும் நேர்மையானதும் அரும் என்று நான் மேலும் கருதுகிறேன். இந்த வரம்பு உயர்த்தப்படுமாயின், அது, தற்போதைய பிற்படுத்தப்பட்ட சாதிகளைப் பெரும் பாதிப்பதோடு மட்டுமின்றி அவைத்துச் சாதிகளையும் முற்பட்டவையென அறிவிக்க வேண்டிய நிலைக்குக் கொண்டு போய் விட்டுவிடும். இது, முன்னுரிமைச் சலுகை அளிக்கப்பட வேண்டிய நிலையிலிருக்கும் உண்மையான பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கு அந்தி இழைப்பதாகும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான இட ஒதுக்கீட்டில் சதவீதம், குழு நடத்திய ஆய்விலிருந்து தெரிய வந்துள்ள அத்தந்தச் சாதிகளின் மக்கட் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப இருக்க வேண்டுமென்பதை இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்கும். இது தொடர்பாக குழுவின் பரிந்துரையையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.

1971–72 முதல் 1975–76 வரையான கால அளவில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவிற்கு வரப் பெற்ற விண்ணப்பங்கள் யாவும் அழிக்கப்பட்டு விட்ட படியால் அக்கால அளவு தொடர்பான விவரங்கள் கிடைக்கவில்லையென்று வரைவு அறிக்கையில் தொகு.தி-11, பிரிவு-III, அத்தியாயம் 9–ஏயில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் மூலம் பல்வேறு முதல்நிலை பணிகளுக்கு (Class I Services) தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் தகவல் களையும், ஒவ்வொரு பிற்படுத்தப்பட்ட சாதிக்கும் கிடைத்த இடங்களையும் குறிப்பிட்டு 11–4–1975 அன்று சட்டமன்றப் பேரவையில் அப்போதைய முதலமைச்சர் ஆற்றிய உரையின் நகலை இங்கே இணைத்துள்ளேன். 1975வரை கொங்குவேளாளர் சாதியிலிருந்து முதல்நிலைப் பணிக்கு (Class I Services) ஒருவர் கூட தெரிந்தெடுக்கப்படவில்லை என்று அது தெரிவிக்கிறது.

(ஒப்).....
(சௌந்தரா கைலாசம்),
உறுப்பினர்,
பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலக் குழு.

சென்னை,
18–2–1985.

(உண்மை நகல்)

ஒப்.....
தலைவருக்காக.

நகல் :

தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலக் குழு உறுப்பினர் திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரிப் அவர்களிடமிருந்து வரப் பெற்ற குறிப்பு.

தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவின் அறிக்கையையும் (தொகுதி மூன்று), அதன் பரிந்துரைகளையும் நான் படித்துப் பார்த்தேன். என்னுடைய கருத்துக்களை கீழே கொடுத்துள்ளேன்.

1. '' இஸ்லாம், அதேக நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் காலூன்றிய ஒரு மதமாகும். தமிழ் நாட்டிலுள்ள முஸ்லீம்கள் பொதுவாக இந்துக்களிடையே யிருந்து மதம் மாறியவர்கள் தான் என்று கூறலாம். தமிழ் நாட்டின் முக்கியமான வாணிபத் தலங்களில் வியாபாரத்தின் நிமித்தம் குடியேறிய அரேபிய வணிகர்கள், இங்குள்ளவர்களோடு மண உறவு வைத்துக் கொண்டனர். வடக்கிலிருந்து தமிழ் நாட்டுக்குப் படையெடுத்து வந்த முஸ்லீம்களும் இங்கேயே நிரந்தரமாகத் தங்கி விட்டார்கள். இவ்வாறே தமிழ் நாட்டில் இன்றைய முஸ்லீம் மக்களினம் தோன்றியது.'' (அறிக்கையின் தொகுதி-III, 10-ஈ, அத்தியாயத்தின் 2ஆம் பக்கத்தைக் காண்க) என்று குழு அனுமானித்துள்ளது.

இஸ்லாம், அதேக நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் காலூன்றிய மதம் என்பது உண்மை. இந் நாட்டில் இஸ்லாம் மதம் தோன்றியதும், முஸ்லீம் மக்கள் தொகை அதிகரித்ததும் வரலாற்றுப் பூர்வமான நிகழ்ச்சிகள் ஆகும். '' தமிழ் நாட்டிலுள்ள முஸ்லீம்கள் பொதுவாக இந்துக்களிடையேயிருந்து மதம் மாறியவர்கள் தான் என்று கூறலாம் '' என்ற அனுமானம் முற்றிலும் தவறானது. இதை நான் உண்மையாக மறுக்கிறேன். அறிக்கையிலிருந்து இந்த பாராவை அறவே நீக்கி விட வேண்டுமென நான் தலைவரை வலியுறுத்துகிறேன்.

2. உண்மையில் முஸ்லீம்கள் அனைவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களே. பிற்படுத்தப்பட்ட, முற்பட்ட, வகுப்பினர் என வகைப்படுத்துவதற்காக அத்தியாயம் 10 ஈயில், 1, 2ஆம் பக்கங்களில் கொடுத்துள்ளபடி முஸ்லீம்களை பல்வேறு உட்பிரிவுகளாக பிரிக்கவோ அல்லது இனம் பிரித்துக் கூறவோ முடியாது. புள்ளிவிவரங்கள் இந்த அடிப்படையில்தான் சேகரிக்கப்பட்டிருக்க வேண்டும். முஸ்லிம்களை பல்வேறு தொகுதியினராகக் காட்டக்கூடிய பல்வேறு பட்டப் பெயர்களின் அடிப்படையில் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டிருக்கக்கூடாது. முஸ்லீம்களிடையே தனித்தனி பிரிவுகள் எதுவும் இல்லை. அவர்கள் எவ்வித வேறுபாடின்றி ஒன்றாக கலந்து வாழ்கின்றனர். பல்வேறு குடும்பத் தொகுதியினர்களுக்கிடையே திருமணங்கள் நடைபெறுகின்றன. முஸ்லீம் அல்லாத சாதிகளில் காணப்படுவது போல, முஸ்லீம்களிடையேயும் பல்வேறு சாதிகள் அல்லது பிரிவுகள் இருப்பதாக அனுமானிப்பது தவறானதாகும்.

3. அத்தியாயம் 10—ஈயில் 4ஆம் பக்கத்தில் முஸ்லீம்களின் மக்கட் தொகை 27.05 இலட்சம் என்று அனுமானிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 23.42 இலட்சம் பேர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்றும் 2.63 இலட்சம் பேர் முற்பட்ட வகுப்பினர் என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்னமேயே, முஸ்லீம்களின் மக்கட் தொகை மேற்சொன்ன கணக்கைவிட அதிகம் இருந்தது. தற்போது முஸ்லீம்களின் மக்கட் தொகை 50 இட்சத்திற்கு மேல் இருக்கக்கூடும் என்பது என்னுடைய மதிப்பீடு. ஆகையால், தற்போதைய மக்கட் தொகை கணக்கெடுப்பை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை.

4. பெரும்பாலான முஸ்லீம்கள் நெசவு, பீடி தயாரித்தல் முதலியன போன்ற உடல் உழைப்பு தொழிலிலேயே ஈடுபட்டு வருகிறார்கள் என்பது அனைவரும் அறிந்ததே. ஒரு சிலரை மட்டும் தான் செல்வம் மிகுந்த வணிர்களாக வகைப்படுத்த முடியும். ஆனால் இரண்டாவது வகையினரை, ஒரு தனித் தொகுதியாக வகைப்படுத்தி அவர்களை மட்டும் முற்பட்டவர்களென அழைப்பது நடைமுறைக்குகந்ததல்ல மிகப் பெரும்பாலான முஸ்லீம்கள் தற்குறிகளாக அல்லது குறைவாகப் படித்தவர்களாக இருப்பதாலும் தாழ்வான தொழில்களில் ஈடுபட்டு வருவதாலும். முஸ்லீம்கள் அனைவரையும் ஒட்டு மொத்தமாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக வகைப்படுத்த வேண்டும். முஸ்லீம்களில் ஒருசில தனிப்பட்டவர்கள் அல்லது தொகுதியினர் கல்வி, சமூக நிலைகளில் முற்பட்டவர்களாக இருந்தாலும் வருமானம் மற்றும் பிற அளவுகோல்களால் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்காமல் வடிகட்டிவிட முடியும். முஸ்லீம்கள் அனைவரையும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக அறிவிப்பதற்கு எவ்வித மறுப்பும் இருக்க முடியாது என்பது என்னுடைய கருத்து. எனவே என்னுடைய இந்தப் பரிந்துரையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென குழுவை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

5. சமூக, கல்வி ரீதியான பிற்பட்ட நிலைகளுக்கென சில மதிப்பெண்களை ஒதுக்கி சில அளவு கோல்களை குழு வகுத்துள்ளது. அதன்படி, 15 மதிப்பெண்களில் 8-க்குக் குறையாமல் மதிப்பெண்கள் பெற்ற சாதிகள் மட்டுமே பிற்படுத்தப் பட்டவையென வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் ஏற்கனவே பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான சலுகைகளை பெறறு வந்த பின்வரும் முஸ்லீம் பிரிவினர், குழு தற்போது தயாரித்துள்ள உத்தேச பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் நீக்கப்பட்டுள்ளனர்.

தொடர் எண்.	குறியீட்டெண்.	சாதியின் பெயர்.
1	801	தக்கினி முஸ்லீம்.
2	802	லப்பை.
3	803	மரைக்காயர்.
4	804	ராவுத்தர்.

அறிக்கையின் III-ஆம் தொகுதியில் 10-ஈ அத்தியாயத்தில் 2ஆம் பக்கத்திலுள்ள பட்டியலில் இடப்பட்டுள்ள 10 முற்பட்ட முஸ்லீம் சாதிகளில், ஷேக் (குறியீட்டெண் 809), அன்சார் (குறியீட்டெண் 812) ஆகியவை மட்டும் உத்தேச பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. ஏனையவை அப்பட்டியலில் சேர்க்கப் படவில்லை. இருபிரிவினர் (அதாவது பத்தானி (பட்டாணி) கான், (குறியீட்டெண் 806), காக்கா (குறியீட்டெண் 807) பிற்படுத்தப்பட்டவர்களா அல்லது இல்லையா என்று வகைப்படுத்தப்படாமலேயே விடப்பட்டுள்ளனர். மேலே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு சாதிகள் அதாவது. தக்கினி, லப்பை, மரைக்காயர், ராவுத்தர்) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தொடர்ந்திருப்பதற்கான தகுதிகள் பரிக்கப்பட்டிருப்பது ஏமாற்றமளிப்பதும். வருத்தத்தக்கதும் ஆகும். முன்னரே கருத்து தெரிவித்தபடி, முஸ்லீம்களின் கல்வி மற்றும் சமூக நிலை இன்னும்

மேம்பாட்டையில்லை. எனவே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து மேலே குறிப்பிட்டுள்ள முஸ்லீம் பிரிவினர்களை நீக்குவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. ஆகையால், அவர்களை அந்தப் பட்டியலிலேயே தொடர்ந்து இடம் பெறச் செய்ய வேண்டும். முஸ்லீம்கள் அனைவரையும் ஒட்டு மொத்தமாகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

6. கல்வி ரீதியான பிற்பட்ட நிலையைப் பொறுத்த வரையில் பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு சமமான வகுப்பு மட்டும் தேறியுள்ளவர்களின் சதவீதம் மாநில சராசரி அளவைவிட குறைந்தது 10 சதவீதமாவது குறைவாக இருக்கக்கூடிய அல்லது மேல்நிலை கல்வி அல்லது அதற்கு சமமான வகுப்பும் அதற்கு மேலும் தேறியுள்ளவர்களின் சதவீதம் மாநில சராசரி அளவை விட குறைந்தது 10 சதவீதமாவது குறைவாக இருக்கக்கூடிய சாதி/வகுப்பை கல்வி ரீதியாகப் பிற்படுத்தப்பட்டவையெனத் தீர்மானிக்கலாம் என்று குழு பரிந்துரைத்துள்ளது. மக்களின் கல்வி ரீதியான பிற்பட்ட நிலையை மதிப்பிட இது உண்மைப் பூர்வமான முறையாகாது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக வகைப்படுத்தத் தகுதிபெறும் தொகுதியினருடன் கல்வி ரீதியாக பிற்பட்ட மக்களையும் சேர்ப்பதற்கு ஏதுவாக இந்த 10 சதவீத அளவிற்குப் பதிலாக 5 சதவீத அளவை குழு பின்பற்ற வேண்டுமென நான் பரிந்துரை செய்கிறேன்.

இது தொடர்பாக, உச்ச நீதி மன்றத்தின் முதுநிலை வழக்குரைஞர் ஆனப், எம். ஆர். எம். அப்துல் கரீம் அளித்த விரிவான முறையீட்டையும் பல்வேறு முஸ்லீம் கல்வி நிறுவனங்களும், சங்கங்களும் அளித்துள்ள முறையீடுகளையும் இங்கு குறிப்பிட நான் விழைகிறேன். அறிக்கையின் (தொகுதி III) 10 ஆ அத்தியாயத்தில் 7, 8, 9ஆம் பக்கங்களில் பட்டியலிட்டுள்ளபடி அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். இந்தக் கோரிக்கைகளைக் குழு பரிசீலனை செய்யாதது வருந்தத்தக்கதாகும். பெருவாரியான முஸ்லீம் சமுதாயத்தினரின் கோரிக்கைகளை புறக்கணிப்பது அந்த சமுதாயத்தினருக்கு நியாயம் வழங்குவதாகாது என்று நான் கருதுகிறேன். குழு, கருணையுடன் இக்கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து தகுந்த பரிந்துரைகள் செய்ய வேண்டுமென நான் வேண்டுகிறேன்.

திரு .எஸ். கோபாலகிருஷ்ண யாதவ், உறுப்பினர் அவர்களின் 2-1-1985 நாளிட்ட கடிதத்தின் நகல் ;

பெறுநர்:

திரு. ஜெ. அ. அம்பாசங்கர் அவர்கள்,

தலைவர்,

தமிழ்நாடு பிற்பட்டோர் நலக் குழு,

27, சர். சி. வி. இராமன் சாலை,

ஆழ்வார்பேட்டை, சென்னை-18.

ஐயா,

பொருள் : பிற்பட்டோர் நலக் குழு ஆய்வு பற்றி.

பார்வை : தங்களின் கடித எண் அ2/4178/84, நாள் 26-12-1984.

தங்களின் 23-12-1984 தேதி கடிதம் 29-12-1984 தேதி பிற்பகலும், 26-12-1984 தேதி கடிதம் 31-12-1984 தேதி தான் கிடைத்த காரணத்தினால் 29-12-1984 தேதி கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. தவிர நான் 4-1-1985 தேதி வெளிநாடு சுற்றுப் பிரயாணம் செய்ய இருப்பதால் திரும்பிவர ஒரு மாத காலமாகும். ஆகையால் இனி நடைபெற இருக்கும் குழு கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாமலிருப்பதால் மேற்க்கண்ட விஷயங்களை குழு பரிசீலிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1. இத்துடன் அனுப்பியிருக்கும் புள்ளி விவரங்களின்படி முன்னேற்ற சமுதாயம் தங்கள் ஜனத்தொகைக்கு அதிகமாக படிப்பு, வேலைவாய்ப்பு முதலிய வைகளை அனுபவித்து வந்திருப்பது புலனாகும். ஆகவே பிற்பட்ட சமுதாயங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 50 சதவீதம் போதாது. ஜனத்தொகை விகிதாச்சாரப்படி பார்த்தால் 67.3 சதவிகிதம் பிற்பட்டோருக்காக கட்டாயம் ஒதுக்கப்பட வேண்டும் அல்லது தற்பொழுதுள்ள 50 சதவிகிதம் குறையாமல் இருக்க ரிசர்வ் செய்ய வேண்டும்.

2. எந்த ஒரு சமுதாயத்திற்கும் தனியாக விதிதாச்சார அடிப்படை சலுகைகள் (Compartment Resc. vation) கொடுப்பது உசிதமல்ல. அப்படி கொடுப்பதையிருந்தால் எல்லா பிற்பட்ட சமுதாயத்தினருக்கும் ஜனத்தொகை விதிதாச்சாரப்படி இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்ய வேண்டும்.

3. தமிழ்நாடு பிற்பட்டோர் நலக் குழு நியமித்து ஆய்வு நடந்து கொண்டிருக்கும்பொழுது அரசு எந்த ஒரு சமுதாயத்தினரையோ மதத்தினரையோ புதிதாக பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது குழு அறிக்கையில் வருத்தத்தை தெரிவிக்க வேண்டும்.

4. நாம் 1—12—1984 தேதி கூட்டத்தில் சர்க்காரை கேட்டுக் கொண்டபடி தமக்கு 28—2—1985 தேதி வரை சர்க்கார் அவகாசம் கொடுக்காமல் நிர்பந்தம் காரணமாக தலைவர் அவர்கள் அறிக்கை சமர்ப்பித்தால் அது குழுவின் தீர்மானமாக இருக்க முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

5. தற்பொழுது பிற்பட்டோர் நலப்பட்டியலிலுள்ள ஜாதிகள் முன்னேற்றமில்லாமல் இருப்பவர்களை மிகப் பின் தங்கியோர் பட்டியலில் சேர்த்து அவர்கள் சலுகைகளை அனுபவிக்க வகை செய்ய வேண்டும்.

6. தற்பொழுது பிற்பட்டோர் நலப்பட்டியலுள்ள சமுதாயத்தின் பெயர்களை முன்னேற்ற சமுதாயத்தினர் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி தவறாக சலுகைகளை அனுபவிப்பதை கட்டாயமாக தடுக்க வகை செய்யவேண்டும்.

மேலே கண்ட விஷயங்களை அடுத்து வரும் கூட்டத்தில் உறுப்பினர்களுடன் விவாதித்து முடிவு செய்ய வேணுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

(ஒப்பம்)

(எஸ். கோபாலகிருஷ்ணயாதவ்).

(உண்மை நகல்.)

(ஒப்பம்)

தலைவருக்காக.

நகல் :

தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு உறுப்பினர் திரு. துரை இராமசாமி, எம்.எல்.ஏ., அவர்கள் இக்குழுவிடம் கொடுத்த குறிப்பு :

இக்குழு பன்முகச் சோதனைகளைப் (அதாவது மூன்று வெவ்வேறு வகையான சோதனைகளை) பின்பற்றி ஒவ்வொரு சாதி/வகுப்பின் பிற்பட்ட நிலையையும் மதிப்பிட உத்தேசித்துள்ளது. சமூக, கல்வி ரீதியான பிற்பட்ட நிலையை தீர்மானிப்பதற்காக வகுக்கப்பட்டுள்ள மூன்று வகையான உத்தேச அளவுகோல்கள் வருமாறு :—

1. சமூக ரீதியிலான பிற்பட்ட நிலை :—

(1) சமூக ரீதியில் பிற்பட்டவையென ஏற்றுக் கொள்ளப்பட்ட சாதி/வகுப்பு.

(2) தொழில் வகையில் பிற்பட்ட நிலை.

(3) ஏழ்மை.

2. கல்வி ரீதியான பிற்பட்ட நிலை :—

சமூக ரீதியான பிற்பட்ட நிலை என்பதன்கீழ், ஒவ்வொரு அளவுகோலுக்கும் 3 என்ற வீதத்தில் 9 மதிப்பெண்களும், கல்வி ரீதியான பிற்பட்ட நிலை என்பதன் கீழ் ஒவ்வொரு அளவுகோலுக்கும் இரண்டு மதிப்பெண்கள் என்ற வீதத்தில் 6 மதிப்பெண்கள் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில், ஏழு மதிப்பெண்களுக்கு மேலும், கல்வி ரீதியான பிற்பட்ட நிலை என்பதன் கீழ் குறைந்தது இரண்டு மதிப்பெண்களையும் பெறுகின்ற சாதி/வகுப்புதான் சமூக, கல்வி ரீதியாகப் பிற்படுத்தப்பட்டவையென கருதப்படும்.

சமூக, கல்வி ரீதியிலான பிற்பட்ட நிலையைக் கண்டறிவதற்கான உத்தேச அளவுகோல்கள் நியாயமானவை, நேர்மையானவை என்று நான் கருதுகிறேன். இவை, ஒவ்வொரு சாதியின் சரியான நிலையை பிரதிபலிக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், ஏழ்மை நிலையைத் தீர்மானிக்க பின்வரும் அளவுகோல்களைப் பின்பற்றுவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

1. கூரை வீடுகளில் வாழ்வோர்.

2. வாழ்க்கைச் செலவுக் கடன்.

3. வேவாதேவிக்காரர்கள்/அடகுக் கடைக்காரர்களிடமிருந்து கடன்கள்.

எதேச்சை மாதிரி முறையில்தான் ஆய்வு நடத்தப்பட்டிருப்பதால், மேற் கொன்ன அளவுகோல்கள் மட்டும் ஏழ்மை நிலையைச் சரியாகவும் முழுமையாகவும் பிரதிபலிக்கமாட்டா என்று நான் கருதுகிறேன். ஏழ்மையும் கல்வியும் ஒன்றோடொன்று தொடர்புடைய, ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றன என்று கூறுகளாகும். பொருளாதாரப் பிரச்சினை காரணமாக ஒரு சாதி/வகுப்பைச் சேர்ந்த 6 முதல் 14 வயதுத் தொகுதியில் உள்ள பிறார் கல்வி கற்க முடியாமலிருந்தாலோ அல்லது அந்த வயதுத் தொகுதியில் இருப்பவர்களில் படிப்பை நிறுத்திவிடுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலோ அது அந்த சாதியின் ஏழ்மை நிலையைத் தான் காட்டுகிறது. ஏழ்மை நிலை காரணமாகவு அவர்கள் தங்களுடைய குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல், குடும்ப வருவாயைப் பெருக்கிக் கொள்ள அவர்களைப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர். கல்வி ரீதியாக பிற்பட்ட நிலையை மதிப்பிட படிப்பை பாதியில் நிறுத்திவிட்டவர்களாகக் கணக்கில் எடுத்துக் கொண்டிருந்தபோதிலும்கூட அவர்களின் ஏழ்மை நிலையை மதிப்பிட பொருளாதார பிரச்சினை காரணமாக படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டவர்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

மேல் நிலை வகுப்பு முடிய மாநில அரசு இலவசக் கல்விக்கு ஏற்பாடு செய்திருந்தபோதிலும் பொருளாதார பிரச்சினை காரணமாக சில சாதியினர் தங்களின் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப இயலவில்லை என்பதே அந்த சாதியினரின் ஏழ்மை நிலையை சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கிறது. ஆகையால் ஏழ்மை நிலையை மதிப்பிட தற்போது வரையறுத்துள்ள மூன்று உத்தேச அளவுகோல்களுடன் பின்வரும் அளவுகோலையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் கருதுகிறேன். அதாவது :—

6 முதல் 14 வயது தொகுதியைச் சேர்ந்தவர்களில் பொருளாதாரப் பிரச்சனை காரணமாக பள்ளிக்குச் செல்ல இயலாத அல்லது அதே வயதுத் தொகுதியைச் சேர்ந்தவர்களில் நிதி இடர்பாடு காரணமாக படிப்பை பாதியில் நிறுத்தியவர்களின் சதவீதம் மாநில சராசரியைவிட குறைந்தது பொருளாதாரப் பிரச்சினை சதவீதம் அல்லது பொருளாதாரச் சதவீதத்தில் 10 சதவீதமாவது அதிகமாக உள்ள சாதி/வகுப்பு.

மாநிலச் சராசரி அளவிலிருந்து 10 சதவீதம் வேறுபாடு என்னும் வரையறை நியாயமானதும் நேர்மையானதும் ஆகும் என்று நான் மேலும் கருதுகிறேன். இந்த வரம்பு உயர்த்தப்படுமாயின், அது தற்போதைய பிற்படுத்தப்பட்ட சாதிகளைப் பெரிதும் பாதிப்பதோடு, அனைத்துச் சாதிகளையும் முற்பட்டவையென அறிவிக்க வேண்டிய நிலைக்குக் கொண்டுபோய் விட்டுவிடும். இது முன்னுரிமைச் சலுகை அளிக்கப்படவேண்டிய நிலையிலிருந்து உண்மையான பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கு அந்தி இழைப்பதாகும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான இட ஒதுக்கீட்டில் சதவீதம், குழு நடத்திய ஆய்விலிருந்து தெரிய வந்துள்ள அந்தந்தச் சாதிகளின் மக்கட் தொகை விதாச்சாரத்திற்கேற்ப இருக்க வேண்டுமென்பதை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். இது தொடர்பான குழுவின் பரிந்துரையையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.

குழு தெரிவித்துள்ள பிற்பட்ட நிலைவாரியான தனித்தனி இட ஒதுக்கீட்டுக் கொள்கையை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

1971—72 முதல் 1975—76 வரையான கால அளவில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவிற்கு வரப் பெற்ற விண்ணப்பங்கள் யாவும் அழிக்கப்பட்டுவிட்டபடியால் அக் கால அளவு தொடர்பான விவரங்கள் கிடைக்க வில்லையென்று வரைவு அறிக்கையில் தொகுதி II, பிரிவு III, அத்தியாயம் 9ஏ—ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் மூலம் பல்வேறு முதல் நிலைப் பணிகளுக்கு (Class I Services) தேர்ந்தெடுக்கப் பட்டவர்களின் சாதிவாரித் தகவல்களையும், ஒவ்வொரு பிற்படுத்தப்பட்ட

சாதிக்கும் கிடைத்த இடங்களையும் குறிப்பிட்டு 11-4-1975 அன்று சட்டமன்றப் பேரவையில் அப்போதைய முதலமைச்சர் ஆற்றிய உரையின் நகலை இங்கே இணைத்துள்ளேன். 1975 வரை, கொங்கு வேளாளர் சாதியிலிருந்து முதல் நிலைப் பணிக்கு (Class I Services) ஒருவர்கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை.

75 சதவீத மதிப்பெண்களும் அதற்கு மேலும் பெறும் சாதிகளை மிக பிற்படுத்தப்பட்ட சாதிகளென்று அறிவிப்பதும், 75 சதவீத மதிப்பெண்களுக்குக் குறைவாக பெறும் ஏனைய சாதிகளை, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்ப்பதும்தான் நியாயமான, நேர்மையான முடிவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆனால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரென வகைப்படுத்தத் தகுதி பெற ஒவ்வொரு சாதியும் வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

(ஒப்பம்)————————,
(துரை இராமசாமி),
உறுப்பினர்,
பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு.

சென்னை,
18-2-1985.

(உண்மை நகல்)

(ஒப்பம்)————————,
தலைவருக்காக.

தமிழ்நாடு 1975ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்ட மன்ற பேரவை சட்டமுன் வடிவு எண் 15/75).

(டாக்டர் மு. கருணாநிதி), 1975 ஏப்ரல் 11.

பின்தங்கிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு எந்த எந்த வகையிலே எல்லாம் நன்மைகளைப் புரிகின்றது என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மாறான சில கருத்துக்களும் வேறு சில உறுப் பினர்களால் எடுத்துச்சொல்லப்பட்டது.

(பிற்பகல் 1.30)

நம்முடைய நண்பர் ஆலடி அருணா அவர்கள் பேசுகின்ற நேரத்தில்கூட இன்றைக்கிருக்கின்ற சர்வீஸ் கமிஷனில், நம்முடைய மாநில சர்வீஸ் கமிஷனில் யார் யாரையோ சேர்த்து விடுகிறார்களே, எப்படி எப்படியோ மார்க் போடு கிறார்களே என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனுடைய விவரத்திற்குள் நுழைய நான் விரும்பவில்லை. ஏனென்றால் சர்வீஸ் கமிஷனைப் பற்றிய விவாதம் அதிகமாக இந்தச் சபையிலே நடைபெறுவது முறையல்ல. திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் கூறியதைப் போல் இங்கே விவாதிப்பதற்கான சூழ்நிலை வருமேயானால் அப்பொழுது அவைகளைப் பற்றிப் பேசலாம். ஆனால் ஒன்றை மட்டும் நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1967ஆம் ஆண்டிலிருந்து 1974ஆம் ஆண்டு வரையில் எத்தனையோ பின் தங்கிய மக்கள் என்று இருந்தாலும்கூட அந்தப் பின்தங்கிய மக்கள் தங்களைப் பின்தங்கியவர்களாகக் கூறிக்கொள்ள தங்களுடைய வகுப்பின் பெயரை, கள்ளர் என்றோ, மறவர் என்றோ, வன்னியர் என்றோ சொல்லித்தான் தீர வேண்டி யிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் இதற்கு முன் மாநில சர்வீஸ் கமிஷன் முலமாக குரூப்-1 சர்வீஸுக்கு எவ்வளவு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரங்களை நாம் இந்த 7 ஆண்டுகால கட்டத்தில் 1967ஆம் ஆண்டிலிருந்து 1974ஆம் ஆண்டு வரையிலிலுள்ள இந்தக் கால கட்டத்தில் பார்க்கலாம். அந்த வகையில் இந்த ஏழாண்டு காலத்தில் பார்த்தால், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் டெபுடி கலெக்டர்கள் 7 பேர், போலீஸ் டெபுடி சூப்பிரடெண்ட் 4 பேர், ஜே.ஐ.டி.ஓ. 4 பேர், டெபுடி ரெஜிஸ்ட்ரார் 5 பேர், அசிஸ்டெண்ட் கமாண்டெண்ட் (போலீஸ்) 1, டெபுடி ரிஜிஸ்ட்ரார் 1, டிவிஷனல் தீயணைப்பு அதிகாரி 1 ஆக மொத்தம் 23 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

வன்னியர் வகுப்பைச் சேர்ந்தவர்கள், டெபுடி கலெக்டர்கள் 5, டி.எஸ்.பி. 3, ஜே.சி.டி.ஓ. 4, டெபுடி ரெஜிஸ்ட்ரார் 1, டிஸ்டிரிக்ட் ரெஜிஸ்ட்ரார் 1, ஆக மொத்தம் 14 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்கள், டெபுடி கலெக்டர் 3, டி.எஸ்பி. 1, ஜே.சி.டி.ஓ. 2, டெபுடி ரெஜிஸ்ட்ரார் 1, அசிஸ்டெண்ட் கமாண்டண்ட் 1, ஆக மொத்தம் 8 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

மறவர், டெபுடி கலெக்டர் 1, டி.எஸ்.பி. 2, ஜே.சி.டி.ஓ. 1, டெபுடி ரெஜிஸ்ட்ரார் 2, ஆக மொத்தம் 6 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

அகமுடையார் இனத்தைச் சேர்ந்தவர்கள், டெபுடி கலெக்டர் 5, ஜே.சி.டி.ஓ. 1, ஆக மொத்தம் 6 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

நாடார் இனத்தைச் சேர்ந்தவர்கள், டெபுடி கலெக்டர் 3 பேர், ஜே.சி.டி.ஓ. 6 பேர், டெபுடி ரெஜிஸ்ட்ரார் 2 பேர்கள், ஆக 11 பேர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

முஸ்லீம், டெபுடி கலெக்டர் 2 பேர், டி. எஸ், பி. 3 பேர், ஜே.சி. டி. ஓ. 2 பேர், டெபுடி ரெஜிஸ்ட்ரார் 1, ஆக எட்டு பேர்கள்தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

செங்குந்தர், டெபுடி கலெக்டர் 1, டெபுடி ரெஜிஸ்ட்ரார் 1, அசிஸ்டண்ட் கமாண்டண்ட் (போலீஸ்) 1, டிவிஷனல் தீயணைப்பு அதிகாரி 1, ஆக 4 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

கௌரா என்ற மிகப் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள், டெபுடி கலெக்டர் 1, டெபுடி ரெஜிஸ்ட்ரார் 1, அசிஸ்டண்ட் கமாண்டண்ட் (போலீஸ்) 1, ஆக 3 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

படகா வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெபுடி கலெக்டர் ஒருவர் தேர்ந்தெடுக்கப் பட்டு இருக்கிறார்.

வீரக்கொடி வெள்ளாளர் இனத்தைச் சேர்ந்தவர்களில் டெபுடி கலெக்டர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

சலவைத் தொழிலாளி, டெபுடி கலெக்டர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

பர்க்கவ குல நத்தமான் இனத்தைச் சேர்ந்தவர்களில் டெபுடி கலக்டர் 1, டி.எஸ்.பி. 1, ஆக இரண்டு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள்.

(1975 ஏப்ரல் 11)

தமிழ்நாடு 1975ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன் வடிவு
(சட்டமன்ற பேரவை சட்ட முன் வடிவு எண் 1575)

(டாக்டர் மு. கருணாநிதி)

துளுவ வெள்ளாளர் இனத்தைச் சேர்ந்தவர்களில் டெபுடி கலெக்டர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

குறும்பர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெபுடி கலெக்டர் ஒருவர் தேர்ந் தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

மூப்பனார் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெபுடி கலெக்டர் ஒருவர் தேர்ந் தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

தொண்டமான் இனத்தைச் சேர்ந்தவர்களில் டெபுடி கலெக்டர் ஒருவர் தேர்ந் தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

வடுகர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெபுடி கலெக்டர் 1, டி.எஸ்பி. 1, ஆக இரண்டு பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள்.

தேவாங்கர் வகுப்பபைச் சேர்ந்தவர்களில் டி.எஸ்.பி. ஒருவர் தேர்ந்தெடுக்கப் பட்டு இருக்கிறார்.

வலையர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டி.எஸ்.பி. ஒருவர் தேர்ந்தெடுக்கப் பட்டு இருக்கிறார்.

சக்கிலி வகுப்பைச் சேர்ந்தவர்களில் ஜே.சி.டி.ஒ. ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

யாதவர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் ஜே.சி.டி.ஒ. 3 பேர்கள், டெபுடி ரெஜிஸ்ட்ரார் 2, டிவிஷனல் பயர் ஆபீசர் 1, ஆக 6 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள்.

சேனைத் தலைவர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெபுடி ரெஜிஸ்ட்ரார் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

செட்டிஸ் பலூஜா வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெபுடி ரெஜிஸ்ட்ரார் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

வேட்டுவக் கவுண்டர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெபுடி கலெக்டர் 1, டெபுடி ரெஜிஸ்ட்ரார் 1, ஆக 2 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள்.

மருத்துவர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெபுடி ரெஜிஸ்ட்ரார் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

ஒட்டர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டிஸ்டிரிக்ட் ரெஜிஸ்ட்ரார் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

பிள்ளைமார் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெபுடி ரெஜிஸ்ட்ரார் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கௌரா நாயுடு வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெபுடி கலெக்டர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

வாணியர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் டெபுடி கலெக்டர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்,

ஆக மொத்தத்தில் 1967ஆம் ஆண்டு முதல் 1974 வரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட **113** பேர்களில் 112 பேர்கள் தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் வகுப்பைச் சார்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்த பட்டியலில் கிறித்துவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வரவில்லையே, அதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் இருப்பதைத்தான் சொல்கிறேன். இதையெல்லாம் பார்க்கும் நேரத்திலேதான் நம்முடைய கந்தப்பன் அவர்கள் கூறினார்கள். அவர் மட்டுமல்ல, இந்த மன்றத்திலுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள், கொங்கு வேளாள சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், கட்சி மாறுபாடு இல்லாமல் அண்மையில் என்னைச் சந்தித்து, ஒரு கோரிக்கையை என்னிடத்தில் கொடுத்து, கொங்குவேளாள சமுதாயத்தையும் இதில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள். இப்பொழுது கந்தப்பன் அவர்கள் விரிவாகப் பேசினார்கள். இதையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு மிகுந்த மகிழ்ச்சியோடு நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கொங்கு வேளாள சமுதாயம் பின் தங்கியோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எங்களுடைய நீண்ட கால கோரிக்கையை ஏற்றுக் கொண்டதற்காக நான் நன்றியைச் செலுத்திக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, திரு. வீராசாமி அவர்களுடைய துணையோடு சாத்தூரிலிருந்து ஒரு சந்தித்தார்களே, அதற்கு நிவாரணம் கிடைத்ததா?

திரு. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இப்பொழுது சொன்ன அறிவிப்பைத் தவிர நான் வேறு எதுவும் சொல்லுவதற்கில்லை.

தகல் ,

அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (4), 16 (4)ஆம் பிரிவுகளின்கீழ் அளிக்கப்படும் இட ஒதுக்கீடு 50 சதவீதத்திற்கு மேற்படலாமா ?

அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (4)ஆம் பிரிவு வருமாறு :—

''இந்திய குடிமக்களுள் சமூக ரீதியிலும், கல்வி ரீதியிலும் பின் தங்கிய நிலையி லிருக்கும் எந்த ஒரு வகுப்பினருடைய முன்னேற்றத்திற்காகவும், ஆதி திராவிடர், பழங்குடி வகுப்பினர் இவர்களுடைய முன்னேற்றத்திற்காகவும், அரசு, தனி வசதிகளைச் செய்து தருவதை இப் பிரிவில் அல்லது 29ஆம் பிரிவைச் சேர்ந்த (2) பகுதியில் சொல்லி யுள்ள எதுவும் தடை செய்யாது ''.

இந்த 15 (4)ஆம் பிரிவு, இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில், மாநில அரசுகளுக்கு வரம்பு எதனையும் நிர்ணயிக்கவில்லையென்பதும், மக்களில் நலிந்த பிரிவினர்களின் கல்வி, பொருளாதார நிலைகளை தனி கவனத்துடன் மேம்படுத்த மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கும் தெறிமுறை கோட்பாடு இதில் அடங்கியிருக்கிறது என்பதும், இப் பிரிவின் வாசகத்திலிருந்து நன்கு தெளிவாகிறது. ஆகையால், நலிந்த பிரிவினரின் கல்வி, பொருளாதார நிலையை விரைந்தும், தாராளமாகவும் மேம்படுத்துவதில்லை யாயின், சமூக, பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்துவது என்ற நோக்கத்தை எய்த முடியாது. இந்த நோக்கத்தை எய் வதற்குப் போதிய நடவடிக்கைகளை எடுக்க மாநில அரசுகளுக்கு இந்த 15 (4)ஆம் பிரிவு அதிகாரம் அளிக்கிறது.

எம். ஆர். பாலாஜி என்பவருக்கும், மைசூர் மாநில அரசுக்குமிடையே நடைபெற்ற வழக்கில் (ஏ.ஐ.ஆர். 1963 எஸ்.சி. 649) மாநில அரசு, அம்மா நிலத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கும் 68 சதவீத இட ஒதுக்கீடு வழங்கியதையும் பிற்பட்ட நிலையாரி தனித்த இட ஒதுக்கீடு செய்ததையும் செல்லாது என்று உச்ச நீதிமன்றம் தள்ளிவிட்டது. திரு. டி. தேவதாசன் என்பவருக்கும் மத்திய அரசுக்குமிடையே நடைபெற்ற வழக்கில் [1964(4) எஸ்.சி.ஆர். 680] (ஏ.ஐ.ஆர். 1964 எஸ்.சி. 179) சாதாரணமாக இட ஒதுக்கீடு 50 சதவீதத்திற்கு மேற்படக் கூடாது என்றும், மாநில அரசு நலிந்த பிரிவின ருக்குள்ள பிரச்சினைகளை நன்கு ஆய்வு செய்து, அவர்களின் பொதுவான தேவைகள் என்ன என்பதைக் கண்டறிந்து அவர்களின் முன்னேற்றத்திற்கு உதவ நியாயமான, தாராளமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் இதற்காகப் பொருத்த மானதொரு வழிமுறை வகுக்க வேண்டும் என்றும், அவ்வாறு வகுக்கப்படும் வழிமுறை, இது தொடர்பான பல்வேறு நியாயமான ஒன்றாக இருக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக் கப்பட்டது. ஆனால், கேரள அரசுக்கும் என். எம். தாமஸ் என்பவருக்குமிடையேயான வழக்கை (ஏ.ஐ.ஆர். 1976 எஸ்.சி. 490) விசாரித்த உச்ச நீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகள் அடங்கிய ஆயத்தில் நீதிபதி திரு. ஃப்சல் அலி, ஏனையவற்றிற்கிடையே, அரசிய லமைப்புச் சட்டத்தின் 16 (1) பிரிவில் சொல்லியுள்ள கொள்கையைத் தோல்வியுறச் செய்யக் கூடிய வகையில், மிதமிஞ்சிய இட ஒதுக்கீடு செய்ய மாநில அரசுகளை அனுமதிக்கக் கூடாது என்று கருத்து தெரிவித்துள்ளார். அனுமதிக்கத் தக்க, பொருத்த மான இட ஒதுக்கீட்டின் அளவு என்பது, ஒவ்வோர் இனத்தின் தன்மையையும் சூழ்நிலை யையும் பொறுத்திருக்கும், இந்த வகையில் கண்டிப்பான விதிமுறைகள் ஏதுமும் இருக்க முடியாது ; அனைத்து இனங்களுக்கும் பின்பற்றக் கூடிய கணித முறையாகிய ரிதி ஒன்றை ஆக்கக் கூடாது. இட ஒதுக்கீட்டளவு 50 சதவீதத்திற்கு மேற்படக் கூடாது என்று உச்ச நீதிமன்றத்தில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. என்பதில் ஐயமில்லை. இருப்பினும், இது ஒரு எச்சரிக்கை விதி ஆகுமே தவிர எல்லா நேர்வுகளிலும் இதனையே பின்பற்ற வேண்டியதில்லை என்று அவர் கருத்து தெரிவித் துள்ளார். உதாரணமாக, மொத்த மக்கட் தொகையில் 80 சதவீதத்தினர் பிற்படுத்தப் பட்ட வகுப்பினராக உள்ள ஒரு மாநிலத்தின் அரசு, அவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிப்பதற்காக பணியிடங்களில் 80 சதவீதத்தை அவர்களுக்காக ஒதுக்குகிறது என்று வைத்துக் கொள்வோம். இந்த இட ஒதுக்கீடு மோசமான தென்றோ, 16ஆம் பிரிவைச் சேர்ந்த (4) பகுதியில் சொல்லப்பட்ட அனுமதிக்கத் தக்க அளவை மீறுவதாகும் என்றோ கூற முடியுமா ? இதற்கான பதில் முடியாது என்றே இருக்கும். அவருடைய கூற்றுப் படி, இந்த விதித் தளையின் முதன்மையான நோக்கம், போதிய பிரதிநிதித்துவம் கிடைக்காதவர்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே ஆகும்.

மீண்டும், திரு. ஏ. பி. எஸ். கே. சாங் (ரயில்வே) என்பவருக்கும், மத்திய அரசுக்கு மிடையே நடைபெற்ற வழக்கில் (1980ஆம் ஆண்டு தொழிலாளர் நல–தொழில் வழக்கு கள் 1325) நீதிபதி சென்னப்ப ரெட்டி தெரிவித்த கருத்தை இங்கே நினைவு கூறுவது பொருத்தமாக இருக்கும். அவர் தெரிவித்தாவது :—

'' அரசுப் பணிகளில் ஆதி–திராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் உரிய பிரதி நிதித்துவம் கிடைக்கச் செய்வதற்கான சட்டப்படியான ஒவ்வொரு முறையும் அனுமதிக்க தக்கதே. பொதுவாக இட ஒதுக்கீடு, இம்பது சதவீதத்தை மிஞ்சக் கூடாது என்றாலும், ஆதி–திராவிடர்கள்—பழங்குடியினர்களுக்கான முன்னுரிமை ஒதுக்கீட்டுக்கு எவ்வித உச்ச வரம்பும் நிர்ணயிக்கப்படவில்லை. 50 சதவீத விதி கண்டிப்பான ஒன்றல்ல ;

அது நீதிபதிகள் வகுத்தளித்த ஒரு வசதியான வழிமுறையாகும். குறிப்பிட்ட முன்னுரிமை விதியைச் செயலபடுத்தியதால் தற்போது ஏற்பட்டுள்ள நடமுறை விளைவுகளின் அடிப்படையில்தான் ஒவ்வோர் இனத்தையும் முடிவுசெய்ய வேண்டுமேயொழிய அந்த விதியை செயல்படுத்தினால் எதிர்காலத்தில் என்ன விளைவுகள் ஏற்படக் கூடும் என்ற ஊகத்தின் அடிப்படையில் முடிவு செய்யக் கூடாது.

இச் சூழ்நிலைகளில், இட ஒதுக்கீட்டிற்கான உச்ச வரம்பை 50 சதவீதமாகத்தான் இருக்க வேண்டுமென்ற கட்டாயம் எதுவுமில்லை. இட ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருக்குமானால் அவ்வாறே அதிகரிக்கவும் செய்யலாம்.

1920-ஆம் ஆண்டுக்குப் பிறகு சாதி வாரியான மக்கட் தொகை புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை. சட்டநாதன் குழு, 1920, 1930ஆம் ஆண்டுகளின் மக்கட் தொகைப் புள்ளி விவரங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு சாதிவாரி மக்கட் தொகையை விரித்துக் கணக்கிட்டது. 1970-ஆம் ஆண்டில், மாநில மொத்த மக்கட் தொகையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் மக்கட் தொகை 52 சதவீதமே ஆகும்.

ஆனால், கடைசியாக குழு நடத்திய சாதி வாரியான மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி, இம்மாநிலத்தின் மொத்த மக்கட் தொகை 4,99,90,743 ஆகும். இவர்களில் 3,35,70,805 பேர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்; 92,08,917 பேர் ஆதி திராவிடர்கள்; 5,54,918 பேர் பழங்குடியினர் ஆவர். எஞ்சிய 66,56,103 பேர் முற்பட்ட சாதியினர் ஆவர். ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோரின் மொத்த மக்கட் தொகை 97,63,835 ஆகும். இது மொத்த மக்கட் தொகையில் 18 சதவீதம் ஆகும். அவர்களின் மக்கட் தொகை சதவீதத்திற்குச் சமமாக மாநில அரசு அவர்களுக்கு 18 சதவீத இட ஒதுக்கீடு அளித்துள்ளது. இம் மாநிலத்தின் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் மக்கட் தொகை, மொத்த மக்கட் தொகையில் 67.15 சதவீதம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆகையால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்காக 67 சதவீதம் வரை இட ஒதுக்கீடு அளிக்க முகாந்திரமுள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு மாநில அரசு 50 சதவீதம் மட்டுமே ஒதுக்கியுள்ளது. அதே நேரத்தில் ஆதி-திராவிடர்கள் பழங்குடியினர்களுக்கு 18 சதவீத இட ஒதுக்கீடு செய்துள்ளது. மொத்தத்தில் இவ் வகையில் 68 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. எஞ்சியுள்ள 32 சதவீதத்தை முற்பட்ட சாதியினரும் ஏனையோரும் இறமையின் அடிப்படையில் பகிர்ந்து கொள்கின்றனர். ஆகையால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்குதற்போது ஒதுக்கப்பட்டுள்ள இந்த 50 சதவீதத்தையாவது தொடர்ந்து வைத்து வர யாரும் நியாயமாக மறுக்க முடியாது என்று கருதப்படுகிறது.

(உண்மை நகல்)

(ஒப்பம்)
எம். கே. பாலசுப்ரமணியம்.

நகல் :

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (4), 16 (4)ஆம் பிரிவுகளின் கீழ் பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு குறித்த குறிப்பு.

எம். கே. பாலசுப்ரமணியம்:

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களிடையே, அவர்களின் முன்னேறிய/பிற்பட்ட நிலைக் கேற்ப, பல்வேறு அடுக்கு நிலைகள் காணப்படுகின்றன. எனவே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை அவர்களின் பிற்பட்ட நிலைக்கேற்ப தனித்தனி பிரிவுகளாகப் பிரித்து, அந்த ஒவ்வொரு பிரிவின் கீழும் வருகின்ற சாதிகளின் மக்கட் தொகைக்கேற்ப, அவர்களுக்கு உயர் கல்வி நிறுவனங்களில் இடங்களும், அரசுப் பணிகளில் பதவிகளும் ஒதுக்கலாம் என்று அரசுக்குக் குழு பரிந்துரை செய்வது உகந்ததாக இருக்கும் என்று தாழ்மையாக சுற்றறிக்கையில் குறிப்பில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழு நடத்திய ஆய்வின் மூலம் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களையொட்டி, சமூக, கல்வி ரீதியாக பிற்பட்ட சாதி/வகுப்புகளைத் தீர்மானிப்பதற்கான அளவுகோல்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. சமூக ரீதியான பிற்பட்டநிலையைத் தீர்மானிப்பதற்கான அளவுகோல்களின் அடிப்படையில் அதற்கு 9 மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் அளவு கோலுக்கும் 2 மதிப்பெண்கள் என்ற வீதத்தில் கல்வி ரீதியான பிற்பட்ட நிலையத் தீர்மானிக்க 6 மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மொத்தம் 15 மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் கல்வி ரீதியான பிற்பட்ட நிலை என்பதன் கீழ் குறைந்தது 2 மதிப்பெண்களும் மொத்தத்தில் 7 மதிப்பெண்களுக்கு மேலும் பெறும் சாதி/வகுப்புகள் 15 (4)ஆம் பிரிவின்கீழ் இட ஒதுக்கீடு சலுகை அளிக்க, சமூக, கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்ட வகுப்புகளாக அறிவிக்கப்பட தகுதியுடையனவாகும். அவர்களுள், அரசுப் பணியில் போதிய பிரதிநிதித்துவம் பெறாத சாதியினர், 16 (4)ஆம் பிரிவின்கீழ் பதவி ஒதுக்கீடு பெற தகுதி பெறுவர்.

பிற்பட்ட நிலையைத் தீர்மானிப்பதற்கான அளவுகோல்கள் சோதனையைப் பின்பற்றி, பிற்படுத்தப்பட்ட சாதி/வகுப்புகளைத் தெரிந்தெடுத்த பிறகு இந்த சாதி, அவர்க ள அவர்களின் பிற்பட்ட நிலையின் அளவுக்கேற்ப, அ, ஆ, இ எனத் தொகுதி தொகுதியாகப் பிரித்து 15 (4)ஆம் பிரிவின்கீழ் தனித்தனி அளவுகளில் இட ஒதுக்கீடு அளிப்பதில் அர்த்தமில்லை. மேலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அரசு பணிகளில் பெற்றுள்ள பிரதிநிதித்துவ அளவுகளுக்கேற்ப, அவர்களை மூன்று தொகுதி களாகப் பிரித்துத் தனித்தனி இட ஒதுக்கீடு அளிக்கலாமென்று தலைவர் கருத்து தெரிவித்துள்ளார்.

அறிவியல் பூர்வமான அளவுகோல்களைப் பின்பற்றி சமூக, கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்ட வகுப்புகள்/சாதிகளைத் தீர்மானித்த பின்னர் 15 (4)ஆம் பிரிவின்கீழ் சலுகைகளை அளிப்பதற்காக, அவர்களிடையே காணப்படுவதாகக் கூறப்படும் முற்பட்ட/ பிற்பட்ட நிலைகளின் அடிப்படையில் அவர்களை மூன்று தொகுதியினர்களாக மீண்டும் வகைப்படுத்த வேண்டிய அவசியமில்லை. இதே போல, அரசுப் பணிகளில் பெற்ற பிரதிநிதித்துவத்தில் இருப்பதாகக் கூறப்படும் பல்வேறு நிலைகளுக்கேற்ப பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்களை மூன்று தொகுதியினர்களாக பிரித்து, பிற்பட்ட நிலை வாரி தனித்தனி இட ஒதுக்கீட்டு அடிப்படையில் பதவி ஒதுக்கீடு அளிக்க வேண்டுமென்ற கருத்தும் தேவையற்றதாகும்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (4)-ஆம் பிரிவின்கீழ் சலுகைகள் அளிக்க, பிற்பட்ட வகுப்பினரை அவர்களின் முற்பட்ட நிலையை ஒட்டி அல்லது பிற்பட்ட நிலையை ஒட்டி வரிசைப்படுத்தி பட்டியல் தயாரித்தளிக்கும்படி குழு கேட்டுக் கொள்ளப்படவில்லையென்பதை குழுவின் ஆய்வு வரம்புகள் தெரியபடுத்துகிறது. இதே போல, அரசுப் பணிகளில் கிடைத்துள்ள பிரதிநிதித்துவ அளவிற்கேற்ப,அரசியலமைப்புச் சட்டத்தின் 16 (4) பிரிவின்கீழ் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்குச் சலுகைகள் அளிப்பது தொடர்பாக பரிந்துரைக்க வேண்டுமெனவும் குழு கேட்டுக் கொள்ளப்பட வில்லை. அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (4) 16 (4)ஆம் பிரிவுகளின்கீழ் சலுகைகள் வழங்க பிற்படுத்தப்பட்ட வகுப்பை இவ்வாறு மூன்று தொகுதிகளாக வகைப்படுத்துவது அரியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று நான் கருதுகிறேன். எம்.ஆர். பாலாஜிக்கும் மைசூர் மாநில அரசுக்குமிடையே நடைபெற்ற வழக்கில் (ஏ.ஐ.ஆர். 1963 எஸ்.சி. 649) உச்சநீதிமன்றத்தின் முன் எழுப்பப்பட்டதொரு சுவாரசியமான வினாவைப் பற்றி இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும். நாகண்ண கவுடா குழுவின் பரிந்துரையின் பேரில், முன்பிருந்த மைசூர் மாநில அரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பினை ஒன்றுக்கு மேற்பட்ட வகைகளாகப்பிரித்து 15 (4)-ஆம் பிரிவின்கீழ் ஆணை பிறப்பித்து, பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு என்று வகைப்படுத்தியது. 15 (4)-ஆம் பிரிவின்கீழ் தேவையற்றதாகும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் உள்ள ஒவ் சாதிகள், அப்பட்டியலில் உள்ள மற்ற சாதிகளோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது போதிய பிரதிநிதித்துவம் பெறவில்லை யென்று மாநில அரசுகள் கருதினால், பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீட்டு முறையைக் கொண்டு வர அரசியலமைப்புச் சட்டத்தின் 16(4)-ஆம் பிரிவின்கீழ் அவற்றுக்கு அதிகாரம் உண்டு என்று தலைவர் கருதுவதாகத் தோன்றுகிறது. 16 (4)-ஆம் பிரிவின்கீழ் மாநில அரசுக்குள்ள இந்த அதிகாரத்தை ஒரே பட்டியலில் இடம் பெறறுள்ள ஒரு வகை பிறப்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கும், மற்றொருவகை பிற்படுத்தப் பட்ட வகுப்புகளுக்குமிடையே பாகுபாடு காட்டுகின்ற வகையில் பயன்படுத்த முடியாது. மேலும், இக் கருத்து, இம்மாநிலத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடையே பாகுபாடு ஏற்படுத்தி, விரிசல் உண்டாக்கி சமத்துவமின்மை, ஏற்றத் தாழ்வு, அதிருப்தி ஏமாற்றம் ஆகியவற்றுக்கு வழி கோலும்.

தலைவர் கருத்து தெரிவித்துள்ளபடி மூன்று தொகுதிகளில் கூட அவர்களிடையே ஒரு சில சாதிகள்/வகுப்புகள் மட்டுமே பயன் அடைகின்றன என்றும், ஏனைய பல சாதிகளுக்கும் ஒரே சாதியினரிடையே கூட அனைவருக்கும் இட ஒதுக்கீட்டுச் சலுகை போய்ச் சேருவதில்லை என்றும் புகார்கள் வரக் கூடும். இம்மாநிலத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பல்வேறு சாதிகளுக்கிடையே மட்டுமின்றி ஒரே சாதியைச் சேர்ந்த பல குடும்பங்களுக்கும் கூட இந்த சலுகைகள் கிட்டுவதில்லை யென்பது அனைவரும் அறிந்ததே. பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரே சாதியில் கூட பல தட்டுக்கள் உள்ளன என்பதும், ஒவ்வொரு சாதியிலும் உள்ள மேல்தட்டு மக்களே அரசு அளிக்கும் உதவிகளை நன்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்றேயாகும். கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் எப்போதும் போல் கவிழ்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். இவர்களுக்கு பொருளாதார ரீதியான உதவி களும் ஏனைய பயன்களும் போதிய அளவில் கிடைக்க மாநில அரசு முயற்சி எடுக்க வேண்டும். அப்போதுதான், கீழ் தட்டு மக்கள் அடிப்படைச் சலுகைகளைப் பெற்று, ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு நிகராக முன்னேற முடியும்.

இச் சூழ்நிலைகளில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களிடையே உட்பிரிவினைகள் செய்து, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (4) 16 (4)-ஆம் பிரிவுகளின்கீழ் அப்பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி அளவுகளில் இட ஒதுக்கீடு அளிப்பது உசிதமானதோ அல்லது அறிவு பூர்வமானதோ அல்ல. மேலும் இது அரசியலமைப்புச் சட்டத்தின்படி செல் திறனுடையதும் ஆகாது. ஆகையால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைப் பல்வேறு தொகுதிகளாகப் பிரிப்பது தேவையற்றதென்றும் இதனைக் கைவிடலாம் என்றும் நான் கருதுகிறேன்.

(ஒப்பம்)
(எம். கே. பாலசுப்ரமணியம்)

(உண்மை நகல்)

(ஒப்பம்)
தலைவருக்காக.

நகல் :

பிரிவு—11. அத்தியாயம் 7 (ஏ) (i) 11—'' சமூக ரீதியில் பிற்பட்ட நிலையும் கல்வி ரீதியில் பிற்பட்ட நிலையும்'' என்பது குறித்த, தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலக் குழுவின் உறுப்பினர் திரு. எம். கே. பாலசுப்ரமணியன், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களின் கருத்து.

ஒரு சாதி/வகுப்பு, சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பிற்பட்ட நிலையில் இருந்தால் மட்டுமே, அது பிற்படுத்தப்பட்ட சாதி/வகுப்பாக அறிவிக்கத் தகுதி பெறும். பிற்பட்ட நிலையின் இந்த இரண்டு கூறுகளில், ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்பதற்கு எந்த நிதிமன்றமும் திட்டவட்டமாகத் தீர்ப்பு அளிக்கவில்லை; அல்லது அரசியலமைப்புச் சட்டத்திலும் வரையறுத்துக் கூறப்பட வில்லை. இது பல்வேறுகுழ்நிலைகள் சார்ந்த சிக்கலானதொரு பிரச்சினை என்றும், இது மாநிலத்திற்கு மாநிலம், ஏன் ஒரே மாநிலத்துக்குள்ளாகவே இடத்திற்கு இடம் மாறுபடக் கூடுமென்றும் உச்சநீதிமன்றம் ஏற்கனவே அறிவித்துள்ளது.

2. நம்முடைய இந்து சமுதாயத்தில், நம்முடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும் சாதி முக்கியப் பங்கு வகித்து அழிவுப் பாதைக்கு அழைத்து செல்கிறது. குறிப்பில் சரியான முறையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளபடி, சாதி ஒரு மூலக் கூறு ஆகும். சமூக ரீதியான பிற்பட்ட நிலையைத் தீர்மானிக்க இது ஒன்றை மட்டுமே அளவுகோலாகவேர அல்லது தலையாய அளவு கோலாகவோ கொள்ள முடியாது.

3. சாதிக்கு 3 மதிப்பெண்களும், ஏனைய இரண்டு அளவுகோல்களுக்கு அதாவது தொழில் வகை பிற்பட்ட நிலை, ஏழ்மை) 6 மதிப்பெண்களுமாக சமூக ரீதியான பிற்பட்ட நிலைக்கு 9 மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தொழில் ரீதியான பிற்பட்ட நிலை குறித்த துணைக் கூறை சாதிக்கு நிகராகக் கருதி 3 மதிப்பெண்கள் அளிக்கலாம் என்றும், ஏழ்மை குறித்த ஏனைய துணைக் கூறுக்கு 2 மதிப்பெண்கள் அளிக்கலாம் என்றும் கருத்து தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு பார்க்கும் போது சமூக ரீதியான பிற்பட்ட நிலைக்கான மொத்த மதிப்பெண்கள் 8 ஆகும். [மண்டல் குழு மொத்தமுள்ள 22 மதிப்பெண்களில் '' பொருளாதாரம்'' என்பதன் கீழ் 4 மதிப்பெண்களை மட்டுமே ஒதுக்கியுள்ளது. இது 18 சதவீதம் ஆகும். நாம், 15 மதிப்பெண்களில் ஏழ்மைக்கு 3 மதிப்பெண் ஒதுக்காமல், (20 சதவீதம்) 14 மதிப்பெண்களில் ஏழ்மைக்கு 2 மதிப்பெண் கொடுத்தாலே போதுமானது].

4. கல்வி ரீதியான பிற்பட்ட நிலையை 3 ஆய்வுகள்[அளவுகோல்களைக் கொண்டு (ஒவ்வொரு அளவு கோலுக்கும் 2 மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளன) கண்டறியப்படவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கல்வி ரீதியான பிற்பட்ட நிலைக்கு மொத்தம் 6 மதிப்பெண்கள் ஒதுக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, சமூக மற்றும் கல்வி ரீதியான பிற்பட்ட நிலைகளுக்கு மொத்தம் 14 மதிப்பெண்கள் ஒதுக்கப்படுகின்றன. கல்வி ரீதியான பிற்பட்ட நிலை என்பதன் கீழ் குறைந்தது 2 மதிப்பெண்களும் மொத்தத்தில் 7-ம் அதற்கு மேலும் மதிப்பெண்கள் பெறும் சாதியை பிற்படுத்தப்பட்ட சாதியாக அறிவிக்கலாம். (இதற்கு தகுதி பெற 50 சதவீதம் அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டுமென மண்டல் குழு கூறுகிறது).

5. கல்வி ரீதியான பிற்பட்ட நிலையைவிட சமூக ரீதியான பிற்பட்ட நிலைக்கு அதிக சதவீத மதிப்பெண் அளிக்கப்பட வேண்டுமென்றும், சாதி ஒன்று மட்டுமே அல்லது அதையே தலையாய அளவுகோலாகக் கொள்ளக்கூடாது என்றும் தீர்ப்பில் ...ட்ட கொள்கையை மேற்சொன்ன கருத்து நிறைவு செய்யும்.

(2) தொழில் ரீதியான பிற்பட்ட நிலை :—

6. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள ''முக்கியமாக'' என்ற சொல், ஒரு சாதியில், 50 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் பிழைப்புக்கு உடல் உழைப்பையே நம்பியிருக்க வேண்டுமென்று பொருள் தராம். ''முக்கியமாக'' என்ற சொல்லை நீக்கி விட்டு, அதற்கு பதிலாக ''பொதுவாக'' என்ற சொல்லை சேர்த்துக் கொள்ளலாம்.

7. பிழைப்பிற்கு உடலுழைப்பையே பொதுவாக நம்பியிருக்கும் சாதி (உதாரணமாக அதன் உழைக்கும் மக்கட் தொகையில் 30 சதவீதம் அல்லது அதற்குமேல்) இந்த வகையின் கீழ் 2 மதிப்பெண்கள் பெறத் தகுதியுடையதெனக் கருதலாம்.

(3) ஏழ்மை :—

8. கூரை வீடுகளில் வாழ்கின்ற குடும்பங்களின் சதவீதம் மாநில சராசரி அளவை விட 10 சதவீதம் அதிகமாக உள்ள சாதிகள் 2 மதிப்பெண் பெறத் தகுதியானவையென்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. ஓரளவு நல்ல வீடுகளை, நல்ல வீடுகளோடு ஒப்பிட முடியாது. நல்ல வீடாக இல்லாதவை அனைத்தையும் (அதாவது 'கூரை வீடுகள்' ஓரளவு நல்ல வீடுகள்) ஒன்றாகக் கருதி, இவ்வகை யான வீடுகளில் அதிகமாக வாழும் குடும்பங்களைக் கொண்ட சாதியை, இந்த வகையின் கீழ் 2 மதிப்பெண் பெறத் தகுதியுடையவை என்று வகைப்படுத்தலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒப்பம்)
(எம்.கே. பாலசுப்ரமணியன்)
14—2—1985

(உண்மை நகல்)
(ஒப்பம்)
தலைவருக்காக.

நகல் :—

மாதிரி ஆய்வின் மூலம் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களைப் பின்பற்றுவது தொடர்பாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலக் குழு உறுப்பினர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியன், இ.ஆ.ப. (ஓய்வு) தெரிவித்த கருத்துக்கள் :

குழுவின் உறுப்பினர்களுக்குச் சுற்றறுப்பப்பட்ட குறிப்பில், தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலை மறு ஆய்வு செய்வதற்காக வகுக்கப் பட்டுள்ள சமூக, கல்வி ரீதியான பிற்பட்ட நிலை அளவுகோல்கள் பற்றி குறிப் பிடப்பட்டுள்ளது. இந்த அளவு கோல்களைப் பொறுத்தமட்டில், சில கூறுபாடு களும் குறியீட்டு அளவுகளும் வகுக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக மதிப்பெண்கள் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மொத்தத்தில் 15 மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பல்வேறு கூறுபாடுகள் குறியீட்டு அளவுகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய மதிப்பெண்கள் குறித்து நான் தனியாக ஒரு குறிப்பை கொடுத்துள்ளேன். அன்புகூர்ந்து அதனைப் பரிசிலிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

2. இந்த அளவு கோல்களைக் கொண்டு பிற்பட்ட நிலையைத் தீர்மானிக்க, இரண்டாவது கட்ட ஆய்வில், மாதிரி ஆய்வின் மூலம் சேகரித்த புள்ளி விவரங் களைத் தான் குழு நம்பியிருக்க வேண்டியுள்ளது. இந்த இரண்டாவது கட்ட ஆய்வில் மொத்தமுள்ள குடும்பங்களில் 1 சதவீதக் குடும்பங்கள் மட்டுமே ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இந்த ஆய்வில் சுமார் 1 இலட்சம் குடும்பங்கள் ஆய்வு செய்யப்பட்டிருக்கும். இந்த ஆய்வு எதேச்சை மாதிரி ஆய்வுக் கொள்கையைப் பின்பற்றி நடத்தப்பட்டுள்ளது. மாதிரி ஆய்வில் ஒரு சாதியைப் பற்றி முழுமையாக ஆய்வு நடத்தாத நிலையில் அந்த ஆய்வின் மூலம் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களை அச் சாதி முழுமைக்கும் பயன்படுத்தி எடுக்கப்படும் முடிவுகள் தவறான வையாக அமைந்து விடக்கூடும். மாதிரி ஆய்வில், குறைந்தது ஒவ்வொரு சாதியிலும் ஒரு சதவீத குடும்பங்களாவது இடம் பெற்றிருக்க வேண்டும். அப்படியில்லையாயின் அத்தகைய ஆய்வின்மூலம் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களை அச்சாதி முழுமைக்கும் பொதுவானவையாகக் கொண்டு, அதற்குப் பாதகமாய் அமைந்துவிடக் கூடிய முடிவை எடுத்துவிடக் கூடாது.

3. மேலும், ஒரு இலட்சத்திற்குக் குறைவாக மக்கட் தொகை உள்ள சிறு சாதிகள்/உட்பிரிவுகளுக்கு மாதிரி ஆய்வின் மூலம் சேகரிக்கப்பட்ட முழுமையில்லாத புள்ளி விவரங்களின் அடிப்படையிலான அளவுகோல்களைப் பயன்படுத்தாமல் விலக்களிக்கலாம். அச் சாதிகளை பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலிலேயே தொடர்ந்து இருக்க அனுமதிக்கலாம்.

(ஒப்பம்)
(எம்.கே. பாலசுப்பிரமணியன்)
14—2—1985

(உண்மை நகல்)
(ஒப்பம்)
தலைவருக்காக.

நகல் :

எஸ். கே. பாலகிருஷ்ணன், எம்.சி.
முன்னாள் மேயர், மதுரை.

தொலை பேசி 32932
25, வேலாயுதம் பிள்ளை
முதல் சந்து
மதுரை 625 001

நாள் 7-2-1985.

சேர்மேன்,
திரு. ஜெ.அ. அம்பாசங்கர்,
தமிழ்நாடு பிற்பட்டோர் நலக்குழு,
27, சர். சி. வி. இராமன் சாலை,
ஆழ்வார்பேட்டை, சென்னை-18.

அன்புடையீர்,

தமிழ்நாடு பிற்பட்டோர் நலக்குழுவின் சார்பில் ஒவ்வொரு மாவட்டம் தோறும் சென்று பொது மக்களிடம் பிற்பட்ட சமூக மக்களின் நிலை தெரிந்து கொள்வதற்காக மகஜர் பெற்றுக் கொண்டோம். ஆனால் மேற்கண்ட மகஜர்களில் கண்ட அந்தந்த சமூகத்து மக்களின் மொத்த எண்ணிக்கை பிரகாரம் தாங்கள் எடுத்துக் கொடுத்த கம்ப்யூட்டர் லிஸ்ட் பிரகாரம் இல்லை. மாறுபட்டதாக தெரிகிறது. ஒரு சிறிதளவு ஹித்தியாசம் கூட இல்லை அதிக அளவு வித்தியாசமாக தெரிகிறது. ஆகையினால் இது ஒரு பெரிய தவறுதலில் கொண்டு போய் விட்டுவிடுமோ என்று அஞ்சுகிறேன்.

உதாரணமாக சௌராஷ்டிரா சமூகத்து மக்களின் சார்பாக கொடுத்த மகஜரில் சுமார் 7 லட்சம் மக்கள் உள்ளனர் என்று குறிப்பிட்டிருக்கின்றனர். (சமூக Code No. 263) ஆனால் கம்ப்யூட்டர் மூலம் வந்தது சுமார் 1,89,563 என்று இருக்கிறது.

ஜனத் தொகை சரிவர கணக்கிடலில்லையென்றால் எந்த சதகிவித அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட நிலை அறிய முடியும் என்று கருதுகிறேன். ஆகையினால் குறிப்பாக மேற்கண்ட சமூகத்தில் (கெ. 263) ஒவ்வொரு ஊர்களில் எவ்வளவு என்று குறிப்பிட்டு கொடுத்தால் சரிபார்த்து கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

தவிர மோஹன் ஜட்ஜ்மெண்டில் மிக விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. அனைத்து கோர்ட் ஜட்ஜ்மெண்ட்களும் அதில் விளக்கத்துடன் வருகின்றன. மேலும் தமிழக ஜனத்தொகையில் 67 சதவீதம் பிற்பட்ட சமூகத்து மக்களாகவும் உள்ளனர். இவர்களின் சமூக நிலையோ. கல்வியின் நிலையிலோ அல்லது பொருளாதாரத் துறையிலோ முன்னேற்றம் கண்டதாக தெரியவில்லை.

தமிழக பிற்பட்டோர் நலத் துறை ஆரம்பத்தில் எடுத்த கணக்கெடுப்பில் உள்ள பணத்தின் மதிப்பும் தற்பொழுது உள்ள பணத்தின் மதிப்பும் பார்க்கும் பொழுது மிக அதிகப்படியான வித்தியாசம் காணக்கிடக்கிறது. பணத்தின் மதிப்பு மிக மிக தாழ்ந்து கிடக்கிறது 10 வருடங்களுக்கு முன்பு வேலை செய்யும் தொழிலாளி மாதம் ஒன்றுக்கு ரூ. 100 சம்பளம் பெற்றான் என்றால் இன்று மாதம் ஒன்றுக்கு ரூ. 1,000 சம்பளம் பெறுகிறான். அதற்கு தகுந்தாற்போல் விலைவாசி ஏற்றமும் இருக்கிறது. ஆகையால் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் என்று சொல்லவும் முடியாது.

ஆகையினால் பிற்பட்ட சமூகத்தினருக்காக 50 விழுக்காடுகள் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புள்ள

(ஒப்பம்) எஸ்.கே. பாலகிருஷ்ணன்,

(உண்மை நகல்).

(ஒப்பம்)

கலைவருக்காக.

மாநிலச் சராசரி அளவிலிருந்து வேறுபட்டிருக்க வேண்டிய அளவு பற்றிய குறிப்பு.

மாநில சராசரி அளவிலிருந்து வேறுபட்டிருக்க வேண்டிய அளவு தொடர்பான வரைவு அறிக்கையின் 7ஆ அத்தியாயத்தில், பாலாறு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்ட 50 சதவீத வேறுபாடு குறித்த முடிவையும், மண்டல் குழு கருத்து தெரிவித்த 25 சதவீத வேறுபாடு குறித்தும் முழுமையாக விளக்கிக் கூறிய பிறகு, மாநில சராசரி அளவிலிருந்து 10 சதவீத வேறுபாட்டைப் பின்பற்றுவதுதான் நியாயமானதும், முறையானதும் ஆகும் என்று பரிந்துரைக்கப்பட்டது. மாநில சராசரி அளவையே வரையறைப் புள்ளியாகக் கொள்ள வேண்டுமென உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். அத்தகைய நடைமுறையை நாகனூர் கவுடா குழு பின்பற்றியது. ஆனால், பின்வரும் கருத்துக்களுடன் அது நிராகரிக்கப்பட்டு விட்டது.

" மாநில சராசரி அளவு 6.9 அல்லது 7ஆ இருந்து ஒரு சாதியின் மாணவர்களின் எண்ணிக்கை விகிதமும் அதே அளவில் அதாவது மாநிலச் சராசரி அளவுக்குச் சமமாக இருக்குமானால் அச் சாதியை கல்வி ரீதியாக பிற்பட்டதெனறு கருதுவது தவறாகும் என்று நாங்கள் கருதுகிறோம் ".

இந்த அம்சத்தை உறுப்பினர்கள் பரிசீலிக்க வேண்டுமென்பதற்காகவே அவர்களின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வந்துள்ளேன்.

16 (4)ஆம் பிரிவின்கீழ் தனிப் பட்டியல் தயாரிப்பது குறித்த குறிப்பு.

16 (4)ஆம் பிரிவின் கீழான இட ஒதுக்கீடு, சமூக, கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இருந்து, மாநில அரசுப் பணியில் போதிய அளவிற்குப் பிரதிநிதித்துவம் பெறாமலிருப்பவர்களுக்கு மட்டுமே உரியதாகும். அனைத்து பணியாளர்கள் குறித்தும் தகவல்கள் சேகரித்துள்ளோம். ஒரு சாதி/வகுப்பு, அளவு (எண்ணிக்கை) நிலையிலும், பதவித்தர நிலையிலும் ஏற்கனவே போதிய அளவிற்குப் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தால், அந்த சாதி/வகுப்பு, 16 (4)ஆம் பிரிவின்கீழ் இட ஒதுக்கீடு பெறத் தகுதியுடையதாகாது. இது, அரசியலமைப்புச் சட்டத்தின் விதித் துறைகளுக்கு முரணானதாகவும் இருக்கும்.

(ஒப்பம்).....
(ஜெ. அ. அம்பாசங்கர்),
தலைவர்,
தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு,
சென்னை-18.

இட ஒதுக்கீட்டிற்கு வரம்பு.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டளவை 32 சத வீதமாகக் குறைப்பதற்கு பின்வரும் உறுப்பினர்கள் எழுத்து மூலமாக மறுப்பு தெரிவித்துள்ளனர்:—

திருவாளர்கள்.

1. அன்பில் தருமலிங்கம் .. .. (19—11—1984ஆம் நாளிட்ட கடிதம்).
2. வி. வி. சுவாமிநாதன் .. .. (22—11—1984ஆம் நாளிட்ட கடிதம்).
3. எஸ். கோபாலகிருஷ்ண யாதவ் .. (2—1—1985ஆம் நாளிட்ட கடிதம்).
4. டாக்டர் கோ. சமரசம் .. .. (26—1—1985ஆம் நாளிட்ட கடிதம்).
5. எம். கே. பாலசுப்பிரமணியம் இ.ஆ.ப. (ஓய்வு). .. (6—2—1985ஆம் நாளிட்ட கடிதம்).
6. எஸ். கே. பாலகிருஷ்ணன் .. .. (7—2—1985ஆம் நாளிட்ட கடிதம்).
7. வி.வி. சுவாமிநாதன்
டாக்டர் கோ. சமரசம்
எஸ். கே. பாலகிருஷ்ணன்
குழ. செல்லையா
ஜி. விஸ்வநாதன்
அன்பில் தருமலிங்கம் .. .. (7—2—1985ஆம் நாளிட்ட கடிதம்).

மேலும், இட ஒதுக்கீடு, மக்கட் தொகை அடிப்படையில் இருக்க வேண்டுமென்றும்' எக்காரணத்தைக் கொண்டும் தற்போதைய 50 சதவீதத்தைவிட குறைவாக இருக்க கூடாது என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பின்வரும் கருத்துக்களையும் அவர்கள் தெரிவித்துள்ளனர்:—

(1) பாலாஜி வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு, அதன் பின்னர் அளிக்கப்பட்ட தீர்ப்புகளின் மூலம் முக்கியத்துவத்தை இழந்துள்ளது.

(2) நீதிபதி மோகன் அளித்த தீர்ப்பில் முந்தைய தீர்ப்புகளைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. தாமஸ், எ.பி.எஸ்.கே. சங் ஆகிய வழக்குகளை மேற்கோள் காட்டி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அவர்களின் மக்கட் தொகை அடிப்படையில் 50 சதவீத இட ஒதுக்கீடு செய்திருப்பது நியாயமே என்று நீதிபதி தீர்ப்பளித் துள்ளார்.

(3) 15 (4), 16 (4) ஆகிய பிரிவுகளில் இட ஒதுக்கீட்டிற்கு சதவித அளவு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

(4) தாமஸ் வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு, ஏழு நீதிபதிகளைக் கொண்ட முழு ஆயத்தின் முடிவாகும். இவ்வழக்கில் பெரும்பான்மையோர் அளித்துள்ள தீர்ப்பு இந் நாட்டின் சட்டமாகும்.

(5) தாமஸ் வழக்கில் நீதிபதி ஃபசல் அலி அவர்கள் தெரிவித்த கருத்தை கிருஷ்ணய்யரும் ஆதரித்துள்ளார்.

(6) ஃபசல் அலி அவர்களின் கருத்து, தீர்ப்பிடைக் கருத்தல்ல, அதனை, தீர்ப்பிடைக் கருத்தாக எடுத்துக் கொண்டாலும் கூட, அது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிடைக் கருத்தாக இருப்பதால், அது உயர் நீதிமன்றத்தைக் கட்டுப்படுத்தும்.

(7) அரசியல் நிர்ணய சபையில் டாக்டர் அம்பேத்கார் தெரிவித்த கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

உறுப்பினர்கள் தெரிவித்த பல்வேறு கருத்துக்கள் பற்றி 7வ அத்தியாயத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது.

பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு.

திரு. கோபாலகிருஷ்ண யாதவ், 2—1—1985ஆம் நாளிட்ட கடிதத்திலும், டாக்டர் கோ. சமரசம் 26—1—1985, 7—2—1985ஆம் நாட்களிட்ட கடிதங்களிலும் திரு. எம். கே. பாலகப்ரமணியம், 6—2—1985ஆம் நாளிட்ட கடிதத்திலும், பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீட்டுக்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு :—

(i) ஒரு குறிப்பிட்ட சாதிக்கு பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு செய்வது விரும்பத் தக்கதல்ல. ஒரு குறிப்பிட்ட சாதிக்கு மட்டும் அது பின்பற்றப்படு மாயின், அது, மக்கட் தொகைக்கேற்ப அனைத்து சாதிகளுக்கும் பொருந்துவதாக இருக்க வேண்டும்.

(ii) பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கிடையே உட்பிரிவினைகள் செய்ய வேண்டிய அவசியமில்லை. அவை பல்வேறு அளவுகளில் முன்னேறி இருந்தாலும், அவற்றைச் சுட்டிக் காட்ட இது உரிய நேரம் அல்ல.

(iii) 15 (4), 16 (4)ஆம் பிரிவுகளின்கீழ் இட ஒதுக்கீடு செய்வதற்குப் பிற்படுத்தப் பட்ட வகுப்பினரை' அ ',' ஆ ',' இ ' என தொகுதி தொகுதியாகப் பிரித்து பிற்பட்ட நிலையின் பல்வேறு அளவுகளைத் தீர்மானிப்பது பொருளற்றதாகும். இது தேவை யற்றதும் ஆகும். இவ்வாறு வகைப்படுத்த வேண்டுமென ஆய்வு வரம்பில் குறிப்பிடப் படவில்லை. பாலாஜி வழக்கில் இதற்கு எதிராகத் தீர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பிற்கும் மற்றொரு பிற்படுத்தப்பட்ட வகுப்பிற்குமிடையே, மாநில அரசு, பாகுபாடு காட்டக்கூடாது.

பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீட்டைக் கொண்டு வருவதற்கெதிராக பாலாஜி வழக்கு மேற்கோளாகக்காட்டப்பட்டுள்ளது. மாநில அரசு, ஏனைய அம்சங்கள் எதனையும் கருதிப் பாராமல், சாதியின் அடிப்படையில் மட்டுமே சமூக ரீதியாக பிற்பட்ட நிலையைத் தீர்மானித்தது என்று பாலாஜி வழக்கில் நீதிமன்றம் சுட்டிக் காட்டியது. உயர்நிலைப் பள்ளியின் கடைசி மூன்று வகுப்புகளில் (8, 9, 10ஆம் வகுப்புகளில்) பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையின் மாநில சராசரி ஆய்வுத்திற்கு

6.9 என்று எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆயிரத்திற்கு 6.9 என்ற மாநில சராசரி அளவைவிட எந்தெந்த சாதிகளின் சராசரி அளவு குறைவாக இருக்கிறதோ அவை அனைத்தும் கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்ட சாதிகளாக கருதப்பட்டது. ஒரு சாதியின் சராசரி, மாநில சராசரியில் 50 சதவீதத்தைவிட குறைவாக இருந்தால், அது மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பாக கருதப்பட்டது.

மேற்சொன்ன அடிப்படையில், சமூக–கல்வி ரீதியான பிற்பட்ட நிலையைத் தீர்மானித்த பிறகு, மாநில அரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 28 சதவீதமும், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 22 சதவீதமும் ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு 18 சதவீதமும் மொத்தத்தில் 68 சதவீத இடங்களை ஒதுக்கீடு செய்தது. இவ்வாறு பிற்படுத்தப்பட்ட வகுப்பு என்றும், மிக பிற்படுத்தப்பட்ட வகுப்பென்றும் வகைப்படுத்து செய்வது 15 (4)-ஆம் பிரிவின் செயல் வரம்பிற்கு அப்பாற்பட்டதென்று கூறி இவ் வகையிலான வகைப்பாட்டிற்கு நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்தது. தீர்ப்பின் சம்பந்தப்பட்ட பகுதி வருமாறு :—

'' பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கும், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு மிடையே ஆணை மூலம் உள்வகைப்பாடு செய்தது. 15 (4)-ஆம் பிரிவின்கீழ் நியாய மானதாக தோன்றவில்லையென்று இது தொடர்பாக இங்கே குறிப்பிட வேண்டியது அவசியமாகும். உண்மையான பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்குத் தனி வசதிகள் செய்து கொடுக்க 15 (4)-ஆம் பிரிவு அதிகாரம் அளிக்கிறது. இம் மாநிலத்திலுள்ள மிக முன்னேறிய மாநிலத்தின் மக்கட் தொகையில் 90 சதவீதத்தினர் பிற்படுத்தப் பட்ட வகுப்பினராகத் கருதப்படுகின்றனர். மாநிலத்தின் மொத்த மக்களையும், மிக முன்னேற்றம் அடைந்தவர்கள், எஞ்சியவர்கள் என இரு பிரிவாகவும் அந்த எஞ்சியவர் களை பிற்படுத்தப்பட்டவர்கள், மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று இரு வகையினர் களாகவும் இவ்வாறு எவ்வாறு பிரிக்கிறது என்று அது விளக்கிக் காட்டுகிறது. ஆகையால், 15 (4)-ஆம் பிரிவின்படி இவ்வாறு இருவகையினராக வகைப்பாடு செய்வது தேவையற்றவாகும் .'' நம்முடைய வரைவு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது போல, பிற்பட்ட நிலையாரி தனித்தனி இட ஒதுக்கீட்டு முறை குறித்து பாலாஜி வழக்கில் எதுவும் குறிப்பிடப்படவில்லையென்பது மேற்சொன்னவற்றிலிருந்து தெளிவாகும்.

பிரிவு 15 (4), 16 (4)-ஆம் பிரிவுகளின்கீழ் பிற்பட்ட நிலையாரி தனித்தனி இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்து, வரைவு அறிக்கையின் 9ச (ii), 9ச (iii)-ஆம் அத்தியாயங் களில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் முற்றிலும் வேறானவை. சமூக மற்றும் கல்வி ரீதியான பிற்பட்ட நிலைகளின் அடிப்படையில்தான் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இனம் கண்டறியப்படுகிறார்கள். 15 (4)-ஆம் பிரிவின் செயல் நோக்கத்திற்காக அதாவது சமூக, கல்வி ரீதியான பிற்பட்ட நிலை) ஒரே ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல்தான் உள்ளது. 16 (4)-ஆம் பிரிவிற்காக மற்றொரு பட்டியல் உள்ளது. அது. அப்பிரிவின் வகை செய்யப்பட்டுள்ளபடி, அரசுப் பணியில் போதிய பிரதிநிதித்துவம் இன்மையில் அடிப்படையில் அமைந்தாதாகும். இந்த இட ஒதுக்கீடு, முழுவதுமே பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அனைவருக்குமானதாகும். போட்டியானது, ஈறக்குறைய சமநிலையிலுள்ளவர்களுக்கிடையே தான் போட்டி இருக்க வேண்டுமே யல்லாது சமநிலையில்லாதவர்களுக்கிடையானதாகஇருக்கக் கூடாது என்பதை உறுதிப் படுத்துவதற்கும் தாமஸ் என்பவருக்கும் கேரள அரசுக்குமிடையான வழக்கில் நீதிபதி கிருஷ்ணய்யர் கருத்து தெரிவித்தபடி, '' பிற்படுத்தப்பட்ட சாதி அல்லது வகுப்பில் மேல்நிலையில் இருப்பவர்கள் மட்டுமே மொத்தச் சலுகைகளையும் அப்படியே அபகரித்துக் கொள்ளாமலும், நலிந்தவர்களிடையே உள்ள மிக நலிந்தவர் களை எப்பொழுதும் நலிந்தவர்களாகவே வைத்து விட்டு, மேல்நிலையிலுள்ளவர்கள் மட்டுமே சலுகைகள் அனைத்தையும் அனுபவித்துக் கொள்ளுமாறு விட்டு விடாதவாறு பார்த்துக் கொள்ளவுமே இந்த உத்தேச உள்வகைப்பாடு கொண்டு வரப்படுகிறது. ஆனால், ஆதி திராவிடர், பழங்குடியினர்கள் தொடர்பாக, அவர் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளார் :—

'' சமூக நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது அவசியமாயின், மாநில அரசு ஆதி திராவிடர்களுக்கான சலுகைகளை ஆதி திராவிடர்களிடையே தாழ்ந்த நிலையிலிருக்கும் ஆதி திராவிடர்களுக்கு மட்டும் வழங்கலாம். நீம்நிலையிலுள்ள ஆதி திராவிடர்களுக்கான சலுகைகளை மேல் நிலையிலுள்ள ஆதி திராவிடர்கள் கொள்ளை யடித்துக் கொண்டு போய் விடாமல் தடுக்கலாம்.''

'' ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோரிடையே மேல்நிலையிலுள்ளவர் களைக் களைவதற்கான புதிய வழிமுறைகளை நிர்வாகம் காணலாம். இது தொடர்பாக மாநில அரசை நீதிமன்றம் கட்டாயப்படுத்த முடியாது. ''

'' மக்களிடையேயுள்ள நலிந்த பிரிவினர்களின் கல்வி மற்றும் பொருளாதார நலன்களில் தனிக் கவனம் செலுத்தி அவர்களை முன்னேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு அனைத்துத் துறைகளிலும் சம வாய்ப்புக் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் '' எ.பி.எஸ்.கே. சங் வழக்கில்,

நீதிபதி சின்னப்ப ரெட்டி கருத்து தெரிவித்துள்ளார் ''. '' ஒரு குறிப்பிட்ட முன்னுரிமை விதியை செயல்படுத்தியதால் தற்போது ஏற்பட்ட நடைமுறை விளைவுகளைக் கருத்தில் கொண்டு தான் ஒவ்வோர் இனமும் முடிவு செய்யப்பட வேண்டுமேயல்லாது வெறும் ஊகத்தின் அடிப்படையில் முடிவு செய்ய கூடாது எனவும் '' அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு குறித்த இந்த பிரச்சினை, பாலாஜி வழக்கிற்கு முன்னரே, இராமகிருஷ்ண சிங் என்பவருக்கும் மைசூர் மாநில அரசுக்கு மிடையேயான வழக்கில் (A.I.R. 1960 மைசூர் 338) வந்தது. பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு முறையில் ஒவ்வொரு உட் தொகுதியிலும் உள்ளவர்கள், அந்தந்த உட்பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்குத் தான் போட்டி போட முடியுமே தவிர, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்டு இருக்கக் கூடிய எஞ்சிய இடங்களுக்கு அவர்கள் தகுதியானவர்களாக மாட்டார்கள் என்பதால் அந்த முறை ஒழுங்கானதாக இல்லையென்றும், இந்த அறிவிக்கை, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு நன்மை செய்வதற்கு பதிலாக, அவர்களுக்குள்ள அடிப்படை உரிமைகளையே குறுக்குகிறது என்றும் ஆகவே 15 (4)ஆம் பிரிவின்கீழ் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மைசூர் மாநில அரசு பின்பற்றிய தொகுப்பு முறையில், ஒவ்வொரு தொகுதியிலும் சில முற்பட்ட வகுப்புகள் கூட பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுடன் சேர்க்கப்பட்டன. பல்வேறு தொகுதிகள் அல்லது பகுதிகளில் முற்பட்ட வகுப்பினர்கள் சேர்க்கப்பட்டதால், ஒதுக்கீடு செய்யப்படாத காலி இடங்களுக்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் போட்டியிட முடியாமல் தடுக்கப்பட்டனர். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களை மட்டும் பல்வேறு தொகுதிகளாக பிரிக்கலாம் என்று தான் நாங்கள் கருத்து தெரிவித்துள்ளோம். ஒரு தொகுதியில் தகுதி வாய்ந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இல்லையாயின், அந்தக் காலியிடம் ஏனைய இரண்டு தொகுதிகளைச் சேர்ந்த மற்றொரு பிற்படுத்தப்பட்ட வகுப்பிற்குத் தகுதியின் அடிப்படையில் சென்று விடுகிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் எந்தத் தொகுதியில் இருந்தாலும், நிறமையின் அடிப்படையில் பொதுவான போட்டியின்கீழ் காலியிடங்களுக்குப் போட்டியிடத் தகுதியுடையவர்கள் ஆவர். ஆகையால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் உரிமைள் சுருக்கப்படுவதில்லை. மாறாக, பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கிடையே குறைவான அளவிற்கு முன்னேறியிருப்பவர்களுக்குப் பயன் அளிக்கிறது. ஆகையால், மேற்சொன்ன வழக்கில் நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்ட பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீட்டு முறையோடு இதனை ஒப்பிட முடியாது.

தொழில் கல்லூரிகளான மருத்துவ, பொறியியல், கால்நடை மருத்துவ, சட்டக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கப்பட்டதையும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கும பணியாளர்களை தெரிந்தெடுத்து நியமனம் செய்ததையும் ஆய்வு செய்து பார்த்ததில், பெரும்பாலான பிற்படுத்தப்பட்ட சாதிகள்/வகுப்புகளுக்கு இட ஒதுக்கீட்டுச் சலுகைகள் முழுமையாகச் சென்றடையவில்லையென்பது தெரிய வருகிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 125க்கும் மேற்பட்ட சாதிகளுக்கு, தொடர்ந்து 3 ஆண்டுகளாக (1980–83) பல்வேறு படிப்புகளில் பிரதிநிதித்துவம் எதுவும் கிடைக்கவில்லை. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் பெரும்பான்மையோரிடையே தற்போது நிலவக் கூடிய சமநிலையின்மை, ஏற்றத்தாழ்வு, மனக்குறை, ஏமாற்றம் ஆகியவற்றைப் போக்க ஏதாவது செய்தாக வேண்டும் தற்போதைய இட ஒதுக்கீட்டு முறையின் செயல்பாடு குறித்து பல்வேறு பிரிவினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததோடு தங்களின் மனக் கொதிப்பையும் வெளிப்படுத்தினர். சமூக, கல்வி ரீதியாக மிகவும் பிற்பட்டுள்ள பெரும்பாலான மக்களுக்கு இந்தச் சலுகைகள் கிடைக்காமல் ஒரு சிலருக்கு மட்டுமே தற்போதைய இட ஒதுக்கீட்டு முறை உதவுகிறது என்பதும், எனவே இந்த முறையில் மாற்றம் செய்ய வேண்டியது அவசியம் என்பதுதான் குழுவுக்கு அரசு அலுப்பிய இரண்டு கடிதங்களின் அடிப்படைக் கருத்தாகும். நாம் இந்தப் பிரச்சினையை ஆழமாகப் பரிசிலிக்க வேண்டுமேயல்லாது சில நுணுக்கங்களைக் கடைபிடித்து அதிலிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிக்கக் கூடாது. அந்தக் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களிலிருந்து பார்க்கும்போது, இதனை அரசே பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீட்டை எடுத்துக் கொண்டுள்ளதா என்று தெரிகிறது.

பிற்பட்ட நிலையாரி தனித்தனி இட ஒதுக்கீட்டு முறைக்கு மறுப்பு தெரிவித்துள்ள உறுப்பினர்களில் ஒருவர் பின்வருமாறு கருத்து தெரிவித்துள்ளார் : –

'' பிறபடுத்தப்பட்ட சாதியில் கூட பல தட்டுக்கள் உள்ளன என்பதும், ஒவ்வொரு சாதியிலும் உள்ள மேல்தட்டு மக்கள் அரசு அளிக்கக் கூடிய உதவியை எளிதில் தன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர் என்பதும் அனைவரும் நன்கு அறிந்த ஒன்றாகும். கீழ்தட்டு மக்கள் கதியற்றவர்களாகவே இருந்தவருகிறார்கள். கற்தட்டில் உள்ளவர்கள் அடிப்படை வசதிகளைப் பெற்று ஏனைய பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களை அளவிற்கு முன்னேறுவதற்கு ஏதுவாக மாநில அரசு அவர்களுக்குப் போதுமான பொருளாதார சலுகைகளையும் இதரச் சலுகைகளையும் வழங்க வேண்டும். ''

ஒரே சாதியில் பல்வேறு தட்டுகள் இருக்கும் போது, பல்வேறு சாதிகளுக்கிடையேயும் கூட பல்வேறு தட்டுகள் இருக்கும். பல ஆண்டுகளாக செயலில் இருந்து வரக் கூடிய இட ஒதுக்கீட்டின் பயன்கள் பல சாதிகளுக்குக் கிடைக்கவே இல்லை. ஏனெனில் அனைத்து சலுகைகளையும் மேல்தட்டைச் சேர்ந்த ஒரு சிலரே அபகரித்துக் கொள்கின்றனர். கடந்த மூன்றாண்டுகளில் தொடர்ச்சியாக, 125-க்கும் மேற்பட்ட சாதிகளுக்குத் தொழில் கல்லூரிகளில் பிரதிநிதித்துவம் எதுவும் கிடைக்கவில்லை என்றும், அரசுப் பணிக்கு ஆட் சேர்ப்பதற்காக தேர்வாணைக் குழு நடத்தும் தேர்வுகளுக்கு விண்ணப்பத்திருந்த போதிலும் கூட இல சாதிகளிலிருந்து எவரும் தெரிந்தெடுக்கப்பட வில்லையென்றும் எங்களின் ஆய்வுகளிலிருந்து தெரிய வருகிறது. இது நம் கண்களைத் திறக்க வேண்டும். தற்போது பின்தற்றப்படும் இந்த இட ஒதுக்கீட்டு முறை அதன் நோக்கத்தை எய்த தவறி விட்டது. கீழ் தட்டு மக்கள் அடிப்படைச் சலுகைகளை மட்டும் தான் பெற தகுதியுடையவர்களா ? இட ஒதுக்கீட்டுச் சலுகையைப் பெற தகுதி யுடையவர்கள் இல்லையா ? அவர்களுக்குரிய சட்டப்படிக்கான பங்கை எவ்வளவு காலத்திற்கு மறுக்க முடியும். அவர்களுக்கு உதவ வேண்டுமாயின், ஏறக்குறைய சமமான வர்களுக்கிடையேயானதாக போட்டி இருக்க வேண்டும். குழு நடத்திய ஆய்வுகள் மூலம் மதிப்பிடப்பற்றவரான பிற்பட்ட நிலையின் அளவே இதற்கு சிறந்த வழி காட்டியாக அமையும். பிற்பட்ட நிலையாரியான உத்தேச தனித்தனி இட ஒதுக்கீட்டு முறைகுறிப்பிட்ட ஒரு சாதிவகுப்புக்கு மட்டுமல்ல ; பிற்பட்ட நிலையாரியான அனைவருக்கும் கூடிய அனைவருக்கும் அளவுகோலைக் கொண்டு தீர்மானிக்கக் பெருந்தும். முதன்மையான நோக்கத்தை எய்த இத் தொகுதி அமைப்பை மாற்றுவது அல்லது திருத்தியமைப்பது மேலும் பொருத்தமானதாக இருக்கும் என்று உறுப்பினர்கள் அல்லது அரசு கருதினால் அவ்வாறே மாற்றலாம் அல்லது திருத்தலாம். பிற்படுத்தப் பட்ட வகுப்பினரை மூன்று தொகுதிகளாக வகைப்படுத்தலாம். என்று தெரிவித்துள்ள கருத்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கிடையே கீழ்நிலையிலுள்ளவர்களுக்கு நியாயம் வழங்குவதற்கான வகுக்கப்பட்ட பரவலான உருவரைக் குறிப்பே ஆகும்.

ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு மாறாக, பல்வேறு அளவுகளில் முன்னேறி யுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கிடையே இட ஒதுக்கீட்டுச் சலுகைகளை சம அளவில் பங்கிட்டு அளிப்பதற்காக உள் வகைப்பாடு செய்வது தான் விவேகமான செயலாகும். அப்போதுதான் போட்டி. ஏறக்குறைய சமமானவர்களுக்கிடையேயான போட்டியாக இருக்கும். இது, வேறு சில இடங்களில் செயலில் இருப்பதால் இந்த முறை, அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானதாகாது. ஆந்திரப் பிரதேசத்தின் முன்னாள் தலைமை நீதிபதி மனோகர் பிரசாத் தலைமையிலான ஆந்திர பிரதேச பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலக் குழு, 16(4), 16(4)ஆம் பிரிவுகளின் செயல் பரித்துரை செய்திருந்தது. ஏறக்னவே சுட்டிக் காட்டியபடி, இந்த முறை கேரளாவிலும் செயலில் இருக்கிறது. இந்த முறை, அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று நீதிமனறங்கள் எதுவும் தீர்ப்பளிக்கவில்லை. இக் குழுவின் ஆய்வு வரம்புகளின் படி, கல்வி, இட ஒதுக்கீடு, அரசுப் பணிகளில் பிரதிநிதித்துவம் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் நிலைகளை மேம்படுத்த மாநில அரசு மேற்கொள்ளும் என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென இக் குழு பரிந்துரை செய்ய வேண்டியுள்ளது. தற்போதைய இட ஒதுக்கீட்டு முறை, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடையேயுள்ள ஒரு சிலருக்கு மட்டுமே அனைத்து சலுகைகளையும் நல்குகிறது. இந்த சலுகைகள் பரவலாக அனைவருக்கும் சென்றடைய வேண்டுமாயின் இந்த முறையில் மாற்றங்கள் செய்ய வேண்டியது அவசியமாகும். இந்த நடவடிக்கைகளுக்குச் சில சுயநலவாதிகள் ஏன் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் ஒட்டு மொத்தமான நலனை குழு புறக்கணிக்க முடியாது. பிற்பட்ட நிலையாரி தனித்தனி இட ஒதுக்கீட்டு முறை இல்லாமல் ஒட்டு மொத்த இட ஒதுக்கீட்டு முறையை கொண்டு வருவது, பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்களிடையே உள்ள ஒரு சில முன்னேறிய தொகுதியினர்களுக்கு மட்டுமே பயன் அளிக்கும் என்று காகா கலேல்கர் தலைமையில் முதலில் அமைக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலக் குழு எடுத்துக் கூறி, பிற்பட்ட நிலையாரி தனித்தனி இட ஒதுக்கீட்டு முறையை கொண்டு வர வேண்டுமெனப் பரிந்துரை செய்தது.

இருவாளர்கள் எம். ஜான் வின்சென்ட், ஜி. விஸ்வநாதன், ஜி. மூர்த்தி, எம். கே. பாலசுப்பிரமணியம், ஜவஹர் ராஜ், டாக்டர் கோ. சமரசம், ஆகியோர், இத்துக்க எல்லாம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை கீழ்க்கண்ட அளவுகோல்களைக் கொண்டு இனமறிய வேண்டும் என்று சுட்டிக் காட்டியுள்ளனர் : –

1. திண்டத்தகாதவர் அனைவரும் அதாவது, இந்து மதமல்லாத பிற மதங்களுக்கு மாறிய அரிசனங்கள் ;

2. பரம்பரைத் தொழிலையே தமது சாதியின் பெயராகக் கொண்டுள்ள சாதிகள் ;

3. எந்த தலைமுறையிலேனும் இந்துமதமல்லாத பிற மதத்திற்கு மாறியிருந்து, இந்து மதத்திலுள்ள அதே சாதியினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள சாதியினர்.

இவை, இந்துக்களல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை இனங் கண்டறிவதற்காக மண்டல் குழு கடைப் பிடித்த, நேர்த்தியில்லாவிட்டாலும் பயன்படுத்தத்தக்க அளவு கோல்களாகும். நாம் நடத்தியதைப் போல, மண்டல் குழு, விரிவாகவும் தீர்க்கமாகவும் ஆய்வு நடத்தவில்லை. ஒரு சதவீத ஆய்வு கூட (65 ஊல்சச்ர் பேர்) மிகப் பெரிய அய்வாகக் கருதப்பட்டது. ஆகவே, அவர்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு கிராமங்களையும் ஒரு நகர்ப்புற வட்டாரத்தையும் தெரிந்தெடுத்து 100 சதவீத ஆய்வு நடத்தினர். இந்த ஆய்வு தீர்க்கமான ஆய்வாக இல்லாததால் மண்டல் குழு, சமூக மற்றும் கல்வி ரீதியான பிற்பட்ட நிலைகளைத் தீர்மானிக்க மிக நேர்த்தியில்லாவிட்டாலும் பயன்படுத்தத்தக்க அளவு கோல்களைக் கடைப் பிடிக்க வேண்டிய கட்டாய மேற்பட்டது.

ஆய்வு வரம்பின்படி, இக் குழு, மாநிலத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் கணக்கெடுப்பு, வகைப்பாடு சம்பந்தப்பட்ட அனைத்து வினாக்களையும் பிரச்சினைகளையும் ஆய்வு செய்ய வேண்டும். அதன்படியே, இக் குழுவும், மாநில முழுவதிலும், சாதிவாரியாக, வீடு வீடாக ஆய்வு நடத்தி, மக்களின் கல்வி மற்றும் பொருளாதார நிலை பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டியது. (முதற் கட்ட ஆய்வு). இதனையடுத்து, யதேச்சை மாதிரி முறை ஆய்வு ஒன்றும் நடத்தப்பட்டது. இந்த ஆய்வில், மாநில மூராவிலும், 4,80,583 (1 சதவீதம்) மக்கட் தொகையை உள்ளடக்கிய 1,00,726 குடும்பங்களிலிருந்து புள்ளி விவரங்கள் திரட்டப்பட்டன. இந்த யதேச்சை மாதிரி ஆய்வில் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் சமூக ரீதியான பிற்பட்ட நிலையும் 100 சதவீத ஆய்வில் (முதல் கட்ட ஆய்வு) திரட்டப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் கல்வி ரீதியான பிற்பட்ட நிலையும் தீர்மானிக்கப்பட்டன. எனவே, மண்டல் குழு, கடைப் பிடித்த நேர்த்தியில்லாவிட்டாலும் பயன்படுத்தத் தக்க அளவு கோல்களை இக் குழு பயன்படுத்துவதற்குப் போதிய காரணமில்லை. ஓரே சீரான நடைமுறையைப் பின்பற்றித்தான் அனைத்து சாதிகள்/வகுப்புகளின் சமூக மற்றும் கல்வி ரீதியான பிற்பட்ட நிலைகளைத் தீர்மானிக்க வேண்டும். இதிலிருந்து விலகிச் செல்வது கடும் எதிர்ப்பையும் கண்டனத்தையும் தோற்றுவிக்கும். மேலும், இது பாகுபாடு காட்டுவதற்கு ஒப்பானதுமாகும்.

தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் கிருத்துவர்களில் சில சாராரும் உள்ளனர். இவர்கள், மதம் மாறியவர்களே. இக் குழு, எல்லா பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் பற்றியும் முற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த பல்வேறு சாதிகளைப் பற்றியும் புள்ளி விவரங்கள் திரட்டியுள்ளது. சமூக மற்றும் கல்வி ரீதியான பிற்பட்ட நிலைக்கான அளவு கோல்களின் அடிப்படையில் பார்க்கும்போது, தற்போது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் இடம் பெற்றுள்ள சில சாதிகள்/வகுப்புகள் தொடர்ந்து அப்பட்டியலில் இடம் பெறத் தகுதியுடையனவாக இல்லை. எனவே, சமூக மற்றும் கல்வி ரீதியான பிற்பட்ட நிலையைத் தீர்மானிக்க மண்டல் குழு பயன்படுத்திய நேர்த்தியில்லாவிட்டாலும் பயன்படுத்தத் தக்க அளவுகோல் முறையை நம்மால் பின்பற்ற முடியாது.

மற்ற செயற் குறிப்பு கிருத்துவ நாடார், கிருத்துவ சாணார், கிருத்துவ கிராமணி தொடர்பானதாகும். இச் சாதிகள், முதலில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் இடம் பெறவில்லை. முதல் கட்ட ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், சமூக நலத் துறையின் 5–8–1983ஆம் நாளிட்ட 2069ஆம் எண். அரசாணையில் அரசு, இச் சாதிகளைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்த்து உத்தரவு பிறப்பித்தது. இந்த நிலையில் முதல் கட்ட ஆய்வில், இச் சாதிகளின் கல்வி நிலைபற்றிய புள்ளி விவரங்களைத் திரட்ட முடியவில்லை. எனவே, ஒரு சதவீத எதேச்சை மாதிரி ஆய்வில் திரட்டிய புள்ளி விவரங்களைக் கொண்டு அச் சாதிகளின் கல்வி ரீதியான பிற்பட்ட நிலை தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக் குறிப்பிட்ட சூழ்நிலையில் இதுவே போதுமானது. எப்படி இருந்தாலும், இந்து நாடார், இந்து சாணார் அல்லது இந்து கிராமணி ஆகியோருக்குக் கடைப் பிடிக்கப்பட்ட வகைப்பாட்டின் அடிப்படையிலேயே இவர்களையும் கல்வி ரீதியாகப் பிற்பட்ட வகுப்பினர் அல்லது முற்பட்ட வகுப்பினர் என்று கருதுவது பொருத்தமாயிராது. ஒரு சாதி/வகுப்பு தொடர்பாகத் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டுதான் அச் சாதி/வகுப்பின் தற்போதைய அந்தஸ்து தீர்மானிக்கப்பட வேண்டுமேயல்லாது அவர்களின் மூதாதையர் எந்தச் சாதி/வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கக் கூடாது. எனவே, இந்தக் கருத்து நியாயமானதோ சரியானதோ அல்ல ; நீதிமன்றங்கள் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள மாட்டா.

திருமதி சௌந்தரா கைலாசம் அவர்களின் 18—2—1985ஆம் நாளிட்ட கடிதத்திலும் திரு. துரை ராமசாமியின் 18—2—1985ஆம் நாளிட்ட கடிதத்திலும் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பற்றிய குறிப்பு.

சமூக மற்றும் கல்வி ரீதியான பிற்பட்ட நிலைகளைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்த உத்தேசித்துள்ள அளவு கோல்கள் நியாயமானவை என்றும் நேர்மையானவை என்றும் திருமதி சௌந்தரா கைலாசமும் திரு. துரை ராமசாமியும் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனால், ஏற்கெனவே நிலையைத் தீர்மானிக்க, 6—14 வயதுக் தொகுதியைச் சேர்ந்தவர்களில் படிப்பை இடையில் நிறுத்தியவர்களின் சதவீத அளவை ஓர் அளவு கோலாகக் கொள்வது தான் பொருத்தமாக இருக்குமென்றும் எனவே அதையே பின்பற்றலாம் என்றும் சுட்டிக் காட்டியுள்ளனர். குழந்தைகள் படிப்பைப் பாதியில் விட்டுவிடுவதற்கான பல காரணங்களில் ஏழ்மையும் ஒன்று என்பதால், இது ஓரளவுக்குத் தான் பொருத்தமான அளவுகோலாக இருக்க முடியும். ஆனால், சமூக ரீதியான பிற்பட்ட நிலை, கல்வி ரீதியான பிற்பட்ட நிலை ஆகிய இரண்டு வெவ்வேறு அம்சங்களை அளவிடுவதற்கு ஒரே அளவுகோலை அல்லது குறியளைப் பயன்படுத்துவது, இரட்டிப்பு வேலையாக முடிந்து விடும். மேலும், ஏழ்மையைத் தீர்மானிக்க ஏற்கனவே நாம் மூன்று அளவுகோல்களை வரையறுத்துள்ளோம். இந்த நிலையில் மேலும் ஓர் அளவு கோலை சேர்ப்பது விரும்பத்தக்கதல்ல.

மாநிலச் சராசரியிலிருந்து 10 சதவீத வேறுபாட்டளவைப் பின்பற்றுவது நியாயமானதும் முறையானதுமாகும் என்றும் '' இந்த வேறுபாட்டளவின் வரம்பு அதிகரிக்கப்பட்டால், தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவதோடன்றி, எல்லாச் சாதிகளையுமே முற்பட்டவர்களென அறிவிக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்படும். '' என்றும் அந்த இரண்டு உறுப்பினர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்த 10 சதவீத வேறுபாடு கூட இல்லாமல், மாநிலச் சராசரி அளவில் அடிப்படையிலேயே பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல் தயாரிக்கப்பட்டால், நீதிமன்றங்கள் அது முறையற்றதெனத் தெரிவித்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல் முழுவதையுமே தள்ளுபடி செய்து விடக்கூடும். இந்த அச்சத்தின் காரணமாகவே, பாலாஜி வழக்கில் சொல்லப்பட்டது போல் 50 சதவீத வேறுபாடோ மண்டல் குழு பின்பற்றிய 25 சதவீத வேறுபாடோ இல்லாமல் உயரளவாக 10 சதவீத வேறுபாடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் சமரசம் அவர்களின் தேதி குறிப்பிடப்படாத கடிதங்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பற்றிய குறிப்பு.

டாக்டர் சமரசம் அவர்கள் தன் கடிதத்தில் கீழ்க்கண்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளார் :—

1. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் மக்கட் தொகைக்கேற்ப அவர்களுக்கு 67 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும்.

2. பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு, குழுவின் ஆய்வு வரம்பிற்குட்பட்டதல்ல ; எனவே, அதுபற்றி பரிந்துரை எதுவும் செய்ய வேண்டியதில்லை.

3. தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து எந்த ஒரு சாதி/வகுப்பையும் நீக்கத் தேவையில்லை.

4. மக்கட் தொகைப் புள்ளி விவரங்கள் முழுக்க முழுக்கத் துல்லியமானவையென நம்ப முடியாது.

5. அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (4) பிரிவின்கீழ் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரென பட்டியலிடப்பட்டுள்ளவர்கள் 16(4) பிரிவின்கீழ் பதவி ஒதுக்கீட்டுச் சலுகை பெறவும் தகுதியுடையவர்களாக்கப்பட வேண்டும்.

(1), (2) இனங்களைப் பொறுத்தவரையில், ஏற்கனவே, உறுப்பினர்களுக்கு விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இக் குழு நடத்திய ஆய்வுகளின் மூலம் திரட்டிய புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டுதான் சமூக மற்றும் கல்வி ரீதியான பிற்பட்ட நிலைகளைத் தீர்மானிப்பதற்கான அளவுகோல்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது எந்தவொரு சாதி/வகுப்பாவது பிற்படுத்தப்பட்டதென வகைப்படுத்தத் தகுதி பெறவில்லையானால், அதனை பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து நீக்கித்தான் ஆக வேண்டும். இல்லாது போனால், இக் குழு ஆய்வுகள் நடத்தியிருக்கவேண்டிய அவசியமே இல்லை.

இக் குழுவின் ஆய்வுகள் யாவுமே முறையாகவும் ஒழுங்காகவும் எந்தவிதப் பாரபட்சத்திற்குமிடமில்லாமல் நடத்தப்பட்டுள்ளன. அப்படியிருக்க இந்த நிலையில் புள்ளி விவரங்கள் துல்லியமாக இல்லை என்று கூறுவது முறையல்ல.

மாநில அரசுப் பணிகளில் போதிய பிரதிநிதித்துவம் பெறாத சமூக மற்றும் கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மட்டுமே அரசியலமைப்புச் சட்டத்தின் 16(4) பிரிவின்கீழ் பதவி ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. நாங்கள் அனைத்துப் பணியாளர்களையும் பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டியுள்ளோம். ஒரு சாதி(வகுப்பு ஏற்கனவே அரசுப் பணிகளில் போதிய பிரதிநிதித்துவம் பெற்றிருந்தால் அச் சாதி(வகுப்பு 16(4) பிரிவின்கீழ் பதவி ஒதுக்கீடு பெறத் தகுதி பெற முடியாது. இது, அரசியலமைப்புச் சட்ட விதித் துறைகளுக்கே எதிரானதாகும்.

பிரிவு 11—அத்தியாயங்கள் 7 (எ) (i), (ii), ''சமூக ரீதியான பிற்பட்ட நிலை, கல்வி ரீதியான பிற்பட்ட நிலை'' தொடர்பாக, தமிழ் நாடு பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு உறுப்பினர், திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், இ. ஆ. ப. (ஓய்வு) அவர்கள் தெரிவித்த கருத்துக்கள்.

சமூக ரீதியான பிற்பட்ட நிலையைத் தீர்மானிப்பதற்குரிய அளவுகோல்களாகிய சாதி, தொழில் ரீதியான பிற்பட்ட நிலை, ஏழ்மை ஆகிய ஒவ்வொன்றுக்கும் 3 மதிப் பெண்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக 3வது பாராவில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொழில் ரீதியான பிற்பட்ட நிலையை சாதிக்கு நிகரானதாகக் கருத வேண்டும். ஆகவே அதற்கு 3 மதிப்பெண்கள் ஒதுக்கியது சரியே ; ஏழ்மைக்கு 2 மதிப்பெண்கள் ஒதுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். சமூக ரீதியான பிற்பட்ட நிலைக்கான மதிப்பெண் களை 8 ஆக குறைக்க வேண்டும் என்பதற்காகவே இந்த யோசனை தெரிவிக்கப்படு கிறது. மண்டல் குழு, 'பொருளாதார' ரீதியான பிற்பட்ட நிலைக்கு 4 மதிப்பெண் கள் மட்டுமே ஒதுக்கியுள்ளது. இது பதினெட்டு சதவீதமாகும். எனவே, சமூக, மற்றும் கல்வி ரீதியான பிற்பட்ட நிலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்தம் 14 மதிப்பெண்களில் ஏழ்மைக்கு 2 மதிப்பெண்கள் மட்டும் ஒதுக்கினால் போதுமென்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. தற்போது செய்துள்ளது போல மொத்தம் 15 மதிப் பெண்களில் 3 மதிப்பெண்கள் (20 சதவீதம்) ஒதுக்கத் தேவையில்லை. இது தொடர் பாகக் கீழ்க்கண்ட கருத்துக்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சமூக ரீதியான பிற்பட்ட நிலைக்கு முதலும் முடிவுமான காரணம் வறுமையே என்று நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன. மேலும், சாதி, தொழில், வாழ்விடம் ஆகிய வற்றிற்கு நிகரானதாக ஏழ்மையும் கருதப்படுகிறது. எனவே, வறுமைக் கோட்டுக்கும் கீழே உள்ள நலிந்த பிரிவினருக்கு உதவ வேண்டுமென்று மத்திய அரசு கருதி வரு கின்ற இந்த நேரத்தில், ஏழ்மைக்கான மதிப்பெண்களைக் குறைப்பது நல்லதல்ல. மண்டல் குழு, பொருளாதார ரீதியான பிற்பட்ட நிலைக்கு ஒதுக்கிய 18 சதவீதத்திற் கும் இக்குழு ஏழ்மைக்கு ஒதுக்கிய 20 சதவீதத்திற்கும் இடையே பெருத்த வேறுபாடு இல்லை.

தொழில் ரீதியான பிற்பட்ட நிலை பற்றிய பாரா 6 :

தொழில் ரீதியான பிற்பட்ட நிலையைத் தீர்மானிப்பதற்குரிய அளவுகோலில், பயன்படுத்தப்பட்டுள்ள 'பெரிதும் (Mainly) என்ற சொல்லுக்குப் பதிலாக ', (ஏனென்றால் இது 50 சதவீதத்தினருக்கு மேற்பட்டவர்கள் என்று பொருள் தரலாம்) ' பொதுவாக ' என்ற சொல் பயன்படுத்தப்படலாம். இதன் மூலம் இந்த வரம்பை உழைக்கும் மக்களில் 30 சதவீதமாகக் குறைக்கலாம்.

தொழில் ரீதியான பிற்பட்ட நிலையைத் பொறுத்த வரையில், மொத்த மக்கட் தொகையில் குறைந்தது 50 சதவீதத்தினராவது உடலுழைப்பில், தரக் குறைவான அல்லது இழிவான தொழில்களில் ஈடுபட்டு வருகின்ற சாதி என்னும் அளவுகோல் பொருத்தமானதாக இருக்கும் ; அவையும் என்று கூட தோன்றுகிறது. இந்த சதவீத அளவை 30 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்ற நோக்கில் தான் 'பெரிதும் ' என்ற சொல் நீக்கப்பட வேண்டுமெனக் கூறப்படுவதாகத் தெரிகிறது. 30 சதவீதம் என்பது மூன்றில் ஒரு பங்கை விடக் குறைவு. இதனைப் ' பொதுவாக ' என்ற சொல் கொண்டு குறிப்பிட முடியாது. ஒரு சாதியைச் சேர்ந்தவர்களில் மூன்றில் ஒரு பங் கிற்கும் குறைவானவர்கள், ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய்து வந்தால், அச் சாதியினர் '' பொதுவாக '' அத் தொழிலையே நம்பி இருப்பதாகக் கூற முடியாது.

பாரா 7 :

பிழைப்புக்குப் '' பொதுவாக '' உடலுழைப்பை, தரக்குறைவான மற்றும் இழிந்த தொழில்களையே நம்பியுள்ள மக்களுக்கு 2 மதிப்பெண்கள் ஒதுக்க வேண்டுமெனக் கூறப்படுகிறது. அதே நேரத்தில், 3-வது பாராவில், தொழில் ரீதியான பிற்பட்ட நிலையை சாதிக்கு நிகரானதாகக் கருதி 3 மதிப்பெண்கள் ஒதுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏழ்மைக்கான அளவுகோலைப் பொறுத்த வரையில், ஓரளவு நல்ல வீடுகளை நல்ல வீடுகளாகக் கருத முடியாதாகையால், ஓரளவு நல்ல வீடுகளையும் கூரை வீடு என்ற பிரிவின் மேலே சேர்க்க வேண்டும் என்றொரு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏழ்மையைக் காண வேண்டுமானால், உள்ளபடியே நாம் கூரை வீடுகளில் வாழ்கின்றவர்களைத் தான் தேடிச் செல்ல வேண்டும். உண்மையான ஏழை பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஓரளவு நல்ல வீடுகளில் வாழ முடியாது ; நடுத்தர வருமான வர்க்கத்தைச் சேர்ந்த மக்களால் மட்டுமே ஓரளவு நல்ல வீடுகளில் வாழ முடியும். எனவே, ஏழ்மையைத் தீர்மானிப்பதற்கான அளவுகோல்களில் கூரை வீடுகள் என்பதன் மீழ் ஓரளவு நல்ல வீடுகளையும் சேர்க்க வேண்டும் என்ற யோசனை ஏற்புடைத்தல்ல.

முதல் கட்ட ஆய்வில் இடம் பெறாத சாதிகளின் கல்வி ரீதியான பிற்பட்ட நிலைக் குரிய அளவுகோல்களைத் தீர்மானித்தல் :

தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு, 1983ஆம் ஆண்டு மத்தியில் முழுமையானதோர் ஆய்வு நடத்தியது. இந்த ஆய்வில், ஏனைய விவரங்களோடு, ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ள அனைத்து உறுப்பினர்களின் கல்வி நிலை பற்றியும் புள்ளி விவரங்கள் திரட்டப்பட்டன. இந்த ஆய்வு நடந்து கொண்டிருந்த போதே, தமிழ்நாடு அரசு, கிருத்துவ நாடார்கள், கிருத்துவ சாணார்கள் மற்றும் கிருத்துவ ரோமணி ஆகிய சாதிகளைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக அறிவித்து, சமூக நலத் துறையின் 1983ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 5ஆம் நாளிட்ட 2069ஆம் எண் அரசாணையைப் பிறப்பித்தது. மேலும், சில முற்பட்ட சாதிகள், தங்களைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமெனக் கோரி விடுத்த முறையீடுகளையும் மாநில அரசும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறை இயக்குநரும் அனுப்பி வைத்திருந்தனர்.கிருத்துவநாடார்,கிருத்துவசாணார், கிருத்துவரோமணி ஆகிய சாதிகள் உட்பட இவ்வாறு கோரிக்கை வைத்த 36 சாதிகளின் வேண்டுகோள்களையும் குறிப்பாகப் பரிசீலிக்க வேண்டியிருந்தது. மேற்சொன்ன சூழ்நிலைகளில், முதல் கட்ட ஆய்வின்போது இந்த 36 சாதிகளுக்கு தனிக் குறியீட்டெண்கள் கொடுக்க முடியாமற் போய் விட்டது. இருந்தாலும், இந்தச் சாதிகள், முதற் கட்ட ஆய்வில் நடத்தப்பட்ட முழுமையான கணக்கெடுப்பில் ஏதாவது ஒரு சாதி/வகுப்பின் மீழ் ஆய்வு செய்யப் பட்டிருக்கும். இந்த 36 சாதிகளுடைய கோரிக்கைகள் குறித்த திட்டவட்டமானதொரு முடிவுக்கு வர வேண்டியிருந்ததால், அடுத்து நடைபெற்ற இரண்டாம் கட்ட எதேச்சை மாதிரி முறை ஆய்வில் அவற்றுக்கு 951 முதல் 986 வரையில் தனிக் குறியீட்டெண்கள் ஒதுக்கப்பட்டன. இந்த ஆய்வில் மாநிலத்தில் 1 சதவீதம் குடும்பங்களைத் தெரிந்தெடுத்து புள்ளி விவரங்கள் திரட்டப்பட்டன.

தொள்ளாயிரத்து ஐம்பத்து ஒன்று முதல் 986 வரையில் குறியீட்டெண்கள் கொண்ட சாதிகள் உட்பட, எல்லாச் சாதிகளையும் பற்றி இரண்டாம் கட்ட ஆய்வில் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில்தான் சமூக ரீதியான பிற்பட்ட நிலை தீர்மானிக்கப்படுகிறது. ஆனால் கல்வி ரீதியான பிற்பட்ட நிலையோ முதல் கட்ட ஆய்வில் திரட்டிய தகவல்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. மேலே சொன்ன 36 சாதிகளும் முதற் கட்ட ஆய்வில் இடம் பெறவில்லையாதலால் அவற்றின் கல்வி ரீதியான பிற்பட்ட நிலையை இரண்டாம் கட்ட ஆய்வில் திரட்டிய தகவல்களின் அடிப்படையில்தான் தீர்மானிக்க வேண்டியிருந்தது. இவர்களின் நேர்வில், மூன்று வெவ்வேறு அளவு கோல்களின் மீழ் ஒவ்வொரு சாதி/வகுப்பின் கல்வி ரீதியான பிற்பட்ட நிலையும் முதற் கட்ட ஆய்வின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட மாநிலச் சராசரிக்குப் பதிலாக, இரண்டாம் கட்ட ஆய்வின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட 36 சாதிகளின் மொத்தத்தோடு ஒப்பிடப் பட்டன.

இந்த 36 சாதிகளையும் மாநிலத்திலுள்ள எல்லா சாதிகள்/வகுப்புகளுடன் ஒப்பிடாமல், அவர்களுள்ளாகவே ஒப்பிட்டது சரியல்ல என்று குழுவின் உறுப்பினர் திரு. ஜவஹர்ராஜ் சுட்டிக் காட்டியுள்ளார். இவரது வாதத்தில் ஓரளவு நியாயமிருக்கத் தான் செய்கிறது. எனவே, மற்றைய அனைத்து சாதிகளுக்கும் செய்தது போலவே, முதற் கட்ட ஆய்வின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட மாநிலச் சராசரியோடு ஒப்பிட்டு, இச் சாதிகளின் கல்வி ரீதியான பிற்பட்ட நிலை புதிதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது இந்த அறிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அறிக்கையோடு இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு உறுப்பினர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம் அவர்கள், தனது 1985ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14ம் நாளிட்ட கடிதத்தில், மாதிரி ஆய்வு மூலமாகத் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களைப் பயன்படுத்துவது தொடர்பாகத் தெரிவித்துள்ள யோசனைகள் பற்றிய கருத்துக்கள்.

சமூக-கல்வி மற்றும் பொருளாதார நிலைகளைத் தீர்மானிக்க இக் குழு, இரண்டாம் கட்ட மாதிரி ஆய்வில் திரட்டிய புள்ளி விவரங்களைத்தான் நம்பி இருக்க வேண்டியுள்ளதெனவும் இந்த மாதிரி ஆய்வில், ஒரு சதவீதக் குடும்பங்கள் மட்டுமே கணக்கெடுக்கப்பட்டுள்ளன என்றும் பாரா 2-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சரி அல்ல. குக்கப்பட்டுள்ளன என்றும் பாரா 2-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சரி அல்ல. அனைத்துக் குடும்பங்களையும் உள்ளடக்கிய 100 சதவீத முழுமையான ஆய்வினடிப்படையில்தான் கல்விரீதியான பிற்பட்ட நிலை தீர்மானிக்கப்படுகிறது.

மாதிரி ஆய்வில், எந்தச் சாதியிலுமே 1 சதவீதக் குடும்பங்கள் கணக்கெடுக்கப்பட வில்லையானால், அந்த ஆய்வின் மூலம் அச் சாதிகளுக்குப் பாதகங்களே விளையும் என்றும் 2-வது பாராவில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. இக்குழு நடத்தியதைப் போன்ற ஒரு பேராய்வில் துல்லியமாக 1 சதவீதக் குடும்பங்களைக் கணக்கெடுப்பது கடினம். அதைவிட அதிகமாக இருக்கலாம், குறைவாகவும் இருக்கக் கூடும். எனவே இந்த யோசனை பரிசீலனைக்கு உகந்ததல்ல.

சமூக மற்றும் கல்வி ரீதியான பிற்பட்ட நிலைகளைத் தீர்மானிப்பதற்குரிய அளவுகோல்களை, மொத்தத்தில் ஒரு இலட்சத்திற்கும் குறைவான மக்கட் தொகை கொண்ட சாதிகளுக்குப் பயன்படுத்தாமல், அவை தொடர்ந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் இடம் பெறச் செய்ய வேண்டும் என்று 3-வது பாராவில் ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு இலட்சத்திற்கும் குறைவான மக்கட் தொகை கொண்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சாதிகள் 170 உள்ளன. இந்த 170 சாதிகளையும் எந்த விதமான ஆய்வுக்கும் உட்படுத்தாமல் அப்படியே பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்த்துக் கொள்வது உச்ச நீதிமன்றத்தின் ஆணையின் படி நடத்தப்பட்ட அறிவுப் பூர்வமான, அறிவியல் பூர்வமான ஆய்வை கேலிக் கூத்தாக்கு வதாகும். இவ்வாறு செய்தால், இக் குழு நடத்திய விரிவான ஆய்வு பயனற்றதாகி விடும்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு உறுப்பினர், திரு. எஸ். கே. பால கிருஷ்ணன், தனது 1985-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7ஆம் நாளிட்ட கடிதத்தில் கீழ்க் கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார் :

(1) சௌராஷ்டிரா சாதிப் பிரதிநிதிகள் கொடுத்துள்ள மக்கட் தொகைப் புள்ளி விவரங்களுக்கும் (7 இலட்சம்) இக்குழு நடத்திய ஆய்வின் மூலம் கணக்கிடப்பட்ட மக்கட் தொகைக்கு மிடையே (குறியீட்டெண் 263) (1,89,563) பெருத்த வேறுபாடு காணப்படுகிறது.

(2) நமது ஆய்வின் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகள் தவறானவையாக இருக்கலாம்.

(3) கிராமவாரியான புள்ளி விவரங்களைக் கொடுத்தால் ஒப்பிட்டுப் பார்க்க ஏதுவாக இருக்கும்.

(4) விலைவாசிகள் எல்லாம் உயர்ந்துள்ளபடியால், தொழிலாளர்கள் பெறு கின்ற உயர்ந்த சம்பளங்களை பொருளாதார வளர்ச்சியின் அடையாளமாக எடுத்துக் கொள்ள முடியாது.

மேற்சொன்ன கருத்துக்கள் தொடர்பாகக் கீழ்க்கண்ட விளக்கங்கள் அளிக்கப் படுகின்றன :

(1) மாநிலத்திலுள்ள எல்லாக் குடும்பங்களிலும் முழுமையாகக் கணக்கெடுத்து, திரட்டிய புள்ளி விவரங்களின் அடிப்படையில்தான் சௌராஷ்டிரா சாதியினரின் மக்கட் தொகை (1,89,563) கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, இச் சாதியைச் சேர்ந்த சில அக்கறையுள்ள பிரதிநிதிகள் அனுமானத்தின் பேரில் கொடுத்த புள்ளி விவரங்களைவிட இக் குழுவின் புள்ளி விவரம் மிக நம்பகமானது, திட்பநுட்பமானது. சட்டநாதன் குழு, 1971-ஆம் ஆண்டில் சௌராஷ்டிரர்களின் மக்கட் தொகை 1,62,812 என மதிப் பிட்டது. மாறாக, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 1,15,989 என கணக்கிட்டனர். நமது குழு திரட்டிய புள்ளி விவரங்களின் படி, 10 ஆண்டு காலத்தில் மக்கட் தொகை 16.4 சதவீதம் உயர்ந்துள்ளது. நமது புள்ளி விவரங்கள், மத்திய அரசின் மக்கட் தொகைக் கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களோடு அநேகமாக ஒத்துப் போகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மதிப்பீட்டோடு ஒப்பிடும் போது, நமது ஆய்வின் அடிப்படையிலான மதிப்பீடு 63.4 சதவீதம் உயர்ந்துள்ளது.

(2) மேற்சொன்ன காரணங்களால் அச்சத்திற்கு இடமே இல்லை.

(3) இப் புள்ளி விவரங்களைக் கொடுப்பது விரும்பத்தக்கதோ சாத்தியமானதோ அல்ல. ஏனெனில், ஒரு சாதியைப் பொறுத்த வரையில், மாநில முழுவதற்குமான ஒட்டு மொத்தமான நிலையைக் கொண்டுதான் முடிவெடுக்கப்படுகிறதேயொழிய வெவ்வேறு இடங்களுக்கேற்ப முடிவுகள் எடுக்கப்படுவதில்லை. ஒரே சாதியைச் சேர்ந்த தவர்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலை இடத்திற்கு இடம் வேறுபடு கிறது. எடுத்துக் காட்டாக, சென்னை மாநகரில் வாழ்கின்ற சௌராஷ்டிரர்களின் நிலைகளுக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கோட்டாரில் வாழுகின்ற சௌராஷ்டிரர்களின் நிலைகளும் அனைத்து வகையிலும் ஒத்திருப்பதில்லை.

(4) சமூக மற்றும் கல்விரீதியான பிற்பட்ட நிலையின் மதிப்பீட்டிற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

குழு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் கீழ்க்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார் :—

'' பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவர், எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், அதே சாதியைச் சேர்ந்த இந்துக்களுக்கு அளிக்கப்படுகின்ற எல்லா உரிமைகளும் அவருக்கும் அளிக்கப்பட வேண்டும். ''

சமூக மற்றும் கல்வி ரீதியாகப் பிற்படுத்தப்பட்டவர்களென அறிவிக்கப்படுகின்ற அனைவரும், அவர்கள் எம் மதத்தவராக இருந்தாலும் சரி—பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக வகைப்படுத்தத் தகுதியுடையவராவார். குழு நடத்திய ஆய்வுகளின் அடிப்படையிலும் வகுத்த அடிப்படை அளவுகோல்களின் அடிப்படையிலும் தான் ஒரு சாதியின் சமூக மற்றும் கல்வி ரீதியான பிற்பட்ட நிலை தீர்மானிக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட சாதி/வகுப்பு சமூக ரீதியாகவோ அல்லது கல்வி ரீதியாகவோ முற்பட்டிருந்தால், அச் சாதியின் பெயரையொத்த ஒரு பெயரைக் கொண்ட வேறு ஒரு சாதி/வகுப்பு பிற்படுத்தப்பட்டதாக இருப்பதால், அக் குறிப்பிட்ட சாதி/வகுப்பையும் பிற்படுத்தப் பட்டதாகவோ எதிரெதிர் மாறாகவோ அறிவிக்க முடியாது. ஒவ்வொரு சாதி/வகுப்பும் பிற்படுத்தப்பட்டதா இல்லியா என்பதை அறுதியிட்டுத் தீர்மானிக்க வேண்டும். இதற்காகத்தான் பல வகையான ஆய்வுகள் நடத்தப்பட்டன. பல்வேறு பிற்படுத்தப் பட்ட வகுப்பினரின் சமூக மற்றும் கல்வி ரீதியான முன்னேற்றம் ஒரே சீராக இருக்க முடியாது.

தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு உறுப்பினர் திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரிப் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தின் மீதான குறிப்பு.

உறுப்பினரின் முக்கியமான கருத்துக்கள் வருமாறு :—

1. '' தமிழ்நாட்டிலுள்ள முஸ்லிம்கள் இந்துக்களிடையேயிருந்து மதம் மாறியவர்கள்தான் என்று கூறலாம்'' என்ற கருத்துக்கு மறுப்பு.

2. முஸ்லிம்கள் அனைவருமே ஒரே இனத்தவரே. இந்த அடிப்படையில்தான் புள்ளிவிவரங்கள் தொகுக்கப்பட்டிருக்க வேண்டுமேயொழிய அவர்களுக்கு வழங்குகின்ற வெவ்வேறு பட்டப் பெயர்களின் அடிப்படையில் திரட்டியிருக்கக் கூடாது.

3. முஸ்லிம்களின் மக்கட் தொகை 50 இலட்சத்திற்குமேல் இருக்கும், 27.05 இலட்சம் அல்ல.

4. முஸ்லிம்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினரென அறிவிக்க வேண்டும்.

5. பத்தான் (பட்டாணி) குறியீட்டெண் 806, காக்கா, குறியீட்டெண் 807 ஆகிய இரண்டுமே பிற்படுத்தப்பட்ட வகுப்பு என்றோ அல்லது முற்பட்ட வகுப்பு என்றோ வகைப்படுத்தப்படவில்லை.

6. 10 சதவீத வேறுபாட்டுக்குப் பதிலாக 5 சதவீத வேறுபாடு கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

7. உச்ச நீதிமன்றத்தின் முதுநிலை வழக்குரைஞர் திரு. எம். ஆர். எம். அப்துல் கரீம் அவர்களின் முறையீட்டில் கண்டுள்ள பல்வேறு கோரிக்கைகள் பரிசிலிக்கப்படவேயில்லை.

இந்தியாவில், குறிப்பாக, தமிழ்நாட்டில் உள்ள முஸ்லிம்கள், கிருத்தவர்கள், மற்றும் பிற மதப் பிரிவினரில் பெரும்பாலோர் இந்துக்களிடையேயிருந்து மதம் மாறியவர்களே என்பது வரலாற்றுப் பூர்வமான உண்மை. இதனை எவரும் உளப்பூர்வமாக மறுக்க முடியாது. மண்டல் குழு கூட இதே கருத்தைத் தான் தெரிவித்துள்ளது.

டாக்டர் இம்டியாஸ் அகமது அவர்களால் பதிப்பிக்கப்பட்ட, '' இந்தியாவிலுள்ள முஸ்லிம்களிடையே சாதியும் சமூக அடுக்கு நிலையும் '' (மனோகர் பப்ளிகேஷன்ஸ் 1978) என்ற நூலிலிருந்தும் டாக்டர் ஹர்ஜித்தர் சிங் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்ட '' இந்தியாவிலுள்ள இந்துக்களல்லாதோரிடையே சாதிகள் '' (நேஷனல் 1977) என்ற நூலிலிருந்தும் இதற்கு மண்டல் குழு மேற்கோள் காட்டியுள்ளது.

முஸ்லிம்களிடையே பல்வேறு தொகுதிகள் இருப்பதாக உறுப்பினரே தனது கடிதத்தில் இரண்டாவது பாராவில் ஒப்புக் கொண்டுள்ளார். ஆறு தொகுதியினர் ஏற்கனவே பிற்படுத்தப்பட்டவர்களென அறிவிக்கப்பட்டு சலுகைகளையும் இட ஒதுக்கீட்டுப் பயன்களையும் அனுபவித்து வருகின்றனர். ஆய்வு வரம்பின் படி, சமூக நலத் துறையின் 1980ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1ஆம் நாளிட்ட 72ஆம் ஏண் அரசாணையில் ஏற்பளிக்கப்பட்டு, தற்போது செயலிலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலை

மறு ஆய்வு செய்ய வேண்டுமென இக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அப்படியிருக்க, இக் குழு முஸ்லிம்களின் பல்வேறு தொகுதியினர் அல்லது பிரிவினர் பற்றிய விவரங்களைத் தான் திரட்ட வேண்டுமேயல்லாது முஸ்லிம் இனம் முழுமைக்குமே ஒட்டு மொத்தமாகப் புள்ளி விவரங்கள் தொகுக்க முடியாது.

வீடுவீடாக நடத்தப்பட்ட 100 சதவித ஆய்வின்மூலம் எல்லாச் சாதிகள் மற்றும் வகுப்புக்களுடைய மக்கட் தொகைப் புள்ளிவிவரங்கள் திரட்டப்பட்டன. 1971ஆம் ஆண்டு மக்கட் தொகை புள்ளி விவரங்களின்படி, தமிழ்நாட்டிலுள்ள முஸ்லிம்களின் மக்கட் தொகை 2,103,899 ஆகும். இப்போது 50 இலட்சம் பேர் இருப்பார்கள் என மதிப்பிடுவது சரியாகயிருக்க முடியாது முஸ்லீம்களின் மக்கட் தொகை 27.05 இலட்சமென அனுமானிக்கப்பட்டுள்ளதாக உறுப்பினரே தெரிவித்துள்ளார். இதுவே மக்கட் தொகை கணிசமாக உயர்ந்துள்ளதைக் குறிப்பதோடு, நமது ஆய்வுகளின் மூலம் திரட்டப்பட்டபுள்ளிவிவரங்கள் நம்பகமானவை மற்றும் துல்லியமானவை என்பதற்குச் சான்று பகர்கிறது.

தற்போதைய நடைமுறை உண்மைகளை புறக்கணித்துவிட்டு, முஸ்லிம்களிடையேயுள்ள பல்வேறு தொகுதிகள் அல்லது பிரிவுகளைக் கருத்திற் கொள்ளாமல், முஸ்லிம்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரென அறிவிப்பது குழுவின் ஆய்வு வரம்பிற்கு அப்பாற்பட்ட செயலாகும்.

பத்தான், காக்கா (குறியீட்டெண்கள் 806, 807)ஆகிய இரு பிரிவினரும் தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. அவர்கள் முற்பட்ட வகுப்பினரின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். அனைத்து மதங்களையும் சேர்ந்த, தற்போது முற்பட்ட சாதிகள்/வகுப்பினரின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளவர்களைப் பொறுத்தவரையில், தங்களைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரென அறிவிக்க வேண்டும் என்று கேட்டவர்களின் கோரிக்கைகள் மட்டுமே பரிசிலிக்கப்பட்டன. இவ்விரு பிரிவினரும் அவ்வாறு கோரிக்கை எதையும் வைக்கவில்லை. எனவே, அவர்கள் தொடர்ந்து முற்பட்ட வகுப்பினர் பட்டியலில் இடம் பெறுவர். முஸ்லிம்களின் மற்ற இரு பிரிவுகளான ஷேக், அன்சார் (குறியீட்டெண்கள் முறையே 809, 812) ஆகியன தங்களைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரென அறிவிக்க வேண்டுமென்று கோரினர். அதுபற்றிப் பரிசிலித்த பின்னர் குழு அவ்விரு பிரிவினரையும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்த்துள்ளது.

சமூக மற்றும் கல்வி ரீதியான பிற்பட்ட நிலைகளைத் தீர்மானிக்க மாநிலச் சராசரியை வரையறைப் புள்ளியாகக் கொள்ள வேண்டுமென லெ உறுப்பினர்கள் விரும்புகிறார்கள். மாநிலச் சராசரி அளவில் 90 சதவீதத்தையும் மாநிலச் சராசரி அளவையும் வரையறைப் புள்ளிகளாகக் கொண்டு தனித்தனி அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. முடிவாக மாநிலச் சராசரியை வரையறைப் புள்ளியாகக் கொண்டால்பயை (மரைக்காயர், ராவுத்தர் உட்பட) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலின் கீழ் இடம் பெறும். குழு உறுப்பினர்களிடையே கருத்தொற்றுமை இல்லாத காரணத்தால், பிற்பட்ட நிலைக்கான வரையறைப் புள்ளியை முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு மாநில அரசின் முடிவுக்கே விட்டப்படுகிறது.

அறிக்கையின் அத்தியாயம் 10இல் ஏற்கனவே விவரிக்கப்பட்டவாறு, முதுநிலை வழக்குரைஞர் திரு. அப்துல் கரீம் அவர்களும் முஸ்லீம் கல்வி நிலையங்கள் மற்றும் சங்கங்களும் வைத்த கோரிக்கைகளில் பல, இக் குழுவின் ஆய்வு வரம்பிற்கு அப்பாற்பட்டனவை. எனவே, இக்குழு அவற்றைப் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளவில்லை.

1985ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 18, 19 ஆகிய நாட்களில் நடைபெற்ற தமிழ்நாடு பிற்பட்டோர் நலக்குழு கூட்டத்தின் திகழ்ச்சிக் குறிப்பும் வரையறுத்த படிவத்தில் உறுப்பினர்கள் பதிவு செய்த கருத்துக்களும்

இணைப்பு—II

இணைப்பு

கூட்டம் நடைபெற்ற நாள் : 18–2–1985

பொருள் : இட ஒதுக்கீட்டுக்கு வரம்பு.

உறுப்பினர்களின் பெயர்.	கருத்து.	கையொப்பம்.
திருவாளர்கள்—		
2. ஜி. விஸ்வநாதன் ..	பிற்படுத்தப்பட்ட மக்கட் தொகைக்கு சமமாக.	(ஒம்.) திரு. ஜி, விஸ்வ நாதன்.
3. வி. வி. சுவாமிநாதன், எம். எல்.ஏ.	பிற்படுத்தப்பட்ட மக்கள் தொகை 67 சதவீதம், தமிழ் நாட்டில் முதன் முதல் 50 சத வீதம் கொண்டு வந்த எம். ஜி. ஆர். அரசை பாராட்டுவதுடன் அரசு இறுதி முடிவு எடுக்கும் வரை 50 சதவிகிதம் தொடர வேண்டும்.	(ஒம்.) திரு. வி.வி.விஸ்வ நாதன் (தமிழில்).
4. எஸ். ஆண்டித் தேவர்	வரவில்லை	
5. ப. நெடுமாறன்	பதவி விலகல் கடிதம் கொடுத் துள்ளார். கூட்டத்திற்கு வர வில்லை.	
6. அன்பில் தர்மலிங்கம்.	பிற்படுத்தப்பட்டவர் மக்கட் தொகை சதவீதம் 67.	(ஒம்.) திரு. அன்பில் தர்மலிங்கம் (தமிழில்).
7. குமரி அனந்தன்	பிற்படுத்தப்பட்ட மக்கட் தொகைக்குச் சமமான சத வீதம்.	(ஒம்.) திரு. குமரி அனந்தன் (தமிழில்).
8. எம். ஜான் வின்சென்ட்	தற்போதைய பிற்பட்ட மக்கட் பட்டியல் தொடர்ந்து இருக் கின்ற நிலையில் அதே வீதம்.	(ஒம்.) திரு. எம். ஜான் வின்சென்ட்.
9. கே. லியாக்கத் அலிகான்.	வரவில்லை	
10. டாக்டர் கோ. சமரசம், எம். எல். ஏ.	பிற்படுத்தப்பட்டோர் மக்கட் தொகைக்குச் சமமாக 67 சதவீதம்.	(ஒம்.) டாக்டர் கோ. சமரசம் (தமிழில்).
11. திருமதி சௌந்தரா கைலாசம்.	67 சதவீதம் ..	(ஒம்.) திருமதி சௌந் தரா கைலாசம்.
12. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரிப்.	வரவில்லை.	
13. ஜி. மூர்த்தி ..	பிற்படுத்தப்பட்ட மக்களின் சதவிகிதத்திற்கு சமமான சலுகைகள் வழங்க வேண்டும்.	(ஒம்.) ஜி. மூர்த்தி. 18–2–1985.
14. எஸ். கோபாலகிருஷ்ண யாதவ்.	வரவில்லை.	
15. குழ. செல்லையா ..	67 சதவீதம் தற்போது கணக் கெடுத்ததில் உள்ள பிற் படுத்தப்பட்ட மக்களின் சதவீதத்திற்குச் சமமாகச் சலுகை வழங்க வேண்டும்.	(ஒம்.) குழ. செல்லையா (தமிழில்).

உறுப்பினர் பெயர்.	கருத்து.	கையொப்பம்.
(1)	(2)	(3)
16. டி. இராசாமி, எம்.எல்.ஏ.	67 சத விதம் ..	(ஒம்.) டி. இராமசாமி.
17. ஐ. டி. ஜவஹர்ராஜ்	தற்போதைய பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் பட்டியல் தொடர்ந்து இருக்குமாயின் தற்போதைய பிற்படுத்தப் பட்ட வகுப்பினரின் மக்கட் தொகைக்குச் சமமான தொரு அளவு.	(ஒம்.) ஐ. டி. ஜவஹர் ராஜ்.
18. எம். கே. பாலசுப்பிர மணியம், இ.அ. ப. (ஓய்வு.)	பிற்படுத்தப்பட்ட மக்கட் தொகை சத வீத அளவிற்கு ஏற்ப இட ஒதுக்கீடு இருக்க வேண்டும். இது குறித்து அரசு முடிவு எடுக்கும் வரை தற்போதைய 50 சத வீத இட ஒதுக்கீடே தொடர்ந்து இருக்க வேண்டும்.	(ஒம்.) எம். கே. பால சுப்ரமணியம், 18-2-85.
19. எஸ். கே. பாலகிருஷ் ணன்.	67 சத வீத பிற்படுத்தப்பட்ட மக்கள் தொகைக்குச் சமம்.	(ஒம்.) எஸ். கே. பால கிருஷ்ணன் (தமிழில்).
20. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறை இயக்குநர் (உறுப்பினர்-செயலா ளர்).	இவர்கள் அரசு அலுவலர்களா கையால் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.	
21. இணைச் செயலாளர், சட்டத் துறை, கூடுதல் உறுப்பினர்-செயலாளர்.	ஷி	

என் முன் விலையில் பதிவு செய்யப்பட்டது.

(ஒம்.)

(ஜெ. அ. அம்பாசங்கர்),
தலைவர்.
18-2-1985.

(உண்மை நகல்)

இணைப்பு

கூட்ட நாள் : 18-2-1985

பொருள் : மாநில சராசரி அளவிலிருந்து வேறுபட்டிருக்க வேண்டிய அளவு.

உறுப்பினர் பெயர்.	கருத்து.	கையொப்பம்.
(1)	(2)	(3)
2. ஜி. விஸ்வநாதன்	தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலை அப் படியே வைத்திருக்க ஏதுவா னதொரு மாநிலச் சராசரி அல்லது யாதொரு சத விதம்.	(ஒம்.) திரு. ஜி. விஸ்வ நாதன்.
3. வி.வி. சுவாமிநாதன், எம். எல். ஏ.	தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலை இயன்ற வரையில் அப்படியே வைத்திருக்க ஏதுவாக மாநிலச் சராசரி அல்லது 10 சத விதத்திற்குக் குறைவு.	(ஒம்) திரு. வி. வி. சுவாமிநாதன் (தமிழில்).
4. எஸ். ஆண்டித் தேவர்.	வரவில்லை.	

உறுப்பினர் பெயர்.	கருத்து.	கையொப்பம்.
5. ப. நெடுமாறன் ..	விலகல் கடிதம் கொடுத்து விட்டார். கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை.	
6. அன்பில் தர்மலிங்கம்.	பிற்பகல் கூட்டத்திற்கு வரவில்லை.	
7. குமரி அனந்தன் ..	மாநிலச் சாரசரியே வரையறைப் புள்ளி.	(ஒம்.) திரு. குமரி அனந்தன் (தமிழில்).
8. எம். ஜான் வின்சென்ட்.	மாநிலச் சராசரியே வரையறைப் புள்ளி.	(ஒம்.) திரு. எம். ஜான் வின்சென்ட்.
9. கே. லியாகத் அலிகான்.	வரவில்லை.	
10. டாக்டர் கோ. சமரசம், எம்.எம்.ஏ.	தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலை இயன்ற வரையில் அப்படியே வைத்திருக்க இயலும் வகையில் மாநில சராசரி அல்லது 10 சத வீதத்திற்குக் குறைவு.	(ஒம்.) டாக்டர் கோ. சமரசம் (தமிழில்).
11. திருமதி சௌந்தரா கைலாசம்.	மாநில சராசரியைவிட 10 சத விகிதம் அதிகம் அல்லது 10 சத விகிதம் குறைவு.	(ஒம்.) திருமதி சௌந்தரா கைலாசம்.
12. கே. எஸ். ஜி. ஹாஜா செரிப்.	வரவில்லை.	
13. ஜி. மூர்த்தி ..	தற்போதைய பட்டியலை அப்படியே வைத்திருக்க ஏதுவான மாநில சராசரி அல்லது யாதொரு சத வீதம்; இந்து மதத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட சாதியினர் மதம் மாறியிருந்தாலும், அரசுச் சலுகைகளின் காரியங்களுக்காக அவர்களையும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினராகவே கருத வேண்டும்.	(ஒம்.) ஜி. மூர்த்தி.
14. எஸ். கோபாலகிருஷ்ணையாதவ்.	வரவில்லை.	
15. குழ. செல்லையா ..	பிற்படுத்தப்பட்ட மக்கள் நன்மையைக் கருதி தலைவர் எடுக்கும் முடிவை ஏற்கிறேன்.	(ஒம்.) திரு. குழ. செல்லையா (தமிழில்).
16. டி. இராமசாமி, எம்.எல்.ஏ.	மாநில சராசரியைவிட 10 சத வீதம் அல்லது 10 சத வீதம் குறைவு.	(ஒம்.) திரு. துரைசாமி இராமசாமி.
17. ஐ.டி. ஜவஹர் ராஜ்,	வரைறைப் புள்ளி மாநில சராசரி.	(ஒம்.) திரு. ஐ.டி. ஜவஹர் ராஜ்.
18. எம். கே. பாலசுப்பிரமணியம், இ.ஆ.ப. (ஓய்வு).	ஒடி	(ஒம்.) திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், 18–2–85.
19. எஸ். கே. பாலகிருஷ்ணன்.	தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலை அப்படியே வைத்திருக்க ஏதுவானதொரு மாநில சராசரி அல்லது யாதொரு சத வீதம்.	(ஒம்.) திரு. எஸ். கே. பாலகிருஷ்ணன் (தமிழில்).

உறுப்பினர் பெயர்.	கருத்து.	கையொப்பம்.
20. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறை இயக்குநர் (உறுப்பினர்-செயலாளர்).	அரசு அலுவலர்கள் ஆகையால் கருத்து எதுவும் தெரிவிக்க வில்லை.	
21. இணைச் செயலாளர், சட்டத் துறை (கூடுதல் உறுப்பினர் செயலாளர்).	ஷி	

என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்.)
(ஜே. அ. அம்பாசங்கர்), தலைவர், 18–2–85.

(உண்மை நகல்)

இணைப்பு.

கூட்ட நாள் : 18–2–1985

பொருள் : பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு.

உறுப்பினர் பெயர். (1)	கருத்து. (2)	கையொப்பம். (3)
திருவாளர்கள்—		
2. ஜி. விஸ்வநாதன் ..	பிற்பட்ட நிலைவாரி தனித் தனி இட ஒதுக்கீடு கூடாது. 15(4), 16(4) ஆகிய இரு பிரிவு களுக்கும் ஒரே பட்டியல் போதுமானது.	(ஒம்.) ஜி. விஸ்வநாதன்.
3. வி. வி. சுவாமிநாதன், எம்.எல்.ஏ.	பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் களுக்கு ஒரே பட்டியல் இருக்க வேண்டும். பிற்பட்ட நிலை வாரி தனித்தனி இட ஒதுக் கீடு எதுவும் கூடாது.	(ஒம்.) வி. வி. சுவாமி நாதன் (தமிழில்).
4. எஸ். ஆண்டி தேவர்	வரவில்லை.	
5. ப. நெடுமாறன் ..	விலகல் கடிதம் கொடுத்து விட்டார். கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை.	
6. அன்பில் தர்மலிங்கம்	வரவில்லை.	
7. குமரி அனந்தன் ..	ஒரே பட்டியல் தேவை ..	(ஒம்.) குமரி அனந்தன். (தமிழில்).
8. எம். ஜான் வின்சென்ட்.	தேவையில்லை ..	(ஒம்.) ஜான் வின்சென்ட
9. கே. லியாகத் அலிகான்.	வரவில்லை.	
10. டாக்டர் கோ. சமரசம், எம்.எல்.ஏ.		
11. திருமதி சௌந்தரா கைலாசம்.	தேவையில்லை.	(ஒம்.) சௌந்தரா கைலாசம்.
12. கே. எஸ்.ஜி. ஹாஜா செரிப்.	வரவில்லை.	

உறுப்பினர் பெயர்.	கருத்து.	கையொப்பம்.
13. ஜி. மூர்த்தி	பிற்பட்ட மக்களை பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் பட்டியலில், பிற்படுத்தப்பட்ட வகுப்பி னருக்கான மதிப்பீட்டுடன் சேர்த்தல் அவசியம்.	(ஒம்.) ஜி. மூர்த்தி.
14. எஸ். கோபாலகிருஷ்ண யாதவ்.	வரவில்லை.	
15. குழ. செல்லையா ..	பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு கூடாது.	(ஒம்.) குழ. செல்லையா (தமிழில்).
16. டி. இராமசாமி, எம். எல். ஏ.	தேவையில்லை.	(ஒம்.) டி. இராமசாமி.
17. ஐ. டி. ஜவஹர்ராஜ்.	தேவையில்லை	(ஒம்.) ஐ. டி. ஜவஹர்ராஜ்.
18. எம். கே. பாலசுப்பிர மணியம், இ.ஆ.ப.ஒய்வு.	தேவையில்லை	(ஒம்.) எம். கே. பால சுப்பிரமணியம்.
19. எஸ்.கே.பாலகிருஷ்ணன்	பிற்பட்ட நிலைவாரி தனித் தனி இட ஒதுக்கீடு அவசிய மில்லை.	(ஒம்.) எஸ். கே. பால கிருஷ்ணன் (தமிழில்).
20. பிற்படுத்தப்பட்ட வகுப் பினர் நலத் துறை இயக்குநர், உறுப் பினர்-செயலாளர்.	இவர்கள் அரசு அலுவலர்களா கையால் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.	
21. இணை செயலாளர், சட்டத் துறை, கூடுதல் உறுப்பினர்-செயலாளர்.	ஒடி	

என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது.
(ஒம்.) ஜெ. அ. அம்பாசங்கர், தலைவர். 18–2–1985.

(உண்மை நகல்)

இணைப்பு.

கூட்ட நாள் : 19–2–1985

பொருள் : அரசியலமைப்புச் சட்டத்தின் 16 (4)ஆம் பிரிவின்கீழ் தனிப் பட்டியல் தயாரித்தல்.

உறுப்பினர் பெயர்.	கருத்து.	கையொப்பம்.
திருவாளர்கள் :		
2. ஜி. விஸ்வநாதன் ..	15 (4), 16 (4)-ஆகிய இரு பிரிவு களுக்கும் ஒரு பொதுவான பட்டியல் போதுமானது.	(ஒம்) திரு. ஜி. விஸ்வ நாதன்.
3. வி. வி. சுவாமிநாதன், எம். எல்.ஏ.	16 (4)-ஆம் பிரிவின்கீழ் தனி பட்டி யல் அவசியமில்லை. அவசியம் என்று கருதப்படுமாயின், 15 (4)-ஆம் பிரிவின் கீழான பட்டியலையே 16 (4)-ஆம் பிரி வின்கீழான பட்டியலாகவும் கொடுக்கலாம்.	(ஒம்.) வி. வி. சுவாமி நாதன் (தமிழில்).

உறுப்பினர் பெயர்.	கருத்து.	கையொப்பம்.
4. எஸ். ஆண்டித் தேவர்.	வரவில்லை.	
5. ப. நெடுமாறன்	விலகல் கடிதம் கொடுத்து விட்டார். கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை.	
6. அன்பில் தர்மலிங்கம்.	வரவில்லை.	
7. குமரி அனந்தன் ..	ஒரு பொதுவான பட்டியல் போதுமானது.	(ஒம்.) குமரி அனந்தன், (தமிழில்).
8. எம். ஜான் வின்சென்ட்.	15 (4), 16 (4) ஆகிய பிரிவுகளுக்கு ஒரு பொதுவான பட்டியல் போதுமானது.	(ஒம்.) திரு. எம். ஜான் வின்சென்ட்.
9. கே. லியாகத் அலிகான்.	வரவில்லை.	
10. டாக்டர் கோ. சமரசம், எம். எல். ஏ.	15 (4), 16 (4) பிரிவுகளுக்கும் பொதுவான பட்டியலே போதுமானது.	
11. திருமதி சௌந்தரா கைலாசம்.	15 (4), 16 (4) பிரிவுகளுக்குப் பொதுவான பட்டியலே போதுமானது.	(ஒம்.) திருமதி சௌந்தரா கைலாசம்.
12. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரிப்.	வரவில்லை.	
13. ஜி. மூர்த்தி ..	வரவில்லை.	
14. எஸ். கோபால கிருஷ்ணயாதவ்.	வரவில்லை.	
15. குழ. செல்லையா ..	15 (4), 16 (4) ஆகியவற்றிற்குப் பொதுவான பட்டியலே போதுமானது.	(ஒம்.) திரு. குழ. செல்லையா (தமிழில்)
16. டி. இராமசாமி, எம். எல். ஏ.	கருத்து தெரிவிக்கவில்லை.	
17. ஐ. டி. ஜவஹர் ராஜ்	கருத்து தெரிவிக்கவில்லை.	
18. எம். கே. பாலசுப்ரமணியம், இ.ஆ.ப. (ஓய்வு).	தனித் தனியாக இரண்டு பட்டியல் அவசியமில்லை. நான் தெரிவித்தபடி பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் அரசுப் பணியில் போதிய அளவிற்கு இடம் பெறவில்லை. 16 (4) ஆம் பிரிவிற்கும் அதே பட்டியலை அனுப்பலாம்.	(ஒம்.) திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், 19—2—1985
19. எஸ். கோ. பாலகிருஷ்ணன்.	15 (4), 16 (4) ஆகிய இரு பிரிவுகளுக்கும் பொதுவான பட்டியலே போதுமானது.	(ஒம்.) திரு. எஸ். கே. பால கிருஷ்ணன் (தமிழில்).
20. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறை இயக்குநர் (உறுப்பினர்-செயலாளர்).	இவர்கள் அரசு அலுவலர்களை கையால் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.	
21. இணை செயலாளர், சட்டத் துறை (கூடுதல் உறுப்பினர்-செயலாளர்).		

என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது.

(ஒம்.) ஜெ. அ. அம்பாசங்கர், தலைவர், 19-2-85.

(உண்மை நகல்.)

1985ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18ஆம் நாள் நடைபெற்ற கூட்டத்தின் விவாதப் பிரிவு :

பொருள் 1: குழுவின் வரைவு இறுதி அறிக்கை மற்றும் பரிந்துரைகள்.

பொருள் 2 : குழுவின் பல்வேறு அங்கத்தினர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதங்களும் அவை மீதான விளக்கக் குறிப்புகளும்.

குழுத் தலைவரின் முன்னுரையோடு கூட்டம் தொடங்கியது. கடந்த இரண்டு ஆண்டுகளில், குழு, 30வது முறையாகக் கூடுகிறதென தலைவர் குறிப்பிட்டார். இக் கூட்டங்கள் எல்லாவற்றிலுமே, இது வரை பரிலவனைக்கு வைக்கப்பட்ட பொருள்கள் குறித்து முழுமையாகவும், மனந் திறந்தும் விவாதித்து, மாற்றுக் கருத்து எதுவுமே இல்லாமல் அவை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் இது காறும் காட்டி வந்த கருத்தொற்றுமையையும் சுமுகமான தன்மையையும் அன்றும், அவ்வியமானால் அதற்கு மறுநாளும் நடைபெறவிருக்கின்ற கூட்டங்களிலும், பேணிக் காக்கவேண்டுமென தலைவர் கேட்டுக் கொண்டார். உறுப்பினர்களிடையே கருத்து வேற்றுமை எழுவது சாத்தியமே. இருப்பினும், இந்த வேறுபாட்டை இடை நிரப்பி, இடைவெளியைக் குறைத்து ஏற்புடைய தீர்வுகளைக் காண வேண்டியது மிக அவசியம்.

உறுப்பினர்கள் 30 நாட்களுக்கும் மேலாக, அனைத்து மாவட்ட மையங்களுக்கும் சுற்றுப் பயணம் சென்று, 2,000க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் மற்றும் தனி நபர்களை விசாரித்து அவர்களின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்தனர் என்று தலைவர் குறிப்பிட்டார். இரண்டு கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. மதுரையில் நடைபெற்ற கருத்தரங்கில், பல்வேறு துறைகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் வல்லுநர்களும் கூடி, பிற்பட்ட நிலையைக் கண்டறிவது எப்படி என்றும் துரதிட்டம் பிடித்த பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை எவ்வாறு மேம்படுத்துவது என்பது பற்றியும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். இவ் விவாதம், மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

இக்குழு, தான் மேற்கொண்ட மிகப் பெரிய, நுணுக்கமான பணியில், பல சட்டப் பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. இப் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு கண்டு தெளிவு பெறுவதற்காக, ஆற்றலும் புலமையும் நிரம்பிய, ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி மாண்புமிகு திரு. ராமபிரசாத ராவ் தலைமையில் சென்னையில் ஒரு சட்டக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இக் கருத்தரங்கில், சட்டத்தில் துறை போய வழக்குரைஞர்கள் பலர் ஆய்வுக் கட்டுரைகள் அளித்தனர். அக் கட்டுரைகளில் அவர்கள், தங்களின் வெளிப்படையான, ஆழ்ந்த கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். குழு உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட அநேக ஐயப்பாடுகளைப் போக்க, இக் கருத்தரங்கு பெரிதும் உதவியது.

குழு மேற்கொண்ட இப் பணி ஒரு மாபெரும் பணி என்பதையும் அது முடிவுறும் தருவாயில் உள்ளது என்பதையும் குழு உறுப்பினர்கள் நன்கு அறிவர். தமிழ்நாடு முழுவதிலுமுள்ள 500 இலட்சம் குடிமக்களைப் பற்றி ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. மாநில அரசு மற்றும் உள்ளாட்சி மன்றங்களைச் சேர்ந்த 25,000க்கும் மேற்பட்ட பணியாளர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு இப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மத்திய அரசு நடத்திய ஆய்வில் திரட்டப்பட்டதைக் காட்டிலும் அதிகமான புள்ளி விவரங்கள் இந்த கணக்கெடுப்பில் திரட்டப்பட்டன. மக்கட் தொகைப் புள்ளி விவரங்களையும் சுமார் 5 கோடி மக்களின் கல்வி நிலை பற்றிய முழுமையான புள்ளி விவரங்களையும் நாம் திரட்டியுள்ளோம். இவ்வாறு திரட்டிய புள்ளி விவரங்களை மிகக் குறுகியதொரு காலத்திற்குள் கணக்கிட்டுப் பொறி மூலமாக அட்டவணையிட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சமூக ரீதியான பிற்பட்ட நிலையைத் தீர்மானிப்பதற்காக, எதேச்சை மாதிரி முறை ஆய்வின் மூலமாக, மாநிலத்திலுள்ள சுமார் 1 இலட்சம் குடும்பங்கள் பற்றி விரிவான தகவல்கள் திரட்டப்பட்டன. இது மாநிலம் முழுவதிலுமுள்ள குடும்பங்களில் சுமார் 1 சதவீதமாகும். மாதிரி ஆய்வு சம்பந்தப்பட்ட, கணக்கீட்டு பொறியின் மூலம் அட்டவணையிடப்பட்ட புள்ளிவிவரங்களும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன.

மாநில அரசுத் துறைகள், உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களைச் சேர்ந்த 8.5 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களின் வேலையின் தன்மை, அவர்கள் வாங்கும் சம்பளம், கல்வித் தகுதி, சாதி ஆகியன பற்றிய முழுமையான விவரங்கள் திரட்டப்பட்டன. இந்த ஆய்வு சம்பந்தப்பட்ட அட்டவணைகளும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவை தவிர, அவ்வப்போது பல தனிப்பட்ட ஆய்வுகளும் நடத்தப்பட்டன. சுமார் 2,000 பள்ளிகள் தம் மாணவர்களின் நிலைபற்றிய புள்ளி விவரங்களை அனுப்பியிருந்தன. மாநிலத்திலுள்ள 232 கல்லூரி முதல்வர்கள் தத்தம் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் நிலை பற்றிய புள்ளி விவரங்களை அனுப்பியிருந்தனர். மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, சட்டக் கல்லூரி மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரி போன்ற தொழில் கல்லூரிகளில்

கடந்த மூன்று ஆண்டுகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள் பற்றிய விவரங்களும் திரட்டப்பட்டன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு மூலமாக பல்வேறு பணிகளுக்குச் செய்யப்பட்ட ஆட் தேர்வு பற்றிய புள்ளி விவரங்களும் திரட்டப் பட்டு ஆய்வு செய்யப்பட்டன. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறை மூலமாக நிறைவேற்றப்பட்ட நல்வாழ்வு நடவடிக்கைகளின் பயன்கள் குறித்து விரிவாக ஆராயப் பட்டது.

உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ஏராளமான அட்டவணைகளை மேலோட்ட மாகப் பார்த்தாலே, சமூக மற்றும் கல்வி நிலைகள் பற்றி விரிவான தகவல் திரட்டப் பட்டிருப்பது தெரிய வரும்.

இவ்வாறு திரட்டப்பட்ட மலையொத்த புள்ளி விவரங்கள், 2000–ஆம் மேற்பட்ட பிரதிநிதிகளிடமிருந்து பதிவு செய்த வாக்குமூலங்கள், இரண்டு கருத்தரங்குகளில் முன் வைக்கப்பட்ட வாதப் பிரதிவாதங்கள் ஆகியவற்றையெல்லாம் ஆதாரமாகக் கொண்டு வரைவுப் பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன. உறுப்பினர்கள் இப்பரிந்துரைகள் பற்றிய தங்களின் கருத்துக்களை ஒளிவு மறைவின்றி தாராளமாகத் தெரிவிக்கலாம் என்றும் கருத்து வேறுபாடுகள் இருந்தால் அவற்றை இணக்கமாகப் பேசித் தீர்த்து அறிவுப் பூர்வமான முடிவுகள் எடுக்கலாம் என்றும் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதுவரை நடைபெற்ற குழுவின் எல்லாக் கூட்டங்களிலுமே எல்லா முடிவுகளும் ஏகமனதாகவே எடுக்கப்பட்டன, ஆனால், நான்கு தலைப்புகள் குறித்து உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு நிலவியது. அவையாவன : (1) இட ஒதுக்கீட்டுக்கு வரம்பு ; பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான தற்போதைய 50 சதவீத இட ஒதுக்கீடு தொடர்ந்து நீடிக்க வேண்டுமா ? அல்லது அதிகரிக்கப்பட வேண்டுமா ? அல்லது 32 சதவீதமாகக் குறைக்கப்பட வேண்டுமா ?

(2) மாநில சராசரியிலிருந்து வேறுபட்டிருக்க வேண்டிய அளவு ; பாலாஜி வழக்கிலும் மண்டல் குழு அறிக்கையிலும் வகுத்தளிக்கப்பட்ட அளவுகோல்களை அலசி ஆராய்ந்த பின்னர், இக்குழு, மாநிலச் சராசரியிலிருந்து 10 சதவீதம் வேறு பாட்டை வரையறுப்புள்ளியாகக் கொள்வதெனத் தற்காலிகமாக முடிவு செய்தது. இந்த அடிப்படையில் எல்லா அட்டவணைகளும் தயாரித்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன.

(3) பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு; (4) அரசியலைப்புச் சட்டத்தின் 15(4), 16(4) பிரிவுகளுக்காக ஒரே அல்லது தனித்தனிப் பட்டியல்கள் தயாரித்தல் இந்நான்கு தலைப்புகளும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இட ஒதுக்கீட்டுக்கு வரம்பு. —பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு, அவர்களின் மக்கட் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப 67 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்றும் எக்காரணத்தைக் கொண்டும் இந்த இட ஒதுக்கீடு 50 சதவீதத்திற்குக் குறையக் கூடாது என்றும் உறுப்பினர் திரு. வி. வி. சாமிநாதன் தெரிவித்தார். இது ஏழை எளிய மக்கள் நீதி கேட்டு நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாத ஒரு விவகார மாகும். பண வசதி படைத்த சுயநலக்காரர்கள். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகளைக் குறைக்க வேண்டும் என எப்போதுமே நீண்ட நெடிய வாதத்தை எடுத்து வைப்பர். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அவர்களின் மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப 67 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க வேண்டுமெனக் குழு பரிந்துரைக்கவேண்டும்.

டாக்டர் கோ. சமரசம் அவர்கள், வி. வி. சுவாமிநாதனுடைய கூற்றை ஆதரித்த தோடு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலனைக் காப்பதில் தமிழ்நாடு எப்போதுமே முன்னணியில் இருந்து வந்திருக்கிறதெனவும் சுட்டிக் காட்டினார். பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுப்பதைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு, இந்தியாவின் இதர மாநிலங்களுக்கு முன்னோடியாக இருந்து வந்துள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பின ருக்கான இட ஒதுக்கீடு 67 சதவீதத்திற்குக் குறையக் கூடாது.

இந்த அறிக்கை, நீதிமன்றங்களில் விவாதிக்கப்படவிருக்கிறதென்றும் அதில் இந்திய அளவுகோல் பயன்படுத்தப்படும் என்றும் உறுப்பினர் திரு. இ-டி. இவஞ்ஞாராஜ் சுட்டிக் காட்டினார். எனவே, அதற்கேற்ப நமது முடிவுகளை வகுக்க வேண்டும். கிருத்துவ நாடார், கிருத்துவ சாணார், கிருத்துவ கிராமணி ஆகிய காதிகள் இரண்டாம் கட்ட ஆய்வில் தான் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே ஒரு வரம்பிற்குட்பட்ட ஆய்வின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படுமானால் அவர்களுக்குப் பாதகமாக அமையும். சென்னையிலோ அல்லது திருநெல்வேலியிலோ எடுக்கப்படும் மாதிரிகள், கிருத்துவ நாடார், சாணார், கிராமணி ஆகியோரின் உண்மையான நிலையை உணர்த்த மாட்டார். சாத்தான்குளத்திலோ, ராதாபுரத்திலோ எடுக்கப்படும் மாதிரிகள் தான் உண்மை நிலையை பிரதிபலிப்பனவாக அமையும். தனது குறைகளை எழுத்து மூலமாகத் தெரிவிக்குமாறு தலைவர் உறுப்பினரைக் கேட்டுக் கொண்டார்.

தலைவர் வரையறுக்கப்பட்ட **படிவத்தை** ஒவ்வொரு உறுப்பினருக்கும் **வழங்கி**, இட ஒதுக்கீட்டுக்கு வரம்பு என்பது பற்றிய தங்களின் கருத்துக்களை எழுத்து மூலமாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டார். அதன் நகல் இணைப்பு-I-ல் கொடுக்கப் பட்டுள்ளது.

மாநிலச் சராசரியிலிருந்து வேறுபட வேண்டிய அளவு :

தலைவர், அடுத்தபடியாக, ' மாநிலச் சராசரியிலிருந்து வேறுபட்டிருக்க வேண்டிய அளவை ' விவாதத்திற்கு எடுத்துக் கொண்டார். மாநிலச் சராசரியிலிருந்து 10 சதவீத வேறுபாட்டு அளவை, தற்காலிகமாக, வரையறைப் புள்ளியாகக் கொண்டு அட்டவணைகள் தயாரிக்கப்பட்டன. இது குறித்து உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை தாராளமாக எடுத்துரைக்கலாம் என்று தலைவர் கூறினார். நாகண கௌடா குழு தனால் அதன் அறிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டது என்ற விவரத்தையும் **தலைவர்** எடுத்துக் கூறினார்.

எக்காரணத்தைக் கொண்டும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் சலுகைகளை குறைக்கக் கூடாது என உறுப்பினர் திரு அன்பில் தர்மலிங்கம் கேட்டுக்கொண்டார்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடையே உள்ள முன்னேறிய சாதியினர் மேலும் மேலும் சலுகைகள் பெற்று முன்னேற்றமடைந்து வருகின்ற அதே நேரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள பிற்படுத்தப்பட்ட சாதிகள் தொடர்ந்து பின்தங்கிய நிலையிலேயே தேங்கியிருப்பதால் திட்டவட்டமான சில அளவுகோல்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று உறுப்பினர் திரு துரை இராமசாமி கூறினார்.

திருத்துவ நாடார்களை பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென உறுப்பினர் ஜி. விஸ்வநாதன் பரிந்துரைத்தார்.

தலைவர், வரையறுத்த படிவத்தை உறுப்பினர்களுக்கு வழங்கி தங்களின் கருத்தைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அதன் உண்மை நகல் இணைப்பு-II-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மதிய உணவுக்காக இடைவேளை விடப்பட்டது.

பிற்பகல் கூட்டம்.

பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு :

தலைவர், பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு சம்பந்தமாக அரசிடமிருந்து வரப் பெற்ற இரண்டு கடிதங்களைப் பற்றிக் குறிப்பிட்டு, பெரும்பான்மையான உறுப்பினர்களுக்கு பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு முறை ஏற்புடைத்தாயில்லை என்றும் சுட்டிக் காட்டினார்.

பெரும்பான்மை அல்லது சிறுபான்மை என்ற வினாவுக்கே இடமில்லை என்றும் எல்லா உறுப்பினர்களுமே பிற்பட்ட நிலைவாரி தனித்தனி இட ஒதுக்கீடு கூடாது என்று கூறுவதாகவும் உறுப்பினர் ஜி. விஸ்வநாதன் தெரிவித்தார்.

தலைவர், வரையறுக்கப்பட்ட படிவத்தை எல்லா உறுப்பினர்களுக்கும் வழங்கி **னார்.** உறுப்பினர்கள் தத்தம் கருத்துக்களை அதில் **பதிவு** செய்தனர். இப்படிவத்தின் உண்மை நகல் இணைப்பு-III-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

மாநிலச் சராசரி அளவையே பிற்பட்ட நிலையைத் தீர்மானிப்பதற்கான வரையறைப் புள்ளியாகக்கொள்ள வேண்டுமென அதற்கேற்ப அட்டவணைகள் திருத்தப்பட வேண்டுமென்றும், உறுப்பினர் திரு எம். கே. பாலசுப்பிரமணியம், இ. ஆ. ப. (ஓய்வு), தெரிவித்தார்.

இத்துடன் அன்றைய கூட்டம் நிறைவு பெற்றது.

19—2—1985 அன்று நடைபெற்ற கூட்டத்தின் விவாதப் பதிவு—

பொருள்.—*1* குழுவின் வரைவு இறுதி அறிக்கை மற்றும் பரிந்துரைகள்.

பொருள்.—*2* குழுவின் பல்வேறு அங்கத்தினர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதங்களும் அவை மீதான விளக்கக் குறிப்புகளும்.

1985 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் *18* ஆம் நாளன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாத, *15 (4)* பிரிவின் கீழ் இட ஒதுக்கீடு அளிப்பதற்கென ஒன்றும் *16 (4)* பிரிவின் கீழ் இப் பதவி ஒதுக்கீடு அளிப்பதற்கென பிரிதொன்றுமாகத் தனித்தனிப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல் தயாரிப்பது என்ற தலைப்பை தலைவர் முன்னுரைத்தார். உறுப்பினர்கள் தங்களின் கருத்துக்களைச் சுருங்கக் கூறி உறுப்பினர்களின் கருத்து ஒன்றுகூட விடுபட்டுப் போகாமல் அனைத்தும் உள்ளடக்கி அறிக்கை தயாரிக்க உதவவேண்டும் என்றும் தலைவர் கேட்டுக்கொண்டார்.

எல்லாச சாதிகளிலுமே, நகர்ப்புறத்தைச் சேர்ந்தவர்கள்தான் எப்போதுமே, *16 (4)* பிரிவின்கீழ் அளிக்கப்படும் இட ஒதுக்கீட்டுச் சலுகையின் பயன்களைப் பெறுகின்றனர் என்றும் கிராமப்புற மக்களை அவை சென்றடைவதில்லை என்றும் உறுப்பினர் ஜி. விஸ்வநாதன் தெரிவித்தார். ஒவ்வொரு சாதியிலும் சில குடும்பங்கள்தான் பயன் பெறுகின்றன என்பது உண்மையே. ஒவ்வொரு சாதியிலும் சிலரை மட்டும் தனியே பிரித்து அவர்களைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து நீக்குவது நல்லதல்ல ; ஏனெனில் அவ்வாறு செய்தால் அவர்கள் மீண்டும் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுவர் என்று மதுரையில் நடைபெற்ற கருத்தரங்குகளில் முடிவு செய்யப்பட்டது. இதற்கு மற்றொரு காரணமும் இருந்தது. நாம் நடத்திய விரிவான ஆய்வுகளில் திரட்டிய புள்ளி விவரங்களை ஆதாரமாகக் கொண்டு தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலை அறிவுப்பூர்வமாகவும் அறிவியல் முறையிலும் ஆய்வு செய்து வருகிறோம். வேலைவாய்ப்புக்கென தனியாக ஒரு பட்டியல் தயாரிப்பது பற்றி பரிசீலிக்காமல் மேலும் கொஞ்ச காலத்திற்கு இப் பட்டியலையே பயன்படுத்தவேண்டும். *15 (4)* பிரிவின் கீழ் அளிக்கப்படுகின்ற கல்வி வசதிகள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வேலைவாய்ப்புப் பெறுவதற்கான ஒரு வழிமுறையே. கல்வி வசதிகள் செய்து கொடுத்து விட்டு *16 (4)* பிரிவின்கீழ் வேலைவாய்ப்புப் பெறுவதில் உதவ மறுப்பது கொடுமை. எனவே, *15 (4), 16 (4)* ஆகிய இரண்டு பிரிவுகளுக்கும் சேர்த்து ஒரே பட்டியல் இருக்க வேண்டும் என அவர் பரிந்துரை செய்தார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் *15 (4), 16 (4)* ஆகிய இரண்டு பிரிவுகளுக்கும் சேர்த்து ஒரே பட்டியல் இருக்கவேண்டுமென நாம் பரிந்துரைத்தால் அது நீதி மன்றத்திற்குச் செல்லும்போது அடிப்பட்டுப் போகும் என்று உறுப்பினர் டாக்டர் கோ. சமரசம் சுட்டிக்காட்டினார். எனவே, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முற்பட்ட சாதியினருக்கு நிகராக வேலைவாய்ப்புப் பெறுகின்ற வரையில் அவர்களுக்கு *15 (4)* பிரிவின்கீழ் இட ஒதுக்கீட்டுச் சலுகை தொடர்ந்து அளிக்கப்பட வேண்டுமென்று நாம் சுட்டிக் காட்டல் வேண்டும். மொத்த மக்கட் தொகையில் *13* சத வீதமே உள்ள முற்பட்ட சாதியினர் உண்மையில் *27* சதவீத வேலை வாய்ப்புகளை அனுபவித்து வருகின்றனர். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் அதே அளவுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் வரையில் *16 (4)* பிரிவின் கீழ் அவர்களுக்குத் தொடர்ந்து இட ஒதுக்கீட்டுச் சலுகை அளிக்க வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தின் *15 (4), 16 (4)* ஆகிய இரண்டுக்குமாகச் சேர்த்து ஒரே ஒரு பட்டியல் மட்டுமே தயாரிக்கப்பட வேண்டுமென்ற தன்னுடைய கோரிக்கையை உறுப்பினர் திரு ஜி. விஸ்வநாதன் வலியுறுத்திக் கூறினார்.

குழுத் தலைவர், வரையறுக்கப்பட்ட படிவத்தை உறுப்பினர்களுக்குச் சுற்றறுப் பினார்; அப் படிவத்தில் உறுப்பினர்கள் தங்களின் கருத்துக்களை பதிவு செய்தனர். இதன் உண்மை நகலை இணைப்பு IV-ல் காணலாம்.

உறுப்பினர்களின் உணர்வுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டுமென உறுப்பினர் திரு குமரி அனந்தன் கேட்டுக் கொண்டார். புள்ளி விவரங்களை உறுப்பினர்களின் உணர்வுகளுக்கு அனுசரணையாக இல்லையாயின் அவற்றைச் சட்டை செய்ய வேண்டிய நிலையில்லை. வறட்டுப் புள்ளி விவரங்களை விட, மக்களோடு அன்றாடம் நேரடித் தொடர்பு கொண்டுள்ள உறுப்பினர்களால்தான் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் உண்மையான நிலையைப் பிரதிபலிக்க முடியும்.

அனைத்து உறுப்பினர்களின் கருத்தையும் அறிக்கையில் சேர்த்து அரசுக்கு அனுப்புவதாக தலைவர் தெரிவித்தார்.

அறிக்கை குழுத் தலைவரின் கருத்துக்களைப் பிரதிபலிக்குமாயின் உறுப்பினர்கள் அதில் கையொப்பமிடமாட்டார்கள் என உறுப்பினர் திரு ஜி. விஸ்வநாதன் தெரிவித்தார்.

புள்ளிவிவரங்களுக்கேற்ப தலைவர் அறிக்கையை எழுதக் கூடாது என்றும் உறுப்பினர்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும் என்றும் உறுப்பினர் டாக்டர் கோ. சமரசம் தெரிவித்தார்.

புள்ளி விவரங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் முடிவுகள் சரியானவையாக இருக்கமாட்டா என்றும் உறுப்பினர்களின் கருத்துக்களை ஆதரிக்கத் தான் புள்ளி விவரங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் உறுப்பினர் திரு I. D. ஜவஹர்ராஜ் கூறினார்.

ஒரே சாதியின் வெவ்வேறு பிரிவைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு குறியீட்டெண்களின்கீழ் கணக்கெடுக்கப்பட்டுள்ளனர் என்று (எடுத்துக்காட்டு, முத்திரையர்) உறுப்பினர் திரு குழ, செல்லையா சுட்டிக்காட்டினார்.

நமது நிலைக்கு ஆதாரமாக உள்ள புள்ளி விவரங்கள் மட்டுமே அறிக்கையில் சேர்க்கப்படவேண்டும் என்று உறுப்பினர் திரு எம். கே. பாலசுப்பிரமணியம் இ. ஆ. ப. (ஓய்வு) விருப்பம் தெரிவித்தார். பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக வகைப்படுத்தத் தேவையான மதிப்பெண்கள் பெறாத ஆனால், அவ்வாறு வகைப்படுத்தத் தகுதிபடைத்த சாதிகளுக்கு மிகை மதிப்பெண்கள் கொடுத்து அவ்வாறே சேர்க்க வேண்டும் (1) ஏற்கெனவே பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் உள்ள சாதிகள் யாவும் அப்படியே தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்றும் (2) முற்பட்ட சாதிகள் பிற்பட்டவையாக இருந்தால் அவற்றைச் சேர்க்க மறுப்பு இல்லை என்றும் தற்போதைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து எந்தவொரு சாதியும் எக்காரணத்தைக் கொண்டும் நீக்கப்படக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

எல்லா உறுப்பினர்களும் ஒரு மாதிரியாக முடிவு செய்து, தலைவர் அதற்கு மாறான ஒரு கருத்தைக் கொண்டிருப்பாரேயானால் அவ்வாறு நடப்பது அநேகமாக இந்தியா விலேயே இதுதான் முதல் நடவையாக இருக்கும் என்று உறுப்பினர் ஜி. விஸ்வநாதன் குறிப்பிட்டார்.

சட்டநாதன் குழு அறிக்கையில், இரண்டு உறுப்பினர்கள் தலைவரின் கருத்தை எதிர்த்து மாறுபாட்டுக் கருத்தைத் தெரிவித்துள்ளனர் என்று தலைவர், சுட்டிக்காட்டினார்.

தான் சட்டநாதன் அறிக்கையைப் பின்பற்ற விரும்பவில்லை என்றும் தலைவரின் கருத்து மற்ற உறுப்பினர்களின் கருத்திலிருந்து வேறுபடுவதால் அவர்தான் மாறுபாட்டுக் கருத்துக் குறிப்பு எழுதவேண்டும் என்றும் உறுப்பினர் திரு ஜி. விஸ்வநாதன் தெரிவித்தார்.

விவாதம் இப்போதுதான் முடிவடைந்திருப்பதால், அறிக்கையை மீண்டும் எழுதத் தொடங்க வேண்டும் என்று உறுப்பினர் டாக்டர் கோ. சமரசம் தெரிவித்தார்.

அறிக்கையில் பெரும்பான்மை உறுப்பினர்களின் கூட்டான கருத்து இடம் பெற வேண்டுமென உறுப்பினர் திரு வி. வி. சுவாமிநாதன் தெரிவித்தார்.

புள்ளி விவரங்கள் திரட்டப்பட்டவைதான் என்பதில் சந்தேகமில்லை; உறுப்பினர்கள் பொது மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர்; அதற்கேற்பத்தான் தலைவர் அறிக்கையை எழுதவேண்டும் என்று உறுப்பினர் டாக்டர் கோ. சமரசம் சுட்டிக் காட்டினார்.

உறுப்பினர்கள் ஒருமனதாக ஏற்பளித்த அத்தியாயங்கள்தான் வரைவு அறிக்கையில் இடம் பெற்றுள்ளன என்று தலைவர் குறிப்பிட்டார். மேலும், 3 அல்லது 4 தலைப்புகள் குறித்துத்தான் கருத்து வேறுபாடு தோன்றியுள்ளது; அவைபற்றி விவாதிக்கப்பட்டுள்ளது; உறுப்பினர்களின் கருத்துக்கள் நிச்சயமாக அறிக்கையில் இடம் பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சட்டத் துறையைக் கேட்டதில் பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்தே வெல்லும் என்று தெரிய வந்ததாகவும் எனவே, உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களை ஒட்டித்தான் அறிக்கை அமையவேண்டுமென உறுப்பினர் திரு ஜி. விஸ்வநாதன் சுட்டிக் காட்டினார்.

எவ்வெவற்றில் தலைவர், உறுப்பினர்களின் கருத்துக்களிலிருந்து வேறுபடுகிறார் என உறுப்பினர் திரு குமரி அனந்தன் விசாரித்தார்.

(1) இட ஒதுக்கீட்டுக்கு வரம்பு, (2) மாநிலச் சராசரியிலிருந்து வேறு பட்டிருக்க வேண்டிய அளவு, (3) பிற்பட்ட நிலையாரி தனித்தனி இட ஒதுக்கீடு, 15 (4) 16 (4), பிரிவுகளின் கீழ் தனித்தனிப் பட்டியல்கள் தயாரித்தல் ஆகிய நான்கு பொருள்களில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகத் தலைவர் குறிப்பிட்டார்.

நீதிபதி மோகனின் தீர்ப்பே முடிவான தென்றும் அதனை நுணுக்கமாக ஆய்வு செய்ய முடியாது என்றும் சட்டத் துறையின் இணைச் செயலர் தெரிவித்தார்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 67 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க வேண்டுமென உறுப்பினர் திரு ஜி. விஸ்வநாதன் மீண்டும் வலியுறுத்திக் கூறினார்.

அடுத்துப் பேசிய தலைவர், தான் உறுப்பினர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களின் கருத்துக்களைச் செவி மடுத்ததால், உறுப்பினர்களும் தான் சில கருத்துக்களை மனம்விட்டுக் கூற அனுமதிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். பிற்பட்ட நிலையாரி தனித்தனி இட ஒதுக்கீட்டைப் பொறுத்த வரையில், பெரும்பான்மையான உறுப்பினர்கள், அவ்விட ஒதுக்கீடு முறையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை அரசுக்குத் தெரியப்படுத்துவதாகக் கூறினார். மேலும், அம் முறை சட்டத்திற்குப் புறம்பானது என்றோ அல்லது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்றோ அல்லது இந்த இட ஒதுக்கீட்டு முறையினால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பயன்பெறப் போவதில்லை என்றோ அரசு கருதினால் உறுப்பினர்கள் தெரிவித்தபடியே அதனை கைவிட்டுவிடலாம் என்றும் கூறினார்.

திரு எம். கே. பாலசுப்பிரமணியம், இ. ஆ. ப (ஓய்வு), மாநிலச் சராசரியிலிருந்து 5 சத வீதம் வேறுபாட்டளவை வரையறைப் புள்ளியாகக் கொள்வதுதான் நல்ல தென்றும் மாநிலச் சராசரி அளவையே வரையறைப் புள்ளியாகக் கொண்டால் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிடும் என்றும் குறிப்பிட்டார். மூன்று மதிப்பெண்கள் வரை மிகை மதிப்பெண்கள் வழங்க குழுவுக்கு உரிமையுள்ளதென்று உறுதிப்படக் கூறிய அவர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்படத் தேவையான குறைந்த அளவு மதிப்பெண்கள் பெறாத சாதிகளின் நேர்வில் குழு இந்த உரிமையைச் செயற்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

புள்ளி விவர ஆதாரமில்லாத எந்த அறிக்கையுமே உச்ச நீதி மன்றத்தில் அடிபட்டுப் போகுமாகையால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தொடர்ந்து அப் பட்டியலில் இடம் பெறுவதற்கு மாற்றுவழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று உறுப்பினர் துரை இராமசாமி கருத்துத் தெரிவித்தார்.

தலைவரின் இறுதி அறிக்கை வரும்வரையில் உறுப்பினர்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும் என்று உறுப்பினர் திரு வி. வி. சுவாமிநாதன் தெரிவித்தார், இறுதி அறிக்கையில் கையொப்பமிடுவதற்காக 1985ஆம் ஆண்டு பிப்ருவரி திங்கள் 26ஆம் நாளன்று முற்பகல் 11.00 மணிக்கு எல்லா உறுப்பினர்களும் குழுவின் அலுவலகத்திற்கு வரவேண்டுமென தலைவர் கேட்டுக் கொண்டார்.

ித்துடன் விவாதம் நிறைவடைந்தது.

(ஒம்)
(ஜெ. அ. அம்பாசங்கர்) தலைவர்,
தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர்
நலக் குழு, சென்னை-18.

தமிழ்நாடு அரசு அச்சகம், சென்னை–600 079